33°/31°
பக்கங்கள் 34

# உதயன்

■ பதிப்பு: யாழ்
■ விலை: ரூபா 25
■ சுடர் 28
■ கதிர் 135
■ வள்ளுவர் ஆண்டு 2044
■ பங்குனி 28, புதன் 10.04.2013

UTHAYAN - A Lively National Tamil Daily
Website: www.onlineuthayan.com

- வெள்ளைப்புற்றடி
அருள்மிகு ஸ்ரீ வீரகத்தி
விநாயகர் தேவஸ்தானம்
புதிய சித்திரத் தேர் வெள்ளோட்ட விழா
நாளை (11.04.2013) வியாழக்கிழமை
மு.ப. 10 மணிதொடக்கம் நண்பகல் 12
மணிவரை நடைபெறும்.
ஆலய பரிபாலன சபையினர்,
சித்திரத்தேர் திருப்பணி சபையினர்.

## முஸ்லிம்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துக

### அரசிடம் இரா.சம்பந்தன் வலியுறுத்தல்



கொழும்பு, ஏப்.10
முஸ்லிம்கள் மீது தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் தாக்குதல்களை நிறுத்தி அவர்களுக்கான பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் தலைவர் இரா சம்பந்தன் நேற்று நாடாளுமன்றில் அரசிடம் கோரிக்கை விடுத்தார்.

பள்ளிவாசல்களைத் தாக்குவது போன்ற மோசமான செயல்களில் பௌத்தர்கள் ஈடுபடக் கூடாது என்றும் அவர் கூறினார்.

முஸ்லிம்கள் மீது தற்போது

பார்க்க பக்கம் 04

# இடைக்கால அரசு சுயாட்சியுடன் தேவை

## இந்தியக் குழுவிடம் தமிழ் மக்கள் கோரிக்கை



யாழ்ப்பாணம்,ஏப்ரல் 10
இலங்கை அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தின் கீழ் தமிழ் மக்களுக்குத் தீர்வு எதுவும் கிடைக்காது என்பதால், நிரந்தரத் தீர்வு ஒன்றை எட்டும் வரைக்கும் சுயாட்சியுடன் கூடிய இடைக்கால மாகாண அரசு ஒன்று உடனடியாக ஏற்படுத்தப்பட வேண்டும் என்று இந்தியாவிடம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று யாழ்ப்பாணம் வந்திருந்தனர். இந்தியத்துணைத் தூதரகத்தில் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள், மன்னார் ஆயர், சிவில் சமூகப் பிரதிநிதிகள் ஆகியோ

பார்க்க பக்கம் 04

### மர்மமாக புதைக்கப்பட்ட சிசுவின் சடலம் மீட்பு

அச்சுவேலி,ஏப். 10
புத்தூர் மேற்கில் உயிரிழந்த 7 மாதக் குழந்தையின் சடலம் உரிய விசாரணைகளுக்கு உட்படுத்தப்படாமல் மயானத்தில் புதைக்கப்பட்டது. இது குறித்து தகவல் அறிந்த அச்சுவேலிப் பொலிஸார் சடலத்தை மீட்டு விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

புத்தூர் மேற்கைச் சேர்ந்த அன்ரன் ஜெனித்தாஸ் தனுஷன் (வயது- 07 மாதம்) என்ற குழந்தையின் சடலமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது.

பார்க்க பக்கம் 04

## இலங்கையில் போர் மீண்டும் வெடிக்கும்

■ அரசை எச்சரிக்கிறார் அமெரிக்கத் தூதுவர்

யாழ்ப்பாணம், ஏப்.10
"நல்லிணக்கம், பொறுப்புக் கூறல் ஆகிய விடயங்கள் சரியான முறையில் முன்னெடுத்துச் செல்லப்படவில்லையாயின், இலங்கையில் மீண்டும்

பார்க்க பக்கம் 04

## உதயனைத் தாக்கியோரை உடனடியாகத் தண்டியுங்கள்

■ இலங்கையிடம் கோருகிறது அமெரிக்கா

கொழும்பு,ஏப்.10
'உதயன்' மீதான தாக்குதல் சம்பவம் குறித்து முழுமையான விசாரணை நடத்திக் குற்றவாளிகளைத் தண்டிக்கவேண்டும் என்று நாம் இலங்கை அதிகாரிகளைக் கோருகிறோம் என்று

பார்க்க பக்கம் 04

## ஐ.நா. மனித உரிமைகள் சபையில் முன்னிலையாகவே மாட்டோம்

■ நாடாளுமன்றில் ஜி.எல். பீரிஸ்

கொழும்பு, ஏப். 10
ஜெனிவாத் தீர்மானத்தையும், இலங்கை அரசு ஆறு மாதங்களுக்கு ஒரு தடவை ஐ.நா. மனித உரிமைகள் சபையில் முன்னிலையாக வேண்டும் என்பதையும் இலங்கை அரசு அடியோடு நிராகரிக்கிறது என வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் நேற்று நாடாளுமன்றில் தெரிவித்தார்.

இவைகுறித்து எந்தவொரு நாட்டுடனும் பேசப் போவதில்லை என்று தெரிவித்த அமைச்சர், இத்தீர்மானம் பல நாடுகளிடையே பிளவை ஏற்படுத்தியுள்ளது என்றும் கூறினார்.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று இது தொடர்பில் சபையில் வெளியிட்ட அறிக்கைக்குப் பதிலளித்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

ஜெனிவா தீர்மானத்துக்கு எதிரான எமது கொள்கையில் மாற்றம் எதுவும் இல்லை. அந்தத் தீர்மானத்தை நாம் முற்றாக நிராகரிக்கின்றோம். ஆறு மாதங்

பார்க்க பக்கம் 04

### 'உதயன்' தாக்குதல் குறித்து எதுவும் கூறமுடியாது –ஐ.நா. பேச்சாளர்

நியூயோர்க்,ஏப். 10
'உதயன்' பத்திரிகை மீதான தாக்குதல் சம்பவம் தொடர்பில் தற்போதைய நிலையில் கருத்தெதனையும் கூறமுடியாதென ஐ.நா. செயலாளர் நாயகம் பான்கிமூனின் பேச்சாளர் கூறியுள்ளார்.

ஐ.நா. தலைமையகத்தில் நாளாந்த செய்தியாளர் சந்திப்பு நேற்று முன்தினம்

பார்க்க பக்கம் 04

ஊடகவியலாளர்களைப் பாதுகாக்க சுயாதீன ஆணைக்குழு அவசியம் 5

ஈழத்தமிழர் மீது திடீர் பாசம் 6

வெளிநாட்டினர் வெளியேறுங்கள்; அவசர எச்சரிக்கை விடுக்கிறது வடகொரியா 7

### ஐ.நா. தீர்மானம்: அரசின் நிலை என்ன?

கேட்கிறார் ரணில்

கொழும்பு, ஏப். 10
ஜெனிவாத் தீர்மானம் தொடர்பில் அரசு தனது நிலைப்பாட்டை மாற்றவுள்ளதா? அல்லது தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களித்த அமெரிக்கா, பிரிட்டன், இந்தியா ஆகிய நாடுகளுடன் பேச்சுகளை நடத்துமா?

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று நாடாளுமன்றில் விசேட அறிக்கையொன்றை வெளியிட்டு உரையாற்றியபோது மேற்படி கேள்விகளை எழுப்பினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜெனிவாத் தீர்மானம்

பார்க்க பக்கம் 04



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாத்தளை மனிதப் புதைகுழிக்கும் கோத்தபாயவுக்கும் தொடர்பில்லை

## லக்ஸ்மன் ஹுலுகல்ல கூறுகிறார்



சடலங்கள் புதைக்கப்பட்டதாகக் கூறப்படும் காலப்பகுதியில் மாத்தளை மாவட்ட இராணுவ இணைப்பதிகாரியாகக் கோத்தபாய ராஜபக்ஷ பணியாற்றியிருந்தார்.

கொழும்பு,ஏப் 10

மாத்தளையில் கண்டு பிடிக்கப்பட்ட பாரிய மனிதப் புதைகுழி விவகாரத்தில் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவையும், மூத்த இராணுவ அதிகாரிகளையும் சிக்க வைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக தேசிய பாதுகாப்பு ஊடகத் தகவல் நிலையத்தின் பணிப்பாளர் லக்ஸ்மன் ஹுலுகல்ல தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மாத்தளைப் புதைகுழி விவகாரத்தில் ஐ.தே.க, ஜே.வி.பி போன்ற எதிர்க்கட்சிகள் உள்நோக்கத்துடன் திடீரெனக் கரிசனை காட்ட ஆரம்பித்துள்ளன. இந்தப் புதைகுழியில் சடலங்கள் புதைக்கப்பட்டதாகக் கூறப்படும் காலப்பகுதியில் மாத்தளை மாவட்ட இராணுவ இணைப்பதிகாரியாகக் கோத்தபாய ராஜபக்ஷ பணியாற்றியிருந்தார்.

மாத்தளையில் அப்போது பணியாற்றிய உயர் இராணுவ அதிகாரிகளான மேஜர் ஜெனரல் கமால் குணரட்ண, மேஜர் ஜெனரல் சவீந்திர சில்வாவும் இவர்களால் இலக்கு வைக்கப்படுகின்றனர். புதைகுழி குறித்து விசாரணை நடத்த ஜே.வி.பியும் ஐ.தே.கவும் திடீரென அழுத்தம் கொடுப்பதற்கு இதுவே காரணம்.

எவ்வாறாயினும், ஜே.வி.பியும், ஐ.தே.கவும் ஒரு விரலை அரசின் மீது நீட்டும் போது, ஏனைய நான்கு விரல்களும் தம்மை நோக்கியே நீள்கின்றன என்பதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். இந்த விடயத்தில் எவரும் தற்போதைய அரசைக் குறை கூற முடியாது. ஏனென்றால், 1986-89 காலப்பகுதியில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சியில் இருக்கவில்லை. இந்தக் கொலைகளுக்கு ஜே.வி.பியும் ஐ.தே.கவுமே பொறுப்பு. இந்தக் கொலைகளுக்குப் பொறுப்பானவர்கள், தீவிரவாதத்தைத் தோற்கடித்த கோத்தாபய ராஜபக்ஷ, மேஜர் ஜெனரல் கமால் குணரட்ண, மேஜர் ஜெனரல் சவீந்திர சில்வா போன்றோரைச் சிக்க வைக்க முனைகின்றனர்-என்றார். (த)

# அமைச்சர் ஹக்கீமுக்கு பலஸ்தீனம் அழைப்பு

கொழும்பு,ஏப் 10

இலங்கைக்கு பயணம் மேற்கொண்டுள்ள பலஸ்தீன வக்பு மற்றும் சமய விவகார அமைச்சர் கலாநிதி மஹ்மூத் அல் ஹப்பாஷ், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நீதி அமைச்சருமான ரவூப் ஹக்கீமைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

இதன்போது, எதிர்வரும் ஜூன் மாதம் பலஸ்தீனத்தில் நடைபெறவுள்ள இஸ்லாமிய மாநாட்டில் கலந்துகொள்ளுமாறு அமைச்சர் ஹக்கீமுக்கு அழைப்பு விடுத்தார். இந்த சந்திப்பில் இலங்கைக்கான பலஸ்தீனத் தூதுவர் கலாநிதி அன்வர் அல் அகாவும் கலந்துகொண்டார். (த)

# பாம்புப் பெண் நிரோசா பம்பலப்பிட்டியில் கைது

கொழும்பு,ஏப் 10

நாகபாம்புப் பெண்ணான நிரோசா விமலரட்ன அல்லது டிலானி என அழைக்கப்படும் பெண் நாட்டைவிட்டுத் தப்பிச்சென்றுவிட்டதாகப் பொலிஸார் நேற்று முன் தினம் திங்கட்கிழமை நீதிமன்றத்தில் தெரிவித்திருந்த நிலையில் பம்பலப்பிட்டியில் வைத்து அவரைப் பொலிஸார் நேற்றுச் செவ்வாய்க்கிழமை கைது செய்துள்ளனர்.

பம்பலப்பிட்டியிலுள்ள ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்த நிலையிலேயே கொள்ளுப்பிட்டிப் பொலிஸார் நேற்று அவரைக் கைது செய்துள்ளனர். அந்தப் பெண்ணைக் கொழும்பு கோட்டை நீதிமன்றதில் முன்னிலைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

நாகபாம்புப் பெண்ணான நிரோசா விமலரட்ன அல்லது டிலானி என அழைக்கப்படும் பெண்ணைக் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து கைது செய்யுமாறு குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளருக்கு உத்தரவிடுமாறு பொலிஸாரினால் விடுக்கப்பட்ட கோரிக்கையைக் கொழும்பு கோட்டை நீதிமன்றம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நிராகரித்தது.

சந்தேக நபரான இந்தப் பெண் கடந்த 4 ஆம் திகதி வியாழக்கிழமை நீதிமன்றத்தில் முன்னிலையாகவில்லை. இதனால் அவருக்கு எதிரான பிடியாணை உத்தரவைக் கொழும்பு கோட்டை நீதிமன்றம் பிறப்பித்திருந்தது.

இந்நிலையில் அவர் இருக்கின்ற இடத்தையோ அன்றேல் அவருடைய நிரந்தர முகவரியையோ தம்மால் தேடியறிந்துக்கொள்ள முடியவில்லை என்று நீதிமன்றத்தின் கவனத்துக்கு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கொண்டுவந்த கொள்ளுப்பிட்டிப் பொலிஸார் அவர் நாட்டை விட்டுத் தப்பிச் சென்றுவிட்டதாகவும் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

இதேவேளை, அவரை விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்யவேண்டுமாயின் பிடியாணையின் பிரதியை விமானநிலைய பொலிஸாரிடம் கையளிக்குமாறு நீதிவான் கேட்டுக்கொண்டார். இந்நிலையிலேயே கொள்ளுப்பிட்டிப் பொலிஸார் குறித்த பெண்ணை பம்பலப்பிட்டியிலுள்ள ஹோட்டல் ஒன்றிலிருந்து நேற்றுச் செவ்வாய்க்கிழமை கைது செய்துள்ளனர். (த)

## வயலின், யோகா ஹிந்தி கற்கைநெறி

யாழ்ப்பாணம்,ஏப் 10

இந்தியத் துணைத் தூதரகத்தினால், தூதரக வளாகத்தில் அமைந்துள்ள இந்தியக் கலைக் கூடத்தில் வயலின், யோகா, ஹிந்தி கற்கை நெறிகளை மாணவர்களுக்காக ஆரம்பிக்கவுள்ளதாக அறிவித்துள்ளது.

விண்ணப்பிக்க விரும்புவோர் தங்களின் பெயர், வயது, இணையவுள்ள பாடநெறி, இசைக்கருவி எடுத்துவர முடியுமா? என்பன தொடர்பில் இந்தியத் தூதரகத்துக்குத் தெரியப்படுத்தப்பட வேண்டும்.

மேலும் பயிற்சிகள் வார நாள்களில் மாலை 5 மணியிலிருந்து இரவு 7 மணிவரையில் இடம்பெறும். பயிற்சிக் கட்டணம் இலவசம்.

இணைய விரும்புபவர்கள் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமைக்கு முன்பதாக cul.jaffna@mca.gov.in எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது 021 222 0503 எனும் தொலைநகலுக்குத் தங்கள் விவரங்களை அனுப்பி வைகக வேண்டும். (ஒ-5)

# யாழ்.பல்கலை முஸ்லிம் மாணவரின் தொழுகை அறை மீது கழிவு ஒயில் வீச்சு

யாழ்ப்பாணம், ஏப்.10

யாழ். பல்கலைக்கழகத்தினுள் அமைந்துள்ள முஸ்லிம் மாணவர்களின் தொழுகை அறை மீது இனந்தெரியாதோரால் கழிவுஒயில் வீசித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நாடளாவிய ரீதியில் முஸ்லிம் மக்களுக்கு எதிரான வன்முறைகள், சிங்கள -பௌத்த கடும்போக்கு அமைப்பான பொது பல சேனாவினால் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையிலேயே இந்த கழிவு ஒயில் வீச்சுச் சம்பவம் நேற்று செவ்வாய்க்கிழமை யாழ். பல்கலைக்கழகத்தில் இடம்பெற்றுள்ளது.

யாழ்.பல்கலைக்கழகத்தில் பாதுகாப்பு ஊழியர்களை மீறி யாருமே உள்ளே செல்ல முடியாத அளவுக்குப் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருக்கும் நிலையிலும் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு 7 மணி வரையில் குறித்த அறைகளில் மாணவர்கள் இருந்துள்ளனர். இதன் பின்னர் நேற்றுக்காலை வந்து பார்த்தபோது கதவு மற்றும் வெளி நிலத்தில் கழிவு ஒயில் ஊற்றப்பட்டுள்ளது.

காலையில் இந்தச் சம்பவம் அவதானிக்கப்பட்டு ஒரு மணி நேரத்துக்குள்ளேயே குறித்த கழிவு ஒயில் ஊற்றப்பட்ட இடம், பல்கலைக்கழக நிர்வாகத்தால் சுத்தம் செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை இந்தச் சம்பவத்தையடுத்து முஸ்லிம் மாணவர்கள், மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள், சிரேஷ்ட மாணவ ஆலோசகர், பேராசிரியர் புஷ்பரட்ணம் ஆகியோருக்கிடையே கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது. (த-5)

# தமிழகத் திரைப்படங்களை இலங்கையில் தடை செய்க

கொழும்பு,ஏப் 10

தமிழ்நாட்டுத் திரைப்படங்களைத் தடை செய்யுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கோரிக்கை ராவண சக்தி அமைப்பினால் இலங்கைத் திரைப்பட கூட்டுத்தாபனத்திடம் விடுக்கப்பட்டுள்ளது.இலங்கைக்கு எதிராக உண்ணாவிரதப் போராட்டத்தில் தமிழக நடிகர்கள் அண்மையில் ஈடுபட்டனர். இதனால் இவர்களின் படங்கள் இலங்கை காட்சிப்படுத்துவதைத் தடை செய்ய வேண்டும் என ராவண சக்தி அமைப்பினர் கோரிக்கை விடுத்தனர். இது தொடர்பான மனுவொன்று இலங்கைத் திரைப்படக் கூட்டுத்தாபனப் பிரதிநிதிகளிடம் ராவண சக்தி அமைப்பினால் நேற்றுச் செவ்வாய்க்கிழமை கையளிக்கப்பட்டது.

இதேவேளை, தமிழ்நாட்டு நடிகர்களை இங்கு அழைப்பதற்கான திட்டமொன்றை இலங்கைக் கலைஞர்களுக்கான தேசிய இயக்கம் மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

# இலங்கை நாடாளுமன்றில் இந்திய எம்.பிக்கள்

கொழும்பு, ஏப். 10

இலங்கைக்கு வருகை தந்துள்ள இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று நாடாளுமன்றிற்கும் வருகை தந்தனர்.

சபாநாயகர் சமல் ராஜபக்ஷ அவர்களை வரவேற்றதோடு, அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் மேசையின் மீது தட்டி அவர்களை வரவேற்று மகிழ்ச்சியைத் தெரிவித்தனர்.

காலை 10.35இற்கு வருகை தந்த இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் 11.25 வரை சபாநாயகரின் அதிதிகளுக்கான பார்வையாளர் கூடத்தில் அமர்ந்து சபை நடவடிக்கைகளைக் கண்டுகளித்தனர்.

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் அசோக் கே. காந்தாவும் அவர்களுடன் வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இவர்களுடன் வந்திருந்த அதிகாரிகள் அரைக் கைச் சட்டைகள் அணிந்திருந்ததால் அவர்களால் சபாநாயகரின் அதிதிகளுக்கான பார்வையாளர் கூடத்தின் முன் வரிசையில் அமர முடியாத நிலை ஏற்பட்டது.

அவ்வாறு அரைக் கைச் சட்டைகள் அணிந்திருந்த மூன்று அதிகாரிகள் நாடாளுமன்ற உறுப்பினர்களின் முன் வரிசையில் ஆரம்பத்தில் அமர்ந்திருந்தனர். சபாநாயகரின் அதிதிகளுக்கான பார்வையாளர்கூடத்தில் அரைக் கைச் சட்டையுடன் அமர முடியாது என்ற விதிமுறை இருப்பதனால் அவர்கள் மூவரும் பின் வரிசையில் அமர வைக்கப்பட்டனர். (த-சி)

## தேரர் காயம்

கொழும்பு,ஏப் 10

சாலியவெவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட விகாரை ஒன்றின் தேரர் ஒருவர் நேற்று கட்டுத் துவக்கு வெடித்ததில் காயமடைந்துள்ளார்.

சாலியவெவ மிலந்த கொட ரஜமஹா விகாரையைச் சேர்ந்த பிரதம தேரரான அநுராதபுரகே சந்தம்மல என்பவரே இவ்வாறு காயங்களுக்கு உள்ளாகியுள்ளார். (த)

## பாதை மாற்ற கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஏப் 10

யாழ்.மாநகரசபைக்குட்பட்ட வைரவர்கோயில் வீதியை ஒருவழிப்பாதையாக மாற்றம் செய்வதற்கான கலந்துரையாடல் இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் அலுவலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-13)

# ஜெயலலிதாவின் பேச்சு அமைதிக்குப் பங்கம்

## இலங்கை வெளிவிவகார அமைச்சு கண்டனம்

கொழும்பு,ஏப் 10

இலங்கை மீது பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும், பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்ற தீர்மானங்களும் சட்டசபையில் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில் இலங்கையை நட்பு நாடாகக் கருத வேண்டாம் என்று தமிழக முதல்வர் ஜெயலலிதா வலியுறுத்தி இருந்தார். இந்நிலையில் இத்தகைய கோரிக்கைகள் தங்கள் மன அமைதியை குலைப்பதாக உள்ளன என்று இலங்கை அரசு தெரிவித்துள்ளது.

இலங்கையை நட்பு நாடு என்று அழைக்கக் கூடாது என்று கடந்த 27 ஆம் திகதி தமிழக சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்நிலையில் இது குறித்து இலங்கை வெளியுறவு அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

இலங்கையை நட்பு நாடாகக் கருதக்கூடாது என்ற சிலரின் கோரிக்கைகள் மன அமைதியை குலைப்பதாக உள்ளன. இந்திய-இலங்கை நட்புறவுக்கு இவை ஏற்றதல்ல இல்லை. தேவையற்ற மிகைப்படுத்தப்பட்ட மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகளைக் கூறுபவர்கள், இலங்கையின் எதிர்காலத்துக்கு தீர்வாக அர்த்தமற்ற கோரிக்கைகளை எழுப்புபவர்கள் என அனைவரையும் இலங்கைக்கு நேரில் வந்து பார்க்குமாறு அழைப்பு விடுக்கிறோம்.

தமிழ்நாட்டில் இலங்கைக்கு எதிராக நடைபெற்று வரும் போராட்டங்கள் தேவையற்றவை.

இலங்கைத் தமிழர்களுக்கு அரசியல் உரிமை பெற்றுத் தருவது என்ற போர்வையில், அவர்கள் இலங்கைக்கு எதிரான கோரிக்கைகளை எழுப்பி வருகின்றனர். எங்களை பொறுத்தவரை, மனித உரிமை மீறல் புகார்கள் எல்லாம், வதந்தி மற்றும் தவறான தகவல்கள் அடிப்படையில் கூறப்படும் குற்றச்சாட்டுகள் ஆகும்.

எல்லை தாண்டி வரும் தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படை தாக்குவதாக வெளியாகும் தகவல்களும் தவறானவை. அவற்றில் எந்த உண்மையும் இல்லை -என்றுள்ளது. (த)

## வெப்பம் அகோரம்

யாழ்ப்பாணம்,ஏப் 10

கடந்த சில தினங்களை விட நேற்றைய தினம் அதி கூடிய வெப்பநிலையாக 33.6 பாகை செல்சியஸ் வெப்பநிலை பதிவாகியுள்ளது என்று திருநெல்வேலி வளிமண்டலவியல் திணைக் கள அதிகாரி பி.பிரதீபன் தெரிவித்துள்ளார்.

கடந்த சில தினங்களாக சராசரியாக 33.4 பாகை செல்சியஸாக இருந்த வெப்பநிலை நேற்று 0.2 பாகை செல்சியஸாக அதிகரித்துக் காணப்பட்டது. அதேசமயம் இன்று புதன்கிழமை சிறு தூறல்களுடன் மழை பெய்யக் கூடிய சாத்தியக் கூறு உள்ளது என்றும் அவர் கூறினார். (ஒ-ரி-14)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உணவு நிலையங்களில் கலப்படம் என முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஏப்.10

யாழ்.மாநகர எல்லைக்குட்பட்ட பல உணவு நிலையங்களில் உணவுப் பண்டங்களில் கலப்படங்கள் இடம்பெறுவதாகவும் அது போன்ற செயற்பாடுகள் உடனடியாகத் தடுத்து நிறுத்தப்படவேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

யாழ்.மாநகர சுகாதாரப் பகுதிக்கும் உணவு கையாளும் நிலையங்களுக்குமிடையில் நடைபெற்ற சந்திப்பின் போதே பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் இவ்வாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் உணவு பண்டங்களுக்குச் சேர்க்கும் உப்பு, சீனி ஆகியவற்றின் அளவுகளும் குறைக்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

யாழ்.மாநகர எல்லைக்குட்பட்ட உணவு நிலையங்களில் தயாரிக்கப்படும் வடைகள் தரம் குறைந்ததாகவும், அதனால் மாநகரசபைக் கூட்டங்களின் போது ஆனைக்கோட்டைப் பகுதியில் உள்ள கடை ஒன்றில் இருந்து தரமானதும் சுவையானதுமான வடையைக் கொள்வனவு செய்வதாகவும் மாநகர முதல்வர் தெரிவித்தார். (த-7)

# குடும்பப் பிணக்குகள் குறித்து அதிக அளவிலான முறைப்பாடு

வலி. வடக்கு, ஏப்.10

இளவாலை பொலிஸ் பிரிவில் குற்றச் செயல்கள் கட்டுப்படுத்தப்பட்டுள்ள போதிலும் குடும்பப் பிரச்சினைகள் குறித்து அதிகளவான முறைப்பாடுகள் வந்து கொண்டு இருப்பதாக பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சிந்திக்க பண்டார தெரிவித்துள்ளார்.

இளவாலைப் பொலிஸ் பிரிவில் பொது மக்கள் பொலிஸாருக்கு கொடுக்கும் ஆதரவின் அடிப்படையில் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தக் கூடியதாகவுள்ளது. ஆனாலும் மதுப் பாவனையினால் குடும்பங்களுக்கு இடையேயான பிரச்சினைகள் ஏற்படுவதும் தாக்குதல் சம்பவங்களும் பதிவு செய்யப்பட்டு வருகின்றன.

குடும்பப் பிணக்குகள் கூடியளவு சட்டத்துக்கு உட்பட்ட வகையில் சமாதானமாகத் தீர்க்கப்படுவதுடன் பாரதூரமான பிரச்சினைகள் குறித்து நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்படுவதாகவும் அவர் கூறினார். (த-86)

# சட்டத்துக்கு முரணாக முருகைக் கல் அகழ்வு

## இளவாலை பொலிஸ் பிரிவில்

வலி. வடக்கு, ஏப்.10

இளவாலை பொலிஸ் பிரிவினுள் முருகைக் கற்கள் சட்டத்துக்குப் புறம்பாக அகழப்பட்டு வருவதாகவும் இதனால் கடற்கரைப் பிரதேசம் கடுமையான முறையில் பாதிக்கப்படக் கூடிய நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

கடற்கரையோரங்களில் காணப்படும் முருகைக் கற்களைச் சிலர் அகழ்ந்தெடுத்து செல்கிறார்கள். இதன் காரணமாகக் கடற்கரைப் பகுதிகள் உட்பட ஏனைய அயல் பகுதிகளும் கடல் நீரினால் பாதிக்கப்படும் அபாயம் காணப்படுவதாகவும் பொதுமக்கள் கூறுகின்றனர்.

இதனை கட்டுப்படுத்த பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் அவர்கள் கோரியுள்ளனர். குறிப்பாக முருகைக் கற்பார்களை அகழ்ந்தெடுப்பது அரசினால் தடை செய்யப்பட்டுள்ள போதிலும் இதற்கான அனுமதியை உரிய அதிகார சபையிடம் இருந்து பெறாமலே இத்தகைய செயற்பாடு இடம்பெறுகின்றமையும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (த-86)

# சமுர்த்திப் பயனாளிகள் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கே புத்தாண்டுச் சந்தை

## ஆரம்ப நிகழ்வில் நல்லூர் பிரதேச செயலர்

*யாழ்ப்பாணம்,ஏப்.10*

*சமுர்த்திப் பயனாளிகளுக்கு கடன் உதவிகள் வழங்கி அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதே 'திவிநெகும' புத்தாண்டு சந்தையின் பிரதான நோக்கம். பயனாளிகளின் சுயதொழில் முயற்சியை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கையே இன்று இடம்பெறும் விற்பனையும் கண்காட்சியும் என நல்லூர் பிரதேச செயலர் எஸ்.செந்தில்நந்தன் தெரிவித்தார்.*



நல்லூர் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் 'திவிநெகும' புத்தாண்டுச் சந்தையை யாழ். கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயத்தில் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

'திவிநெகும' புத்தாண்டுச் சந்தையில் உணவுப் பொருள்கள், ஆடை வகைகள், பழவகைகள், மரக்கன்றுகள், உள்ளூர் உற்பத்திப் பொருள்கள், விளையாட்டுப் பொருள்கள், சிற்றுண்டி வகைகள், குளிர்பான உற்பத்திகள், பனம் பொருள்கள் உட்பட பல்வகையான பொருள்கள் விலைக்கழிவுடன் சந்தைப்படுத்தப்பட்டன.

இந்த நிகழ்வில் சமுர்த்தி ஆணையாளர் கந்தையா மகேஸ்வரன் நல்லூர் பிரதேச சபையின் சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் டி.தயாகரன், கருத்திட்ட முகாமையாளர் வி.தர்மகுலசிங்கம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இந்த நாள்கள் இடம்பெறும் புத்தாண்டு சந்தையில் 50 க்கும் மேற்பட்ட உற்பத்தியாளர்களின் பொருள்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

# 8,452 வளர்ப்பு நாய்கள் யாழ்.மாநகர எல்லைக்குள்

யாழ்ப்பாணம்,ஏப்.10

யாழ்.மாநகர சபை எல்லைக்குள் 8 ஆயிரத்து 452 வளர்ப்பு நாய்கள் உள்ளதாகக் கணக்கிடப்பட்டுள் ளது.

யாழ்.மாநகர பிரதம பொதுச் சுகாதார பரிசோதகர் ஆ.ஜீவநாதன் இதனைத் தெரிவித்தார்.

யாழ்.மாநகர சபை சுகாதார பரிசோதகர்களால் வீடுகளில் உள்ள வளர்ப்பு நாய்களின் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டது. இந்த வருடத்தில் மட்டும் 8 ஆயிரத்து 452 வளர்ப்பு நாய்கள் வீடுகளில் உள்ளதாக கணிப்பிடப்பட்டுள்ளது.

வளர்ப்பு நாய்களுக்கான விசர்நோய் தடுப்பூசி தற்போது ஏற்றப்பட்டு வருகிறது.

வீடுகளில் உள்ள நாய்களுக்கு ஒவ்வொரு வருடமும் தடுப்பூசியை ஏற்ற வேண்டும். தற்போது நாய்களுக்கு இவ்வாறு ஊசிகள் ஏற்றாதுவிடின் விசர் நோய் வருவதற்கான சாத்தியக் கூறுகள் அதிகம் உள்ளன.

யாழ்.மாநகர சபையினால் நடத்தப்படும் சுகாதார நிகழ்வுகளில் நாய்கள், வீட்டுப் பிராணிகளுக்கான சிகிச்சைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

வீதிகளில் அதிகமாகக் கைவிடப்பட்ட நாய்கள் காணப்படுகின்றன. இவற்றினால் அதிக விபத்துக்களும், நோய்களும் ஏற்படுகின்றன. தற்போது தைபஸ் காய்ச்சல் பரவலாகக் காணப்படுகிறது. இது அதிகமாகக் கைவிடப்பட்ட நாய்களில் உள்ள உண்ணிகள், கிருமிகளால் பரவுகிறது.

மஹிந்த சிந்தனை திட்டத்தில் நாய்களைக் கொல்லுவது தடை செய்யப்பட்டுள்ளது. எனவே வீடுகளிலுள்ள நாய்களுக்கு தடுப்பூசிகளும் தெருக்களிலுள்ள நாய்களுக்கு கருத்தடையும் செய்யப்படுகின்றது.

தற்போது கொழும்புத்துறை, குருநகர் ஆகிய பிரதேசங்களில் விசர்நோய் தடுப்பூசி ஏற்றப்பட்டு வருகின்றது. நாய்களுக்கு உரிய சிகிச்சைகளை வழங்கி வருவதன்மூலம் நோய்களைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரலாம்-என்றார். (த-13)

# ஓட்டோக்களை இனங்காண ஒருவாரத்துக்குள் 'ஸ்ரிக்கர்'

யாழ்ப்பாணம்,ஏப். 10

யாழ்.நகரில் சேவையில் ஈடுபடுகின்ற ஓட்டோக்களை அடையாளப்படுத்தும் வகையில் யாழ்.மாநகரசபையால் ஒருவாரத்துக்குள் ''ஸ்ரிக்கர்'' ஒட்டப்படவுள்ளது என்று யாழ்.மாவட்ட ஓட்டோச் சங்கத்தலைவர் ராஜ்குமார் தெரிவித்தார்.

சங்கத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட ஓட்டோக்களுக்குப் பதிவு இலக்கம் கொண்ட புதிய ''ஸ்ரிக்கர்'' ஒட்டப்பட்டு அடையாளப் படுத்தப்படவுள்ளது என்று யாழ். மாநகரசபை அறிவித்துள்ளது.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்.மாவட்டத்தில் பதிவு செய்யப்படாத தனியார் ஓட்டோக்கள் அதிகம் சேவையில் ஈடுபடுகின்றன. இதனால் சங்கத்தில் பதிவு செய்து சேவையில் ஈடுபடும் ஓட்டோச் சாரதிகள் வருமானம் இழந்த நிலையில் பெரும் பாதிப்புக்களை எதிர்நோக்குகின்றனர்.

இது தொடர்பாக யாழ். மாநகரசபைக்கு அறிவித்ததையடுத்து சங்கத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட ஓட்டோக்களுக்குப் பதிவு இலக்கம் கொண்ட புதிய ''ஸ்ரிக்கர்'' ஒட்டப்பட்டு அடையாளப்படுத்தப்படவுள்ளது. ஒரு வாரத்துக்குள் யாழ்.மாநகர சபை இந்த நடவடிக்கையை எடுக்கவுள்ளதாக அறிவித்துள்ளது என்றார். (த-14)

# ஒரு வருடம் கடந்துள்ள போதும் பிரச்சினைகளுக்குத் தீர்வில்லை

## ஊர்காவற்றுறை ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் மக்கள் விசனம்

யாழ்ப்பாணம், ஏப்.10

ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவில், கடந்த ஆண்டு ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் முன் வைக்கப்பட்ட பிரச்சினைகளுக்கே இன்னமும் தீர்வு காணப்படவில்லை என்று மக்கள் குற்றஞ்சாட்டினர்.

அதேவேளை, ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் மக்கள் எழுப்பும் பிரச்சினைகளுக்கு பதில் சொல்வதற்கு பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் வருகைதர வேண்டுமென நாடாளுமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்தனர்.

ஊர்காவற்றுறைப் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் ஒரு வருடத்தின் பின்னர் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் திருமதி எழிலரசி அன்ரன் யோகநாயகம் தலைமையில் இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஈ.சரவணபவன், க.சுரேஷ் பிரேமச்சந்திரன், ஆளும் கட்சியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

இந்தக் கூட்டத்தில் ஊர்காவற்றுறைப் பிரதேச மக்களால் மின்சாரம், குடிதண்ணீர், வீதிப்புனரமைப்பு தொடர்பில் கடந்தவருடம் இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சுட்டிக் காட்டப்பட்ட விடயங்களே இன்னமும் செய்து முடிக்கப்படாமல் இருப்பது தொடர்பில் பிரதேச செயலரால் கூட்டத்தின் ஆரம்பத்தில் தெரிவிக்கப்பட்டது.

ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் நேற்றுக் கலந்து கொண்ட மக்களும் மேற்படி பிரச்சினைகளை முன் வைத்தனர். குறிப்பாக வடக்கின் வசந்தம் திட்டத்தினூடாக மின்சாரம் இன்னமும் வழங்கப்படவில்லை என்று மக்கள் தெரிவித்தனர். கடந்த ஆண்டு இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் மேற் [illegible] பட்டபோது உடனடியாக செய்து முடிப்பதாக தெரிவிக்கப்பட்டது. ஆனால் இன்னமும் அந்த வேலைகள் முடிவுறுத்தப்படவில்லை என்று நேற்றையதினம் மக்கள் சுட்டிக்காட்டினர்.

இதன்போது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சாக்குப் போக்காகப் பதிலளித்தனர். அத்துடன் மக்கள் தெரிவித்த பிரச்சினைகளுக்கான தீர்வு எவ்வளவு காலத்துக்குள் கிடைக்கும் என்றும் அவர்கள் தெரிவிக்கவில்லை.

அரச அதிகாரிகள் மக்களுக்குச் சேவை செய்கின்றோம் என்ற எண்ணத்தை நடைமுறைப்படுத்த வேண்டும். மக்களுக்குச் சேவை செய்வதற்கே உங்களுக்குச் சம்பளம் வழங்கப்படுகின்றது.

நீங்கள் சாக்குப் போக்குச் சொல்லாமல் மக்கள் பிரச்சினைகளுக்கான தீர்வு என்ன என்பது தொடர்பிலும் அதனைப் எப்படிப் பெற்றுக் கொடுக்கலாம் என்பது தொடர்பிலும் சிந்தித்துச் செயற்பட வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் தெரிவித்தனர்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினரும், ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத் தலைவருமான சில்வெஸ்திரி அலன்ரின் தெரிவிக்கையில்-

இனிவரும் காலங்களில் ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்களில் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு சொல்கின்ற அதிகாரிகளே கலந்துகொள்ள வேண்டும்-என்றார். (த-5)

### மூதாட்டியின் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம்,ஏப்.10

அடையாளம் காணப்படாத 70 வயது மதிக்கத்தக்க மூதாட்டி ஒருவரின் சடலம் நேற்றுக்காலை கீரிமலைக் கேணி கடற்கரைப் பகுதியில் மீட்கப்பட்டுள்ளது.

நேற்றுக்காலை பொது மக்களால் கொடுக்கப்பட்ட தகவலையடுத்து காங்கேசன் துறைப் பொலிஸார் சடலத்தை மீட்டு உடற்கூற்றுப் பரிசோதனைகளுக்காக அதனை யாழ்.போதனா வைத்திய சாலையில் ஒப்படைத்தனர்.

வெள்ளை நிறமும், நீலநிறமும் கலந்த சாறியுடன் காதில் தோடும் அணிந்துள்ள இந்த மூதாட்டியின விவரங்கள் இதுவரை தெரியவில்லை.

மூதாட்டியின் மரணம் தொடர்பாக மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (த-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொலிஸார் தாக்கியதில் இளைஞர் படுகாயம்

கிளிநொச்சி, முழங்காவில் பகுதியில் கடுமையாகத் தாக்கப்பட்ட நிலையில் இளைஞர் ஒருவர் சிகிச்சைக்காக கிளிநொச்சி பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். தன்னை பொலிஸாரே தாக்கியதாக அவர் தெரிவித்துள்ளார்

கிளிநொச்சி, முழங்காவில் பகுதியைச் சேர்ந்த இரு இளைஞர்களால் முறைப்பாடு ஒன்று செய்ய வேண்டியிருப்பதால் பொலிஸ் நிலையத்துக்கு வருமாறு கடந்த வியாழக்கிழமை பொலிஸார் அழைத்துச் சென்றதாகவும், இருவரையும் காரணம் இல்லாமல் கடுமையாகத் தாக்கியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் அடுத்தநாள் சனிக்கிழமை வரை அவர்களை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்திருந்ததாகவும் கூறப்படுகிறது.

இதில் ஒரு இளைஞர் மிகவும் மோசமாகத் தாக்கப்பட்டு அடி காயங்களுக்கு உள்ளான நிலையில் முழங்காவில் பிரதேச வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுப் பின்னர் மேலதிக சிகிச்சைக்காகக் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுச் சிகிச்சை பெற்று வருகின்றார். கதிரவேலு ரவி(வயது -28) என்பவரே இவ்வாறு சிகிச்சை பெற்று வருகின்றார். இதே சம்பவத்தில் கந்தசாமி சதீஸ்வரன் என்பவரும் காயமடைந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது. (த-6)

## 'உதயன்'...

*தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...*

திங்கட்கிழமை இடம் பெற்றது. இதன் போது, கிளிநொச்சியில் 'உதயன்' பத்திரிகை அலுவலகம் தாக்கப்பட்டமை தொடர்பில் ஐ.நா. செயலாளர் பான்கி.மூனின் பேச்சாளர் மாட்டீன் நெஸஸ்கியிடம் கேட்கப்பட்டது.

தற்போதைய நிலையில் மேற்படி தாக்குதல் சம்வம் தொடர்பில் கருத்தெதனையும் கூறமுடியாது. இருப்பினும் ஊடகங்கள் சுதந்திரமாக செயலாற்ற அனுமதிக்கப்பட வேண்டும் என்று ஐ.நா. செயலாளர் நாயகம் தெளிவாகச் சொல்லியிருப்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன் என்றார். (த-5)

## ஐ.நா. தீர்மானம்...

*தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...*

நிறைவேற்றப்பட்டவுடன் இந்தத் தீர்மானத்தையோ, இத்தீர்மானத்தில் அடங்கியுள்ள விடயங்களையோ இலங்கை அரசு ஏற்காது என்று அமைச்சர் மஹிந்த சமரசிங்ககூறினார். அரசால் ஆரம்பித்துவைக்கப்பட்டுள்ள நல்லிணக்க நிகழ்ச்சித் திட்டம் மிகவும் திருப்திகரமாக உள்ளது என்றும் அவர் கூறினார்.

ஜெனிவாத் தீர்மானம் தொடர்பில் நான் அரசுடன் சில கேள்விகளைக் கேட்கவேண்டியுள்ளது.

அவை:-

அரசு ஜெனிவாத் தீர்மானம் தொடர்பில் நாடுகளுடன் பேச்சு நடத்துமா? இப்பேச்சுகள் எங்கே நடக்கும்? வாஷிங்டனிலா, ஜெனிவாவிலா அல்லது கொழும்பிலா?

அமெரிக்கா, பிரிட்டன், இந்தியா உள்ளிட்ட நாடுகளுடனும் அரசு பேசுமா? நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகளை நடைமுறைப்படுத்துவதற்கான கால எல்லை என்னவென்று கூறமுடியுமா? - எனக் கேள்வி எழுப்பினார். (த-சி)

## ஐ.நா. மனித...

*தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...*

களுக்கு ஒரு தடவை ஜெனிவா மனித உரிமைகள் சபையின் முன் இலங்கை ஆஜராக வேண்டும் என்பதையும் எம்மால் ஏற்கமுடியாது. வேண்டுமென்றே எம்மீது இலக்கு வைத்துத் தாக்கப்படுகிறது.

சர்வதேச விசாரணைக்கு நாம் இடங் கொடுக்கப்போவதில்லை. அவ்வாறான கோரிக்கையை நாம் முற்றாக நிராகரிக்கிறோம். ஜெனிவாத் தீர்மானத்தை நாம் நிராகரிப்பதால் அது தொடர்பில் நாம் எந்த நாட்டுடனும் பேசவேண்டிய தேவையில்லை.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த கால எல்லை வகுக்க முடியாது. நல்லிணக்க ஆணைக் குழுவின் குறுகியகால பரிந்துரைகளான மீள் குடியேற்றம், கண்ணிவெடிகள் அகற்றல் மற்றும் புனர்வாழ்வளித்தல் போன்ற விடயங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு விட்டன.

காணிப் பிரச்சினையை உடன் தீர்க்கமுடியாது. அதைத் தீர்க்க நீண்டகாலம் எடுக்கும். அதேபோல், நல்லிணக்கத்துக்கும் நீண்ட காலம் எடுக்கும்.

பீரிஸ் உரையாற்றிய இந்தச் சந்தர்ப்பத்தில் இந்திய நாடாளுமன்றக் குழுவினர் சபாநாயகரின் அதிதிகளுக்கான பார்வையாளர் கூடத்திலிருந்து இக்கூற்றை செவிமடுத்துக் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-சி)

## உதயனைத்...

*தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...*

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் மிச்செல் ஜே. சிசன் தெரிவித்துள்ளார்.'உதயன்' மீதான தாக்குதல்களை அமெரிக்கா வன்மையாகக் கண்டிப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கூறியதாவது:-

இலங்கையில் குறிப்பாக ஊடகங்கள் மீதான தாக்குதல்கள், அச்சுறுத்தல்கள் குறித்து அமெரிக்கா கரிசனை கொண்டுள்ளது என்பது உங்களில் பலருக்குத் தெரியும்.

முக்கியமான பல ஊடகவியலாளர்கள் நாட்டை விட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

2009 இல் நிகழ்ந்த 'சண்டே லீடர்' ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க படுகொலை, 2010 இல் பிரகீத் எக்னெலிகொட கடத்தல், 2011 ஜூலையில் 'உதயன்' செய்தி ஆசிரியர் ஞானசுந்தரம் குகநாதன் மீதான தாக்குதல் உள்ளிட்ட ஊடகவியலாளர்கள் மீதான பல தாக்குதல்கலுக்கு இன்னமும் தீர்வு கிடைக்கவில்லை.

ஊடகங்களுக்கு எதிரான தாக்குதல்கள் இன்று வரை தொடர்கின்றன என்பது இந்த அறையில் உள்ள ஊடகவியலாளர்களுக்குத் தெரியும் என்பதை நான் அறிவேன்.

அபூர்வமாகவே சந்தேக நபர்கள் கைது செய்யப்படுவர் அல்லது கைது செய்யப்பட்டவர்கள் பெரும்பாலும் தண்டிக்கப்படுவதில்லை.

கடந்தவாரம் கூட, கிளிநொச்சியில் உள்ள 'உதயன்' பணியகம் மீது முகமூடி அணிந்தவர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர். இது உதயனுக்கு எதிரான தொடர்ச்சியான தாக்குதல்களில் ஒன்று. கடந்த பல ஆண்டுகளாக அதன் பணியாளர்கள் தாக்கப்படுகின்றனர்.

இந்தப் பிரச்சினையை நான் எழுப்புவதற்கு காரணம், அமெரிக்கா எப்போதும் கருத்துச் சுதந்திரத்துக்கான உலகளாவிய உரிமையைப் பாதுகாப்பதற்காகப் பணியாற்றுகிறது.

ஊடகங்கள் உள்ளிட்ட எல்லா தனிநபர்களுக்கும் கருத்துச் சுதந்திரம் உள்ளது என்று நாம் நம்புகிறோம்.

இது ஜனநாயகத்துக்கு அவசியமானது மட்டுமல்ல, தனிப்பட்ட உரிமை.மற்ற ஜனநாயக அமைப்புகளையும், பெறுமானங்களையும் விமர்சனம் மூலம் பாதுகாக்கிறது.

பங்கேற்பு ஜனநாயகம் ஒன்றில் மக்கள் தமது நாட்டின் நிலைமை, அரசின் செயற்பாடுகள் குறித்த துல்லியமான தகவலைப் பெற வேண்டும்.

இந்தநிலையில் உதயன் மீதான தாக்குதல் குறித்து முழுமையான விசாரணை நடத்தி குற்றவாளிகளைத் தண்டிக்க வேண்டும் என்று நாம் இலங்கை அதிகாரிகளை கேட்கிறோம்-என்றார். (த)

## முஸ்லிம்களின்...

*தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...*

மேற்கொள்ளப்பட்டு வரும் தாக்குதல்கள் தொடர்பில் அவர் நேற்று நாடாளுமன்றில் விசேட அறிக்கை ஒன்றை வெளியிட்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

இந்த நாட்டில் பல நூற்றாண்டு காலமாகக் கட்டிக் காப்பாற்றப்பட்டு வந்த முஸ்லிம்களின் மத, கலாசார விழுமியங்களுக்கு இப்போது இடையூறு விளைவிக்கப்படுகின்றது.

18ஆம் நூற்றாண்டில் இருந்து பல துறைகளில் முன்னேறிவந்த முஸ்லிம்களுக்கு இப்போது கடுமையான தொல்லைகள் ஏற்படுத்தப்படுகின்றன. இந்த நாட்டின் அபிவிருத்திக்கு - பொருளாதாரத்துக்கு அவர்கள் கடும் பங்களிப்பை வழங்கி வந்துள்ளனர்.

இஸ்லாத்துக்கு எதிராகக் கொடுமையான வன்முறைகள் இடம்பெறுகின்றன. அவர்கள் தங்களின் கலாசார ஆடைகளைக்கூடத் தக்க வைத்துக்கொள்ள முடியாமல் கஷ்டப்படுகின்றனர். அந்த ஆடைகளுக்கு எதிராகவும் தாக்குதல் நடத்தப்படுகின்றது.

தமிழர்கள் தமக்குப் பாதுகாப்பு இல்லை என்பதை எவ்வாறு உணர்ந்துள்ளார்களோ அதேபோல் முஸ்லிம் மக்களும் உணர்ந்துள்ளனர்.

முஸ்லிம்களுக்கான பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு நான் தமிழ் மக்கள் சார்பில் அரசிடம் கோரிக்கை விடுக்கின்றேன். அவர்களின் பாதுகாப்பு முழுமையாக உறுதிப்படுத்தப்படுவதோடு அவர்களின் உரிமைகளும் முழுமையாகப் பாதுகாக்கப்பட வேண்டும்.

முஸ்லிம்களின் பள்ளிவாசல்கள் தாக்கப்படுவது நிறுத்தப்படவேண்டும். சிங்கள, பௌத்தர்கள் இவ்வாறான செயல்களில் ஈடுபடக்கூடாது. நாட்டில் சட்டம், ஒழுங்கு முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். அதனூடாக அனைவரது பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்றார். (த-சி)

## மர்மமாக...

*தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...*

''குறித்த குழந்தையின் தாய் கணவரைப் பிரிந்து மிக வறுமையான நிலையில் வாழ்ந்து வருகின்றார். இதன் போது குழந்தைக்கு வயிற்றோட்டம் ஏற்பட்டுள்ளது. எனினும் குழந்தையை வைத்தியசாலைக்கு கொண்டு சென்று சிகிச்சை வழங்காமல் ஆலயத்துக்கு நேர்த்தி வைத்துவிட்டு தாயார் அலட்சியமாக இருந்ததால் குழந்தை உயிரிழக்க நேரிட்டது.இதன் பின்னர் சடலத்தை உரிய விசாரணைக்கு உள்ளாகாமல் புத்தூர் மேற்கு கிந்திட்டி மயானத்தில் அடக்கம் செய்யப்பட்டுள்ளது.'' என்று பொலிஸாரிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-11)

## இலங்கையில்...

*தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...*

மோதல் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளன. இலங்கை அரசு ஒழுங்காகச் செயற்படாவிட்டால் அமெரிக்கா நடைமுறைக்குச் சாத்தியமான அனைத்து வழிமுறைகளையும் பிரயோகிக்கும்''.

இவ்வாறு இலங்கை அரசை எச்சரித்துள்ளார் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் மிச்செல் ஜே சிசன்.

''நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக் கூறலை அரசு உரிய முறையில் நடைமுறைப் படுத்தாவிட்டால் மீண்டும் மோதல் ஏற்படும். இதையே வரலாறுகள் எமக்குப் படம் பிடித்துக் காட்டுகின்றன'' என்றும் அவர் கூறியுள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் வெளிநாட்டு ஊடகவியலாளர்களுடனான சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் நல்லிணக்கத்துக்கான மிக முக்கியமான படிமுறைகள் இலங்கை அரசால் முன்னெடுக்கப்படவில்லை. குறிப்பாக அதிகாரப் பகிர்வு தொடர்பில் தமிழ்த் தேசிய கூட்டமைப்புடன் இலங்கை அரசு பேசவில்லை.

பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கத்துக்கான தூண்டுதலை இலங்கை அரசுக்குத் தொடர்ந்து வழங்குவோம்.

இலங்கைக்கு எதிராக அமெரிக்கா பாயும்

அமெரிக்கா அடுத்த கட்ட நடவடிக்கையாக, சாத்தியமான எல்லாப் பொறிமுறைகளையும் பாவித்து மனித உரிமைகள் சபைக்கு மேலதிகமாகவும் புதிய வழிமுறைகளை நிச்சயம் கருத்திலெடுக்கும்.

இலங்கை அரசு எடுக்கும் நடவடிக்கைகள் வெறுமனே சர்வதேசத்தைத் திருப்பதிப்படுத்துவதாக இருக்கக் கூடாது. நாட்டில் நிலையான சமாதானத்தையும் எதிர்காலத்தையும் உறுதிப்படுத்துவதாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

### மோதல் வெடிக்கும்

நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக் கூறல் உரிய முறையில் முன்னெடுத்துச் செல்லப்படவில்லையாயின் மீண்டும் மோதல் - பிணக்குகள் நாட்டில் தோன்றும். இதனை வரலாறும் எடுத்துக்காட்டுகின்றது.

நல்லிணக்கமும் பொறுப்புக் கூறலும் முன்னெடுத்துச் செல்லப்படுவது கடினமானதாக இருந்தாலும் அவற்றை முன்னெடுக்காவிட்டால் நாட்டில் ஸ்திரத்தன்மை கேள்விக்குறியாகும்.

இலங்கை, ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை எவ்வாறு நடைமுறைப்படுத்துகின்றது என்பதை மிக நெருக்கமாக அவதானிக்கின்றது அமெரிக்கா.

### விடுதலைப் புலிகளை அழிக்க உதவினோம்

தமிழீழ விடுதலைப் புலிகளை இலங்கையிலிருந்து இல்லாமல் ஒழிக்க நாங்கள் எவ்வளவு உதவிகளைப் பல சந்தர்ப்பங்களில் இலங்கை அரசுக்கு வழங்கியிருக்கின்றோம் என்பதை நினைவூட்ட விரும்புகின்றோம்.

இலங்கை அரசு தேசிய வேலைத்திட்டத்தில், நல்லிணக்க ஆணைக்குழுவின் சகல பரிந்துரைகளையும் உள்ளடக்கவில்லை. இதேவேளை நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் கூட பொறுப்புக் கூறல் மற்றும் நல்லிணக்கம் தொடர்பில் முழுமையாக குறிப்பிடப்படவில்லை.

இலங்கை இராணுவத்தினரால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் அறிக்கை பகிரங்கப்படுத்தப்பட வேண்டும் என்றார். (த-5)

## இடைக்கால...

*தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...*

ரைச் சந்தித்துப் பேசினர். அந்தச் சந்திப்பில் அனைத்துத் தரப்பினராலும் ஒற்றுமையுடன் இடைக்கால அரசு ஒன்றுக்கு வலியுறுத்தப்பட்டது.

இந்தச் சந்திப்பின்போது ''தமிழ்மக்கள் தமது பிரச்சினைக்கான தீர்வாக எதனை விரும்புகிறார்கள்? அதற்கு இந்தியா எந்த வகையில் உதவமுடியும்?'' என்று இந்திய தூதுக்குழுவினர் வினவினர்.

அதற்குப் பதிலளித்த தமிழர் தரப்புப் பிரதிநிதிகள்,

''தமிழர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணப்படுவதற்கு முன்பதாக தற்போது இடம்பெறும் இனஅழிப்பு நடவடிக்கைகள் நிறுத்தப்பட வேண்டும். முல்லைத்தீவில் ஓர் இரவில் 9 ஆயிரம் சிங்களவர்களைக் கொண்டு வந்து குடியேற்றுகின்றனர். தமிழர் தாயகப் பிரதேசங்களில் இனப்பரம்பலை மாற்றியமைக்கும் விதத்தில் அரசு செயற்படுகின்றது.

வலி.வடக்கு மக்கள் சொந்த இடங்களுக்குச் சென்று மீளக்குடியமர முடியாமல் இருக்கின்றனர். அவர்களது நிலங்கள் உயர்பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் முடக்கப்பட்டு, அங்கு இராணுவத்தினர் விவசாயம் செய்கின்றனர். மக்கள் அவர்களது சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்தப்பட வேண்டும்.

மக்கள் சுதந்திரமாக ஒன்று கூடி கதைக்க முடியாத நிலைமை இருக்கின்றது. எங்கும், எதிலும் இராணுவத்தினரின் தலையீடுதான். இதனால் மக்களால் நிம்மதியான வாழ்க்கையை வாழ முடியாதுள்ளது.

மேலும் இறுதிக் கட்டப் போரில் ஒரு லட்சத்து 47 ஆயிரம் பேர் வரையில் கொல்லப்பட்டனர். ஐ.நாவால் நியமிக்கப்பட்ட குழுக்கள் கூட 40 ஆயிரம்பேர், 70 ஆயிரம் பேர் கொல்லப்பட்டதை ஏற்றுக் கொண்டுள்ளது. இந்தப் பாதிப்பை எதிர்கொண்ட மக்களுக்கு இதுவரையில் எதுவித நிவாரணமும் வழங்கப்படவில்லை. இது திட்டமிட்ட இனப்படுகொலை. இதனை இந்தியா ஏற்க வேண்டும்.

இந்த தமிழின அழிப்பு நடவடிக்கைகள் தொடர்ந்தும் திட்டமிட்டரீதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதனை தடுத்து நிறுத்துவதற்கு உடனடியாக வடக்கு - கிழக்கில் சர்வதேசத்தின் அல்லது இந்தியாவின் கண்காணிப்பின் கீழ் இடைக்கால நிர்வாகம் ஏற்படுத்தப்பட வேண்டும்.

பிரிக்கப்பட்ட எமது தமிழர் தாயகப் பிரதேசமான வடக்கு - கிழக்கு மீளவும் இணைக்கப்பட வேண்டும். இந்தியாவால் கொண்டு வரப்பட்ட 13 ஆவது திருத்தச் சட்டம் ஒரு போதும் தமிழர்களுக்கு நிரந்தத் தீர்வாக அமையாது. மேலும் இந்த அரசு 13 ஆவது திருத்த சட்டத்தில் மாகாண சபைகளுக்கு கொடுத்த அதிகாரங்களையும் மீளவும் பெற்றுக் கொண்டுள்ளது. இந்த நிலையில் மாகாணசபையினாலோ அல்லது அதனைக் கொண்டிருக்கும் 13 ஆவது திருத்தச் சட்டத்தினாலேயோ தமிழர்களுக்கு நிரந்தரமான எந்தத் தீர்வையும் பெற முடியாது.

மாகாணசபை முற்று முழுதாக ஆளுநரின் அதிகாரத்துக்கு உட்பட்டது. இதனால் தமிழ் மக்களுக்கு எந்தப் பயனும் இல்லை. எனவே 13 ஆவது திருத்தத்தை ஆரம்பப் புள்ளியாகக் கொண்டு செயற்பட வேண்டும்'' என்று கோரிக்கை விடுத்தனர்.

யாழ். வந்த இந்தியக்குழுவில் அகில இந்திய திரிணாமூல் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் சௌகத்தா றோய், பாரதீய ஜனதாக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களான பிரகாசு ஜவதேகர், அனுராக்தாகூர், பகுஜன் சமாஜ் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் தனஞ்ஜய்சிங், இந்திய தேசியக் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்களான சந்தீப் தீக்ஷித், மதுகௌட் ஜக்சு ஆகியோரும் இந்திய உயர்மட்ட தூதுக் குழுவைச் சேர்ந்த இந்திய அபிவிருத்தி கூட்டு நிர்வாகம், வெளிவிவகார அமைச்சின் சிறப்பு செயலர் எஸ்.இராகவன், இந்திய நிதி ஆலோசகரும், வெளிவிவகார அமைச்சின் சிறப்புச் செயலருமான பமல் ஜீங்கா ஆகியோர் அடங்கியிருந்தனர்.

இவர்களை தமிழர் தரப்பு சார்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஈ.சரவணபவன், க.சுரேஸ் பிரேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன் மற்றும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதேச சபைத் தலைவர்கள் எனப் பலரும் சந்தித்தனர். (ந-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-5678844, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



# வேண்டாத கால தாமதம் வெற்றுப் பேச்சுக்குச் சமன்!

★ பொருத்தமான நல்லிணக்கம் உண்டாக்கப்படாத, தேவைப்படும் அளவுக்கு நடைமுறைப்படுத்தப்படாத மற்றும் பொறுப்புக் கூறப்படாத சூழ்நிலைகளில் பல நாடுகளில் மீண்டும் மோதல்கள் ஏற்பட்டதை வரலாறுகள் எமக்குத் தொட்டுக் காட்டுகின்றன.

★ ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில், இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் பரிந்துரை செய்யப்பட்டுள்ள பிரதானமான எட்டுப் பரிந்துரைகளை, இலங்கை அரசாங்கம் எவ்வாறு கையாள்கின்றது என்று அமெரிக்கா தொடர்ந்தும் கண்காணிக்கிறது.

★ அவை தொடர்பில் அனைத்துலக நாடுகளுக்கு வழங்கிய உறுதிமொழிகளை இந்த நாடு நிறைவேற்றும் என்றே நாம் எதிர்பார்க்கின்றோம்.

இலங்கையிலுள்ள வெளிநாட்டுச் செய்தியாளர்கள் மற்றும் இராஜதந்திரிகளை நேற்று முன்தினம் சந்தித்துப் பேசிய கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதுவர் மிச்சல் ஜே.சிசன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இங்கு எழுந்துள்ள மனித உரிமை விவகாரங்களில் அமெரிக்கா பூரண கரிசனை கொண்டுள்ளது என்பதனையும் அமெரிக்கத் தூதுவர் தொட்டுக்காட்டினார்.

ஐ.நா.மனித உரிமைகள் பேரவையிலோ அல்லது அதற்கு வெளியிலோ கொழும்புக்கு எதிராக மேலும் குறிப்பிடப்படாத நடவடிக்கையை மேற்கொள்வதற்கான அனைத்துலக கருத்துருவாக்கத்தைக் கட்டியெழுப்புவதில் அமெரிக்கா பணியாற்றியது.

இலங்கையின் மனித உரிமை விவகாரங்களில் முன்னேற்றம் ஏற்பட வேண்டும் என்ற தொடர்ச்சியான அனைத்துலக அழைப்புகள் கவனிக்கப்படவில்லை. போர் முடிவுக்கு வந்து நான்கு ஆண்டுகளான பின்னரும் தொடரும் உள்ளூர் ஊடகங்கள் மீதான தாக்குதல்கள், அச்சுறுத்தல்கள் குறித்தும் ஊடகவியலாளர்களுக்கு எதிரான எண்ணற்ற கொலைகள், ஆள்கடத்தல்கள், தாக்குதல்களை அதிகாரிகள் தடுக்க இயலாத நிலையே இன்றைய நடைமுறை யதார்த்தம் என்றும் அவர் சுட்டிக்காட்டத் தவறவில்லை. போர் முடிந்து விட்டதாக 2009 இல் இலங்கை அரசு அறிவித்த பின்னரும், உண்மையான நல்லிணக்கத்தை அடைவதற்குத் தேவையான முக்கிய செயற்பாடுகளை அது ஆரம்பிக்கவில்லை என்பதும் இங்கே குறிப்பிடத்தக்கதாகும்.

ஜெனிவாத் தீர்மானமும் வழமையான ஓர் அறிக்கைதானே என்று இலங்கை அரசு நினைக்கக்கூடும்; அதனை அலட்சியப்படுத்திவிடவுங்கூடும். ஆனாலும், அமெரிக்கத் தூதுவரின் கூற்றுகளிலுள்ள உண்மைநிலையை ஆராய்ந்து பார்க்கவேண்டியது இலங்கை அரசின் பொறுப்பென்பதனை அது மறந்துவிடலாகாது.

கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு என்ற பூசிமெழுகப்பட்ட ஒரு "கேக்"கை அனைத்துலகத்துக்குக் காட்டிய அரசு, பொறுப்புக்கூறுவதற்கான கட்டமைப்பை அதனூடாக எவ்வாறு நிறைவேற்றப்போகிறது என்பதனை இதுவரை உத்தியோகபூர்வமற்ற முறையிலேனும் வெளிப்படுத்த இல்லையே! காரணம், அரசால் சொல்ல இயலவில்லை. அதனாலேயே அமெரிக்கா உட்பட அனைத்துலக நாடுகள் அவற்றை இலங்கைக்கு அழுத்தி உணர்த்தி வருகின்றன.

உண்மையான நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு இலங்கை அரசு முயற்சிக்கவில்லை என்பது எவரும் சொல்லித்தெரியவேண்டிய ஒன்றல்ல. அது பரகசியம். நல்லிணக்க முயற்சிகளை ஏற்படுத்துவதற்கு முன்னோடி விடயமான நிரந்தர அரசியல் தீர்வொன்றை எட்டுவதற்கான முயற்சிகளைக்கூட மறந்த அரசு நினைத்துப் பார்ப்பதாகவும் கொள்ள இயலவில்லை.

தென்னிலங்கையில் சிங்கள மக்களிடையே தனது செல்வாக்கை அதிகரித்துக்கொள்வதற்காகச் செய்யவேண்டிய - செய்யக்கூடாத சகல வகையறாக்களையும் நடைமுறைப்படுத்தும் இன்றைய ஆட்சியாளர்கள், தமிழர் பிரச்சினை குறித்து கிஞ்சித்தும் பற்றுறுதியுடன் செயற்படவில்லை. மொத்தத்தில் தமிழ் மக்களை வஞ்சிப்பதே அவர்களின் குறியாகவுள்ளது.

இலங்கைக்கு எதிராக ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இரண்டு தடவைகள் தீர்மானத்தைக் கொண்டுவந்த அமெரிக்காவும், அந்த யோசனைக்கு ஆதரவளித்த இதர நாடுகளும் இதே விடயங்களை இலங்கையிடம் திரும்பத்திரும்பச் சொல்லி அலைக்கும் வாய் புளித்துப்போயிருக்கும் எனலாம். ஆனால் நம் நாட்டு அரசோ சீனாவை மனதில் இருத்தியும், இந்தியாவை கையில் போட்டுக்கொண்டும், ரஷ்யா, பாகிஸ்தான் உட்பட சக்திமிக்க நாடுகளை நட்புடன் வைத்துக்கொண்டும் "நீ என்ன சொல்வது, நான் என்ன கேட்பது" என்ற தோரணையில் காலத்தை இழுத்தடித்து வருகின்றது.

இது விவகாரத்தில் இலங்கை அரசின் கெட்டித்தனம் நீண்டகாலம் நீடிக்க முடியாது என்று சொல்வதற்கும் இயலாது.

ஏனெனில், அனைத்துலக நாடுகள் காலத்துக்குக் காலம் அறிக்கைகளையும் அவதானிப்புக்களையும் வெளியிடுவதில் காலம் கரைந்து விடும்.

ஆகவே, காத்திரமான, கனதியான பெறுபேறுகளை குறித்தொதுக்கப்பட்ட செயற்பாடுகளை அவை முன்னெடுக்க வேண்டும். வேண்டாத காலதாமதம் வெற்றுப் பேச்சாகி விடும்.

# ஊடகவியலாளர்களைப் பாதுகாக்க சுயாதீன ஆணைக்குழு அவசியம்

## இலங்கை அரச பொது ஊழியர் சங்கம் கோரிக்கை

அம்பாறை,ஏப்.10

"வடக்கு கிழக்கில் ஊடகவியலாளர்களும், ஊடக நிறுவனங்களும் நசுக்கப்பட்டு வரும் நிலைமை நீடித்து வருகின்றது. எனவே சுயாதீனமான நிரந்தர ஆணைக்குழு ஒன்றை நியமித்து ஊடகவியலாளர்களையும், ஊடகங்களையும் பாதுகாப்பதற்கு அரசு முன்வர வேண்டும்".

இவ்வாறு அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கத் தலைவரும், பிரபல தொழிற்சங்கவாதியுமான எஸ்.லோகநாதன் கூறினார்.

அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கத்தின் முகாமைத்துவக் கூட்டம் கல்முனை சணச வெளி மண்டபத்தில் தலைவர் எஸ்.லோகநாதன் தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் 'உதயன்' பத்திரிகை நிறுவன கிளிநொச்சி அலுவலகமும், முகாமையாளர், ஊழியர்கள் தாக்கப்பட்டமை தொடர்பாக கண்டனத் தீர்மானம் ஒன்றை முன்மொழிந்து உரையாற்றுகையிலேயே தலைவர் எஸ்.லோகநாதன் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

"நாட்டில் குறிப்பாக வடக்கில் ஊடகங்கள் மீதும், ஊடகவியலாளர்கள் மீதும் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள காட்டுமிராண்டித்தன அராஜகம் தொடர்கதையாகவே அமைந்துள்ளது.

கடந்த காலத்தில் திடீரென முளைத்து தாண்டவமாடிய கிறீஸ் மனிதர்கள் போன்று வடக்கில் ஊடகவியலாளர்கள் மீதும் குறிப்பிட்ட ஒரு சில ஊடக நிறுவனங்கள் மீதும் இனம்தெரியாதோர் எனக் கூறிக்கொள்ளும் குண்டர்கள் தாக்குதல்களைத் தொடுத்து வருகின்றனர்.

### 'உதயன்' தாக்குதல்

அண்மையில் இத்தகைய ஈனத்தனச் செயலை இத்தகைய குண்டர்கள் கிளிநொச்சியில் 'உதயன்' அலுவலகம் மீதும், அதன் முகாமையாளர், ஊழியர்கள் மீதும் காட்டியுள்ளனர்.

இந்தத் தாக்குதல் சம்பவம் 'உதயனின்' குரல்வளையை நசுக்குவதற்கு எடுக்கப்பட்ட கவலை தரும் விடயமாகும்.

### ஆணைக் குழு

கடந்த காலங்களில் நாட்டில் குறிப்பாக வடக்கு, கிழக்கில் ஊடகவியலாளர்கள் கொலை செய்யப்பட்டும், தாக்குதலுக்கு உள்ளாகியுள்ள அதேவேளை-ஊடக நிறுவனங்களும் தாக்குதல்களுக்கு உள்ளாகியுள்ளன.

எனவே வடக்கு-கிழக்கில் தொடர்ந்து வரும் இத்தகைய ஊடக அடக்குமுறை, அராஜகத்தில் சம்பந்தப்பட்டோரை இனம் கண்டு உண்மையை வெளிக்கொணரவும்.

எதிர்காலத்தில் இத்தகைய நிலைமைகள் தொடராது ஊடகவியலாளர்களையும், ஊடக நிறுவனங்களையும் பாதுகாக்கும் பொருட்டும் நிரந்தர ஆணைக்குழு ஒன்றை நியமிக்க அரசு முன்வர வேண்டும்.

விசேடமாக வடக்கில் ஊடகவியலாளர்கள் மீதும், ஊடக நிறுவனங்கள் மீதும் அடுத்தடுத்து இடம்பெற்று வரும் தாக்குதல் மற்றும் அடாவடித்தனங்களுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கும் அரசு காத்திரமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்"-இவ்வாறு அவர் கூறினார்.

கூட்டத்தில் கிளிநொச்சி 'உதயன்' அலுவலக தாக்குதலைக் கண்டிக்கும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதுடன், குறித்த ஆணைக்குழு ஒன்றை நியமிக்குமாறு அரசைக் கோருவதெனவும் தீர்மானிக்கப்பட்டது. (த-30)

# 72 கிராம அலுவலர்களின் இடமாற்றங்கள் இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம், ஏப்.10

யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்களின் கீழ் கடமையாற்றும் 72 கிராம அலுவலர்களுக்கான இடமாற்றம் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் வரையில் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகப் பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் கடந்த பல வருடங்களாக கிராம அலுவலர்களுக்கான இடமாற்றம் வழங்கப்படாதிருந்தது. திடீரென கடந்தவாரம் 72 பேருக்கு இடமாற்ற உத்தரவுகள் வழங்கப்பட்டன.

கிராம அலுவலர்களுக்கான இடமாற்றத்துக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டு இரண்டு வருடங்கள் கடந்த நிலையில், கடந்த வாரமே திடீரென இடமாற்றம் தொடர்பான அறிவித்தல்கள் யாழ்.மாவட்டச் செயலகத்தினால் வழங்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் வாக்காளர் பெயர்ப்பட்டியல் மீளாய்வு செய்யப்பட வேண்டியிருப்பதால் குறித்த இடமாற்றங்களை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் இறுதிவரையில் பிற்போடுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-8-86)

# உடுவில் பிரதேச புத்தாண்டுச் சந்தை இரு தினங்கள்

வலி.வடக்கு,ஏப்.10

வாழ்வெழுச்சித் திட்டத்தின் கீழான வருடாந்த புத்தாண்டுச் சிறப்புச் சந்தை உடுவில் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் நாளை வியாழக்கிழமை மற்றும், நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை ஆகிய இரண்டு நாள்களும் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

புத்தாண்டுச் சந்தையில் உள்ளூர் உற்பத்திப் பொருள்களான உடைகள், மரக்கறி வகைகள், கைப்பணிப் பொருட்கள், உணவுப் பொருள்கள், சட்டி பானைகள், கேக் வகைகள் எனப் பல்வேறுபட்ட பொருள்களையும் சந்தைப்படுத்துவதற் கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

உடுவில் பிரதேச செயலாளர் மு.நந்தகோபாலன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் ஐம்பதுக்கும் மேற்பட்ட உற்பத்தியாளர்கள் தமது உற்பத்திப் பொருள்களைச் சந்தைப்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-86)

# வடமேல் மாகாண அதிபர், ஆசிரியர்களின் பதவி உயர்வு விடயத்தில் அசமந்தம்

## இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு

புத்தளம்,ஏப்.10

வடமேல் மாகாண அதிபர், ஆசிரியர்களின் பதவி உயர்வு மற்றும் சம்பளம் மாற்றியமைத்தல் தொடர்பில் கல்வி வலயங்களின் அசமந்தப் போக்கைக் கண்டித் துள்ள, இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கம், பாதிக்கப்பட்டவர்களை இணைத்துக்கொண்டு, தொழிற்சங்க நடவடிக்கைகளில் இறங்கப் போவதாக அறிவித்துள்ளது.

கற்பிட்டி பள்ளிவாசல்துறை முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கத்தின் புத்தளம் மாவட்டக் கிளைப் புனரமைப்புப் பொதுக்கூட்டத்தில், பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே சங்கத்தின் தேசியத் தலைவர் எம்.அனஸ் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

இல்கமுவ முஸ்லிம் மகா வித்தியாலய அதிபர் ஏ.எம்.ஜவாத் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் தொடர்ந்து உரையாற்றிய அவர்,புத்தளம் மற்றும் குருணாகல் மாவட்டப் பாடசாலைகளில் கடமையாற்றும் அதிபர், ஆசிரியர்களுக்கு நிதிப் பற்றாக்குறையைக் காரணம் காட்டி, சுற்றறிக்கைக்கு அமைவான பதவி உயர்வுகள் வழங்கலிலும், அதற்கமைவான சம்பள மாற்றியமைப்புக்களிலும் அநீதி இழைக்கப்பட்டு வருவதாக பாதிக்கப்பட்டவர்களால் சங்கத்தின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

குறிப்பாக இலங்கை ஆசிரியர் சேவைக்கு உள்ளீர்த்தபின் பதவி உயர்வு, உயர் கல்வித் தொழிற்தகைமைக்கேற்ற நியமனத்தின்பின் பதவியுயர்வு, தகைமை பெற்ற தினத்தில் முற்திகதியிட்டபின் நிரந்தர நியமனம் முதலானவற்றை அனுமதிக்கும், 2005/4, சுற்று நிருபம் அதனை அமுலாக்குவதற்கான பொது ஆலோசனைக் கோவை, 2008/45, 2009.03.16 ஆம் திகதிய கடிதம், 2008/50, 2008/50 (I), 2009. 09.02 ஆம் திகதிய கடிதம், 2009/25, 2009/27, 2011/30 ஆம் இலக் கங்களைக் கொண்ட நிரல் கல்வி அமைச்சின் சுற்றறிக்கைகள் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை.

இதன் காரணமாக 387, 387(IV), 37/92, 95/07(I), 02/97, 97/5, 15/2003, 09/2004, 6/2006, 6/2006(IV), 28/2010 முதலான சுற்றறிக்கைகளின் சம்பள மாற்றங்கள் கூட இந்த அதிபர், ஆசிரியர்களுக்கு சரியாகக் கிடைக்கப்பெறவில்லை எனத் தெரிய வருகின்றது. இதன் காரணமாக சங்கம் தொழிற்சங்க நடவடிக்கைகளுக்குச் செல்லும் நிர்ப்பந்த நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது-என்றார். (த-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜேர்மன் செல்கிறார் மன்மோகன்



புதுடில்லி, ஏப்.10

இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் இன்று ஜேர்மன் பயணமாகின்றார். மூன்று நாள்கள் அவர் ஜேர்மனியில் தங்கியிருப்பார் என்று கூறப்படுகிறது.

அவருடன் வெளியுறவு அமைச்சர் சல்மான்குர்ஷித், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர்மேனன், வெளியுறவுத்துறை செயலாளர் ரஞ்சன் மத்தாய் ஆகியோரும் உடன் செல்கின்றனர்.

எதிர்வரும் 12ஆம் திகதி ஜேர்மன் ஜனாதிபதி கோச்சிம் கவுக்கை பிரதமர் மன்மோகன் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

அதேவேளை, இந்தியா-ஜேர்மனி இடையேயான ராஜிய உறவுகள் ஆரம்பிக்கப்பட்டு 60 ஆண்டுகள் நிறைவு பெறுவதை குறிக்கும் வகையில் பல்வேறு கலாசார நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன. அவற்றிலும் பிரதமரும், குழு வினரும் கலந்துகொள்ளவுள்ளனர். (ற)

# ஈழத்தமிழர் மீது திடீர்ப் பாசம்

## தேர்தலுக்காகவே என்கிறார் வீரமணி

சென்னை, ஏப்.10

ஈழத் தமிழர்கள் மீது தற்போது பா.ஜ.க. காட்டும் திடீர்ப் பாசம் தேர்தல் வாக்குகளை அடிப்படையாக கொண்டதே என்று தெரிவித்துள்ளார் திராவிடர் கழகத் தலைவர் வீரமணி.

இதுகுறித்து அவர் கருத்து வெளியிடுகையில்,

''தற்போது பா.ஜ.க. கட்சி ஈழத் தமிழர்கள் குறித்து உருகுகிறது. பா.ஜ.க. தலைவர் யஷ்வந்த் சின்ஹா ஈழத் தமிழர்கள் குறித்து உருக்கமான கருத்துக்களைக் கூறுகின்றார். ஆனால் எதிர்க் கட்சித் தலைவர் சுஷ்மா சுவராஜோ அதற்கு எதிரான கருத்துக்களைக் கூறுகின்றார்.

அண்மையில் அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் பேசிய சுஷ்மா சுவராஜ்,

இலங்கை போர்க்குற்றம் புரிந்தது என்பதில் உடன்பாடில்லை, இந்திய மத்திய அரசின் வெளியுறவுக் கொள்கையை மாற்றச் சொல்ல மாட்டோம், தனி நாடு, தமிழீழம் என்ற கருக்களை ஏற்க மாட்டோம் என்று கூறியிருந்தார்.

இந்த நிலையில் பா.ஜ.க. தலைவர் யஷ்வந்த் சின்ஹா கூறிவரும் கருத்துக்களை பா.ஜ.கவின் உத்தியோகபூர்வ கருத்துக்கள் என்று எவ்வாறு ஏற்க முடியும்.

தமிழ்நாட்டு மக்களுக்கு ஈழ ஆதரவு உணர்வு என்ற மயக்கத்தை ஊட்டி, அந்த மயக்கத்திலாவது வாக்குகளைப் பறிக்க முயற்சிக்கிறது பா.ஜ.க.

வெளியுறவுக் கொள்கைகளைப் பொறுத்தவரை பா.ஜ.கட்சிக்கும், காங்கிரஸ் கட்சிக்கும் வேறுபாடுகள் எதுவும் இல்லை. இவர்களால் ஈழத் தமிழர்களுக்கு எந்த வித நன்மையும் கிடைக்கப் போவதில்லை - என்று தெரிவித்தார். (ற)

# இந்திய இராணுவம் எதற்கும் தயாராக இருத்தல் அவசியம்

புதுடில்லி, ஏப்.10

இந்திய இராணுவத்தினர் எந்தநேரத்திலும், எதற்கும் தயார் நிலையில் இருத்தல் அவசியம் என்று இந்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் ஏ.கே. அந்தோனி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் குறிப்பிடுகையில்:-

'' இந்தியாவின் எல்லைப் பகுதிகளில் எந்த வேளையிலும் பிரச்சினைகள் தோன்றலாம். சீனா மற்றும் பாகிஸ்தான் பகுதி களில் இருந்து வரும் அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளும் வகையில் இந்தியப் படைகள் எந்த நேரமும் தயாராக இருக்க வேண்டும்.

சீனாவின் வளர்ந்து வரும் இராணுவக் கட்டமைப்பும், பாகிஸ்தானின் தற்போதைய நிலையும் இந்தியாவின் எல்லைப் பகுதியில் இந்திய இராணுவத்தினர் எந்த நேரமும் தயார் நிலையில் இருக்க வேண்டியதன் அவசியத்தை எடுத்துரைப்பதாக உள்ளது.

இந்திய இராணுவம், தொடர்ந்து தனது கட்டமைப்பில் முன்னேற்றத்தை ஏற்படுத்திக் கொண்டே இருக்க வேண்டும்- என்று கூறினார். (ற)

### மீனவர் கொலை தொடர்பான கருத்தால்

# அமெரிக்காவையே அசத்திய கருணாநிதி



நியூயோர்க், ஏப்.10

''தமிழக மீனவர்களைக் கடத்திப் படுகொலை செய்தது தமிழீழ விடுதலைப் புலிகளே'' என்று கருணாநிதி கூறிய கருத்தால் அமெரிக்காவே ஆச்சரியமடைந்ததாம்.

இந்தத் தகவல் தற்போது விக்கீலீக்ஸ் வெளியிட்டுள்ள அமெரிக்காவின் இரகசிய ஆவணங்கள் மூலம் தெரிய வந்துள்ளது.

விக்கிலீக்ஸ் வெளியிட்டுள்ள ஆவணத்தில் இது குறித்துக் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-


2007ஆம் ஆண்டு கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த 5 மீனவர்கள் படுகொலை செய்யப்பட்டனர். 12 மீனவர்கள் கடத்தப்பட்டனர். இந்த மீனவர்களை கடத்தியதும் படுகொலை செய்ததும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் தான் என்று 2007ம் ஆண்டு சட்டசபையில் தி.மு.க. தலைவர் கருணாநிதி பேசியிருந்தார்.

இதை சென்னையில் உள்ள அமெரிக்க தூதரகம் பதிவு செய்து டெல்லி, கொல் கத்தா, மும்பை மற்றும் கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகங்களுக்கும் வோஷிங்டனுக்கும் அனுப்பி வைத்திருக் கிறது.

'தமிழக சட்டசபையில் முதல்வராக இருக்கும் போது கருணாநிதி இவ்வாறான கருத்தை வெளியிட்டிருப்பது ஆச்சரியமானது. இந்தக் குற்றச்சாட்டால் தமிழகத்தில் புலிகளுக்கான ஆதரவு மீண்டும் குறையும் வாய்ப்புள்ளது.

சட்டசபையில் பேசிய கருணாநிதி, தாம் விடுதலைப் புலிகளை ஆதரிக்கவில்லை என்றும் அவர்களுக்கு இங்கே இடம் இல்லை என்றும் அவர்கள் இங்கே எந்த ஒரு நடவடிக்கையிலும் ஈடுபடவில்லை என்றும் அவர்களது குறிக்கோளும் நோக்கமும் வேறுபட்டதாக இருக்கிறது என்றும் கூறியிருக்கிறார்.

இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக பேசும் தி.மு.க., இலங்கைக்கு 'நேரடியாக' இந்திய அரசு இராணுவ உதவி அளிப்பதை ஆதரிக்காது என்ற நிலைப்பாட்டில் உள்ளது - என்று அந்த ஆவணம் விரிந்து செல்கின்றது. (ற)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கனடா ஜெயசாயி சுப்ப சென்ரரின் SALE

சித்திரை புதுவருட அதிரடி மலிவு விற்பனை

ஆரம்பம் 01.04.2013-15.04.2013 வரை

வண்ணமயமான புத்தம் புதிய டிசைன்கள்
கவர்ச்சிகரமான விலைக்கழிவுகள்
உங்கள் தெரிவுகளுக்கு முந்திக் கொள்ளுங்கள்.
சாறி, சல்வார் வாங்குபவர்களுக்கு அதற்குரிய
காப்பு, நெக்கிலஸ் செட் இலவசம்
எம்மிடமுள்ள எல்லா நவநாகரீக
உடுபுடவைகளும் 10% . 50%
விலைக்கழிவில் பெற்றுக்கொள்ளலாம்.

SALE



(35879)(8.14)

CANADA JAYASAJI SUPER CENTRE,
114, Navalar Road, Jaffna.
(Kasthiriyar/Navalar Road Junction)
Tel-021-2219393

STORE HOURS-வாரத்தில் 7 நாள்களும்
காலை 9.00--இரவு 9.00 வரை


# மரண அறிவித்தல்கள்

## திருமதி சின்னம்மா சுப்பிரமணியம்



கைதடி வடக்கு, கைதடியைப் பிறப்பிடமாகவும், அரியாலை 100, இலந்தைக்குளம் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னம்மா சுப்பிரமணியம் கடந்த (06.04.2013) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-இளையபிள்ளை தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு-சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கார்த்திகேசு சுப்பிரம ணியத்தின் அன்பு மனைவியும், சுசிலாதேவி (சுவிஸ்), சிலோசனா (அரியாலை), சர்வேஸ்வரன் (சுவிஸ்), ஞானேஸ்வரன் (கண்ணன், ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தாயும், கிருஸ்ணபிள்ளை, காலஞ்சென்ற நடராசா மற்றும் நாகேஸ்வரி, இந்திராணி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், நவரட்ணம், இராஜேஸ்வரன், மாலினி, மேகலா ஆகியோரின் பாசமிகு மாமியும், அரியநாயகம், பூமணி, சண்முகநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனியும், சிவலிங்கம், சிவபாக்கியம் ஆகியோரின் சிறியதாயும், சஜீவன், உதயசங்கர், ஜனனி, டிலானி, லக்சிகா, ஜனார்த்தன், டனோஜா, சாருஜா, கஜித், அபினா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.04.2013) வியாழக்கிழமை மு.ப. 10.00மணியளவில் அரியாலையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல. 100, இலந்தைக்குளம் வீதி,
அரியாலை.

(35882)(14.17)

தகவல்:
பிள்ளைகள்.

## மார்க்கண்டு கிரிதரன் (கிரி)



மானிப்பாய் மேதர்ஸ் ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வதிவிடமாகவும், கொழும்பு, யாழ்ப்பாணம் விமாகி நிறுவன உரிமையாளருமான மார்க்கண்டு கிரிதரன் (கிரி) நேற்று (09.04.2013) செவ்வாய்க்கிழமை காலை 7 மணியளவில் இறைபதமெய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற மார்க்கண்டு - சுகிர்தரட்ணம் தம்பதியரின் ஏகபுத்திரனும், காலஞ் சென்ற இராஜரட்ணம் - சுகிர்தமலர் தம்பதியரின் மருமகனும் கலா ரோகினியின் அன்புக் கணவரும், அம்ரிஷாவின் அருமைத் தந்தையும் கலாமாலினியின் மைத்துனரும் சூரியகுமாரின் சகலனும், பிரசாந்தி, தருஷ்ணன் ஆகியோரின் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 6/1B, லயாட்ஸ் வீதி, பம்பலப்பிட்டியில் அவரின் இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (11.04.2013) வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் இறுதிக்கிரியைகள் நடை பெற்று பி.ப 4 மணியளவில் பொரளை கனத்தை மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

6/1B, லயாட்ஸ் வீதி,
பம்பலப்பிட்டி.
011 250 8875

(சி/8139)(6.7)

தகவல்:
கலாரோகினி கிரிதரன் (மனைவி)
அம்ரிஷா கிரிதரன் (மகள்)

# மரண அறிவித்தல்கள்

## வேலுப்பிள்ளை சின்னத்துரை

(முன்னாள் ஊழியர், காங்கேசன் சீமெந்து தொழிற்சாலை)



நீர்வேலி தெற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை சின்னத் துரை நேற்று (09.04. 2013) செவ்வாய்க்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை- வள்ளிப்பிள்ளை தம்பதியரின் மகனும் காலஞ்சென்ற தங்கம்மாவின் அன்புக்கணவரும் கமலாம்பிகையின் அன்புத் தந்தையும் சண்முகலிங்கத்தின் மாமனும் செல்வரஞ்சினி (ஆசிரியை), உதயச்சந்திரன்(பிரான்ஸ்), சசிகுமார் (யாழ். போதனா வைத்தியசாலை), திருமாறன்(எரிபொருள் நிரப்பு நிலையம், யாழ். ப.நோ.கூ.சங்கம்) ஆகியோரின் ஆசைப் பேரனும் லதூரஷன், மகீஜா, கிஷானன், பானுஷன், கஜானன், கௌசன், மிதுனஜா, டினுஷ்கான், சயூரி, லக்சயன் ஆகியோரின் ஆசைப்பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.04.2013) புதன்கிழமை ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி தெற்கு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீர்வேலி தெற்கு,
நீர்வேலி.

(35875)(8.16)

தகவல்:
குடும்பத்தினர்.

## கந்தப்பிள்ளை இராசா



மயிலிட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும் ஊரெழு கிழக்கை வசிப்பிடமாகவும் கொண் ட கந்தப்பிள்ளை இராசா நேற்று (09.04.2013) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தப்பிள்ளை -சிவகாமை தம்பதியரின் அன்பு மகனும், நாகேஸ்வரியின் அன்புக் கணவரும்,காலஞ்சென்ற செல்லம் மற்றும் தங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரரும், சந்திரதாசன், சந்திரகுமாரன், சந்திரலேகா, சந்திரவதனி, சந்திரகலா ஆகியோரின் அன்புத் தந்தையும், துஸ்யந்தன், தவகுமார், நந்தீஸ்வரன், ராதிகா, விமலநாயகி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், ஹரிகரன், நிஷானி, டினேஸ், பிரியங்கா, கவிநயன், தனுஸ்கா, கரணிகா, அபிசாந் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.04.2013) புதன் கிழமை பி.ப. ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பொக்கணை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஊரெழு கிழக்கு.

(35880)(14.17)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## செல்வி பிரியங்கா குகதாஸன்



வாகையடி, மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பிரியங்கா குகதாஸன் நேற்று (09.04.2013) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் குகதாஸன் -லலீலா தம்பதியரின் ஏக புத்திரியும், பாக்கியராஜா (பிரான்ஸ்), விலோஜன் ஆகியோரின் அருமைச் சகோதரியும், கந்தசாமி, காலஞ்சென்ற பூமணி, காலஞ்சென்றவர்களான நல்லதம்பி- பரிமளம் தம்பதியரின் பேர்த்தியும், தேவிமலர் (பிரான்ஸ்), சசீலா (நோர்வே), சுசீலா (பிரான்ஸ்), ஜீவதாஸ் (பிரான்ஸ்), யசோதன் (பிரான்ஸ்) ஆகியோரின் பெறாமகளும், பரமேஸ்வரன் (பிரான்ஸ்), ஜெயரஞ்சி (கைதடி ஆயுர்வேதம்), காலஞ்சென்ற பிரபாஜினி, சிவநேசராஜா ஆகியோரின் மருமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.04.2013) புதன்கிழமை பி.ப 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக குச்சப்பிட்டி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வாகையடி, மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.
(35889)(14.9)
தகவல்:
குடும்பத்தினர்.

## தம்பையா தர்மலிங்கம்



(ஓய்வுநிலை சிரேஷ்ட தேயிலை தொழிற்சாலை முகாமையாளர், பூண்டுலோயா)

வயாவிளானைப் பிறப்பிடமாகவும் கொக்குவிலை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா தர்மலிங்கம் நேற்று (09.04.2013) செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா- சின்னப்பிள்ளை தம்பதியரின் புத்திரனும் வல்லிபுரம் - கதிராசிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் சற்குணத்தின் (ஓய்வுபெற்ற ஆசிரியை பூண்டுலோயா சீன், தமிழ் வித்தியாலயம்) பாசமிகு கணவரும் விக்னேஸ்வரன் (ஆசிரியர்- மீசாலை விக்னேஸ்வரா மகாவித்தியாலயம்), நிர்மலா (ஆசிரியை- நுவரெலிய பீற்று தமிழ் மகா வித்தியாலயம்), நகுலேஸ்வரன் (ஹொலன்ட்) ஆகியோரின் அன்புத் தந்தையும் தெய்வநாயகி (ஆசிரியர், சாவகச்சேரி சக்தி அம்மன் அ.த.க. பாடசாலை) ரவிச்சந்திரன் (அதிபர், நுவரெலிய கார்லபேக் தமிழ் வித்தியாலயம்), காந்தமலர் (ஹொலன்ட்) ஆகியோரின் அன்பு மாமனும் மதுமதி, சாருமதி, நிவேதா, அஸ்வின், நர்மதா, பூஜா ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்றவர்களான நடராசா, நாகம்மா, பழநியாண்டி, யோகம்மா மற்றும் பொன்னம்பலம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் சிவபாக்கியம், பத்மநாதன் (ஓய்வுநிலை, மாவட்ட காணிப்பதிவாளர், கச்சேரி, யாழ்ப்பாணம்), சத்தியசீலன் (ஓய்வுநிலை பிரதித் திட்டப் பணிப்பாளர், NERHP மன்னார்- வவுனியா), மகாலிங்கம் (ஓய்வுநிலை வடபிராந்திய முகாமையாளர், தென்னைப் பயிர்ச்செய்கைச் சபை) ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.04.2013) புதன்கிழமை பி.ப.4 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று கொக்குவில் இந்து மயானத்தில் அன்னாரின் பூதவுடல் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சாந்தகம், நாமகள் வீதி (புற்றடி வைரவர்),
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
(35888) (23-14)
தகவல்: குடும்பத்தினர்.

## திருமதி தனேஸ்வரி சபாரத்தினம்



குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும் வங்கியடி இணுவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட தனேஸ்வரி சபாரத்தினம் கடந்த (08.04.2013) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம்- செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - குட்டிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் சபாரத்தினத்தின் பாசமிகு மனைவியும் சித்திரா (ஜேர்மனி), ரஞ்சனா (ஜேர்மனி), காஞ்சனா (டென்மார்க்), கல்பனா (ஜேர்மனி), ரத்தினா (ஜேர்மனி), சத்தியநேசன், பூம்புவனேஸ்வரி (ஆசிரியை, யா/ஏழாலை சைவமகாஜன வித்தி.) ஆகியோரின் அருமைத் தாயும் சுதேஸ்வரன் (ஜேர்மனி), தவராசா (ஜேர்மனி), அமரேசன் (டென்மார்க்), பாலச்சந்திரன் (ஜேர்மனி), சந்திரகலா (யாழ். உடுவில் முருகமூர்த்தி வித்தி.), ராகேஸ் (ஜேர்மனி) ஆகியோரின் மாமியும் சுவாதி, சோபியா, சுஜி, றொமி (ஜேர்மனி), டேசி, கௌசி (டென்மார்க்), ரமீலா (ஜேர்மனி), சந்தோஷ், விகஸ்னி ஆகியோரின் பாசமுள்ள பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (09.04.2013) செவ்வாய்க்கிழமை பி.ப.2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வங்கியடி, இணுவில்
கிழக்கு, இணுவில்.
(35883) (23-14)
தகவல்: குடும்பத்தினர்.
சத்தியநேசன் 021 300 7106, 0776125026.


### மணல் விற்பனைக்கு

கட்டட வேலைகளுக்கான கண்டாவளை ஆற்றுமணல் மிகவும் குறைவான விலையில் டிப்பர்கள் மூலம் நேரடியாக உங்கள் இடங்களுக்கே விநியோகிக்கப்படும்.

(35867)(8.14) தொடர்பு: 0755110767

### கொங்கிறீற் கற்கள் விற்பனைக்கு

மெசின் மூலம் அரிந்த (12x6x4), (12x6x6), (16x8x6) கொங்கிறீற் கற்களும், வேலித்தூண்களும் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 0214918276


# மரண அறிவித்தல்

## திருமதி ஞானப்பூ அரசரட்ணம்

இளவாலையைப் பிறப்பிடமாகவும், 43/1, சோமசுந்தரம் அவனியூ, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் தற்போது பிரான்சில் வசித்து வந்தவருமான திருமதி ஞானப்பூ அரசரட்ணம் கடந்த (31.03.2013) அன்று பிரான்சில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சூசைப்பிள்ளை-சூசானம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற மரியாம்பிள்ளை அரசரட்ணத்தின் அன்பு மனைவியும் அமலதாஸ், ஜேசுதாசன்(மனோகரன்), தேவதாஸ்(சந்திரன்), காலஞ்சென்ற மேரி பற்றிமா மற்றும் மேரி லீவியற் ஜசிந்தா(சறோ), மேரி யூலியற் கலிஸ்ரா(றோகினி), மேரி வுளொசி வெனிற்றா(சாந்தி), கிறிஸ்ரி ஜெயதாஸ், லிசிநொய்லா ஆகியோரின் அன்புத்தாயும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனைகள் நாளை (11.04.2013) வியாழக்கிழமை பிரான்சில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

43,சோமசுந்தரம் அவனியூ,
யாழ்ப்பாணம்.
(35873)(8.14)
தகவல்:
ம.தேவதாஸ் (சந்திரன்),
ம.அமலதாஸ்.

# கண்ணீர் அஞ்சலி

எமது வித்தியாலய ஆசிரியை திருமதி தெய்வநாயகி விக்கினேஸ்வரன்
அவர்களின் பாசமிகு மாமனார்

## தம்பையா தர்மலிங்கம்

(முன்னாள் முகாமையாளர், பூண்டுலோயா தேயிலை தொழிற்சாலை)
அவர்கள் நேற்று (09.04.2013) செவ்வாய்க்கிழமை காலமான செய்தியறிந்து ஆழ்ந்த துயரடைவதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்
யா/ சாவகச்சேரி சக்தி அம்மன் வித்தியாலயம்.

# மரண அறிவித்தல்கள்

## வேலுப்பிள்ளை கிருஷ்ணன்



(முன்னாள் சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரி ஆசிரியரும் ஓய்வு பெற்ற உப அதிபர், வேலாயுதம் மகாவித்தியாலயம், பருத்தித்துறை)

சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் தெருமூடி மடத்தடி, அல்வாயை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை கிருஷ்ணன் நேற்று (09.04.2013) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - இளையபிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சிவசம்பு - இராசம்மா தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற சரஸ்வதியின் அன்புக் கணவரும் இந்திரா (கனடா), பொகீந்திரன் (பல்கலைக்கழகம்), குகதாசன் (பொறியியலாளர் R.D.A., ஒட்டுசுட்டான்), தேவகி, வசந்தா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் பரமானந்தன் (கனடா), யமுனா, ரஜனி (ஆதார வைத்தியசாலை, வவுனியா), காலஞ்சென்ற விபுலானந்த அடிகள், கெங்காதரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனும் காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, நாராயணபிள்ளை மற்றும் சண்முகதேவன், காலஞ்சென்ற ஜானகி ஆகியோரின் அன்புச் சகோதரனும் சயந், பிரியந்தி, நேத்ரா, ராகுல், தார்மீகன், அபிநயா, ஏரகன், தாரகா, திவாகரன், முரளி, கார்த்திக், கார்த்திகா, சங்கவி, அமிர்தா, அபிராம் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.04.2013) புதன்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கருகம்பன் இந்து மயானத்துக்கு தகனக் கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தெருமூடி மடத்தடி,
அல்வாய் கிழக்கு,
அல்வாய்.
(சி/8295) (23-14)
தகவல்:
குடும்பத்தினர்.

## திருமதி சரஸ்வதி கந்தையா



வசாவிளானைப் பிறப்பிடமாகவும், மட்டுவில் தெற்கை வசிப்பிடமாகவும் தற்போது கோண்டாவில் மேற்கை(உப்பு மடம் சந்தி) வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி கந்தையா நேற்று (09.04.2013) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் கந்தையாவின் அன்பு மனைவியும், காலஞ் சென்றவர்களான வல்லிபுரம்-தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற ஆறுமுகம்-தெய்வானைபிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், பரமேஸ்வரி, பாக்கியராணி, கந்தசாமி, புஸ்பராணி, ஈஸ்வரன் ஆகியோரின் அன்புத் தாயும், தனபாலசிங்கம், இராசரத்தினம்(ராசன்), இரத்தினசிங்கம், மைதிலி ஆகியோரின் அன்பு மாமியும், தர்மஜா, குமாரதாஸ், சங்கரதாஸ், அமஸ்கவி, கர்ஜின், தாரணியா, தனுஷன், தாரகன், கௌசிகன், றஜீவன், றதீஸ், கல்பனா, கஜானி, சாருகா, அபிசாத் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.04.2013) புதன்கிழமை கோண்டாவில் மேற்கில் (உப்பு மடம் பிள்ளையார் கோயிலடி) உள்ள அவரது இல்லத்தில் மு.ப.11.00மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோண்டாவில் மேற்கு,
உப்புமடம் சந்தி.
தகவல்: குடும்பத்தினர்.
077 4156901, 077 3526902

## திருமதி இராசமணி கனகசபை

(ஓய்வு பெற்ற பரிசாரகர், (அற்ரேன்டர்)-யாழ்.போதனா வைத்தியசாலை)



நல்லூரைப் பிறப்பிடமாகவும், இருபாலை, அரசடி வீதி, கொய்யாத்தோட்டத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசமணி கனகசபை நேற்று (09.04.2013) காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா கனகசபையின் அன்பு மனைவியும், நாகேஸ்வரி, நாகேஸ்வரன், பரமேஸ்வரன்(U.S.A) ஆகியோரின் பாசமிகு தாயும் குணரத்தினம், யோகமலர், இராஜி (U.S.A) ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அரசடி வீதி,இருபாலை, கோப்பாய்.
0776442563,021-223-0236
தகவல்:
வெ.செ.குணரத்தினம்(மருமகன்)

## திருமதி சிவபூசனம் சுப்பையா

புங்குடுதீவு, 3ஆம் வட்டாரத்தினைப் பிறப்பிடமாகவும் 6ஆம் வாய்க்கால், ஆலடிச்சந்தி உருத்திரபுரம் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவபூசனம் சுப்பையா நேற்றுமுன்தினம் (08.04.2013) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முரசுமோட்டை காசிப்பிள்ளை-பொன்னம்மா தம்பதியரின் மூத்தமகளும், செல்லமுத்து சுப்பையாவின் அன்பு மனைவியும், கனகசெந்தில்நாதன்(பிரான்ஸ்), கனகேஸ்வரி(பிரான்ஸ்), கணேசராஜன்(உத்தியோகத்தர், கால்நடை உற்பத்தி திணைக்களம், வைத்தியர், ஆரணி 'வைத்திய நிலையம், திருவையாறு), குணசேகரம்( இளங்கோவன் புடைவை வாணிபம் பரந்தன் சந்தி), உதயகுமார் (சாரதி, கரைச்சிப் பிரதேசசபை), நந்தன் (பிரபா, செல்வநகர்), நகுலன்(சிற்றி மெடிக்கல் உரிமையாளர், கிளிநொச்சி), ஆகியோரின் அன்பு தாயும், ஆரணி, ஜெயரூபி, கோகிலவேணி, அகிலேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியும், தமிழ்மாறன், சுகன், சுவேதா(இந்தியா), துசிதன், அமிர்தனா, அவிநயா(திருவையாறு), நியந்தன், டியானிகா(முருகண்டி), மருதாளன், துவாரணி(கிளிநொச்சி), இளங்கோவன், பவதாரணி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சபரீசன், அபிசா, சஜீபன், காத்திகா, கஸ்தூரி, காண்டீபன், கோபிகா ஆகியோரின் பெரியதயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 6ஆம் வாய்க்கால், ஆலடிச் சந்தி, உருத்திரபுரம். எனும் விலாசத்தில் இன்று (10.04.2013) புதன்கிழமை பி.ப.02.00மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநகர் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

6ஆம் வாய்க்கால், ஆலடிச்சந்தி, உருத்திரபுரம்
தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## புடினுக்கு எதிராக புதுவித ஆர்ப்பாட்டம்

ஹனோவெர், ஏப்.10

ஜேர்மனியில் ஹனோவெர் நகரில் ரஷ்ய தொழில் முனைவோரை ஊக்குவிக்கும் வர்த்தகக் கண்காட்சி நடைபெறுகிறது. அதில் பங்கேற்க ரஷ்ய ஜனாதிபதி விளாடி மிர் புடின் மற்றும் ஜேர்மனி ஜனாதிபதி ஏஞ்சலா மார்க்கெல் ஆகியோர் சென்றிருந்தனர்.

அப்போது மூன்று பெண்கள் திடீரென்று மேலாடைகளைக் கழற்றி வீசி விட்டு புடினுக்கு எதிராகக் கோஷம் எழுப்பினர். ரஷ்யாவில் பாடல் குழு ஒன்று கைது செய்யப் பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்த எதிர்ப்புப் போராட்டம் நடைபெற்றுள்ளது.

இத்தகைய போராட்டத்தைச் சற்றும் எதிர்பார்க்காத புடின் அதிர்ச்சியடைந்து விழித்தபடி நின்றார்.

பின்னர் ஆர்ப்பாட்டம் நடத்தியவர்களை பொலிஸார் தூக்கிச் சென்றனர். (ற)

## ஆப்கனில் குண்டுவெடிப்பு

### 9 பேர் சாவு; 22 பேர் காயம்



காபூல், ஏப்.10

ஆப்கனில் நேற்றுமுன் தினம் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் 9 பேர் உயிரிழந்தனர். 22 பேர் காயமடைந்தனர்.

வீதியோரம் மறைத்து வைக்கப்பட்டிருந்த குண்டு வெடித்ததில் வீதியில் பயணித்துக் கொண்டிருந்த பஸ் தூக்கி வீசப்பட்டது. குண்டு வெடிப்பில் சிக்கி 9 பேர் உயிரிழந்தனர். 3 குழந்தைகள் உட்பட 22 பேர் காயமடைந்து மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காயமடைந்தவர்களில் சிலரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது என்று மருத்துவமனை வட்டாரங்கள் குறிப்பிடுகின்றன.

தாக்குதலுக்கு இதுவரை எந்த அமைப்பும் உரிமை கோராத போதும் தலிபான் தீவிரவாதிகள் இந்தத் தாக்குதலை நடத்தியிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் தெரிவித்துள்ளனர். (ற)

# வெளியேறி விடுங்கள்

## தென்கொரியாவிலுள்ள வெளிநாட்டவரை எச்சரிக்கிறது வடகொரியா

பியாங்யாங், ஏப்.10

தென்கொரியாவில் உள்ள வெளிநாட்டினர் அனைவரையும் உடனடியாக வெளியேறுமாறு எச்சரித்துள்ளது வடகொரியா.

தென்கொரியா மற்றும் அமெரிக்கா மீது அணு ஆயுதத் தாக்குதல் நடத்த உள்ளதாக எச்சரித்துள்ள நிலையிலேயே இந்த அறிவிப்பை விடுத்துள்ளது வடகொரியா.

இதுகுறித்து வடகொரியாவின் பசுபிக் பிராந்தியத்துக்குப் பொறுப்பான பேச்சாளர் கூறுகையில்,

''போர் ஏற்படும் பட்சத்தில் தென்கொரியாவில் வசிக்கும் வெளிநாட்டவரைத் துன்புறுத்த நாங்கள் விரும்பவில்லை. அவர்களை உடனடியாக தென்கொரியாவை விட்டு வெளியேறிச் செல்லும்படி அறிவுறுத்துகின்றோம்'' - என்று தெரிவித்துள்ளார்.

இதேவேளை, வடகொரியா அணு ஆயுதப் போரில் ஈடுபடுமானால் பேரழிவைச் சந்திக்க நேரிடும் என்று எச்சரித்துள்ளார் ரஷ்ய ஜனாதிபதி புடின்.

''அமெரிக்கா நடத்தவிருந்த அணு ஆயுத ஏவுகணைச் சோதனையை தாமதப்படுத்திய விவகாரம் மிக முக்கியமான நடவடிக்கை என்றே நான் கருதுகிறேன். இந்த நடவடிக்கைக்காக நாம் அமெரிக்காவுக்கு நன்றி கூற வேண்டும்.

இதை வடகொரியா உள்ளிட்ட நமது பங்குதாரர்கள் கவனிக்க வேண்டும். அனைவரும் அமைதி காத்து, பிரச்சினைகளுக்கு ஒன்றிணைந்து நல்ல முறையில் தீர்வு காண முன்வர வேண்டும். அணு ஆயுதப் போர் ஏற்பட்டால் 1986ஆம் செர்னோபில் அணு உலை விபத்தினால் ஏற்பட்ட பேரழிவைக் காட்டிலும் மிக அதிகமான நாசத்தை வடகொரியா சந்திக்க நேரிடும்''- என்று தெரிவித்துள்ளார் புடின். (ற)



பலஸ்தீனம் — இஸ்ரேல்

## அமைதி முயற்சியில் அமெரிக்கா

நியூயோர்க், ஏப்.10

இஸ்ரேலுக்கும் - பலஸ்தீனக்கும் இடையே அமைதியை ஏற்படுத்தும் முயற்சியில் அமெரிக்கா ஈடுபட்டுள்ளது.

இந்த நடவடிக்கையின் ஒரு கட்டமாக அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஜோன் கெர்ரி திடீரென்று பாலஸ்தீனம் சென்று பலஸ்தீன பிரதமர் முகமது அப்பாசுடன் பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

அதில் இஸ்ரேல்- பலஸ்தீனம் இடையே அமைதிப் பேச்சு தொடங்குவது குறித்து விவாதிக்கப்பட்டதாகத் தெரிகிறது. ஆனால் இந்தச் சந்திப்பு விவாதம் குறித்து தெளிவான விவரம் வெளியிடப் படவில்லை.

ஜோன் கெர்ரி கடந்த மூன்று வாரங்களில் தற்போது மூன்றாவது தடவையாக பாலஸ்தீனம் சென்று பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார் என்பது குறிப் பிடத்தக்கது. (ற)

## அமெரிக்காவின் கதியே பிரான்ஸுக்கும் எச்சரிக்கிறது அல்- குவைதா இயக்கம்

இஸ்லாமாபாத், ஏப்.10

அமெரிக்காவுக்கு ஏற்பட்ட கதி போன்றே பிரான்ஸுக்கும் ஏற்படும் என்று அல்-குவைதா அமைப்பின் தலைவர் அல்- ஜவாகிரி எச்சரித்துள்ளார்.


தற்போது மாலியில் நிலை கொண்டுள்ள பிரான்ஸ் படைகள் அல்- குவைதா மற்றும் இஸ்லாமிய தீவிரவாத அமைப்புகளுக்கு எதிராகத் தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர்.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவிக்கும் போதே ஜவாகிரி மேற்கண்டவாறு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து ஜவாகரி குறிப்பிட்டுள்ளதாவது:-

''இஸ்லாமிய நாடுகளைச் சேர்ந்த மக்கள் ஒன்றுபட்டு, அந்நியப் படைகளை வெளியேற்ற வேண்டும். கடவுளின் அனுமதியுடன் மாலியில் பிரான்ஸை எதிர்கொள்வோம். ஈராக் மற்றும் ஆப்கனில், அமெரிக்காவுக்கு ஏற்பட்ட கதிதான், மாலியில் பிரான்ஸுக்கு ஏற்படும்.'' - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கப் படைகளின் தாக்குதலில் பின்லேடன் உயிரிழந்ததை அடுத்து அல்-குவைதா அமைப்புக்கு அய்மான் அல்-ஜவாகிரி தலைவராக உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ற)



சீனாவின் கிழக்கு மாகாணங்களில் பறவைக் காய்ச்சல் ஏற்பட்டு 6 பேர் உயிரிழந்த நிலையில் இதன் பாதிப்புக்கு ஆளானோரையும் கண்டுபிடித்து தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது.

மேலும் இந்தக் காய்ச்சல் பரவாமல் தடுக்க ஆயிரக் கணக்கான கோழிகள், பறவைகள் கொல்லப்பட்டதுடன் ஷாங்காய் நகரிலுள்ள சந்தைகளும் மூடப்பட்டன.

இந்தநிலையில் பறவைக் காய்ச்சல் தாக்கத்துக்கு ஆளானோர் எண்ணிக்கை நேற்று 21 ஆக உயர்ந்துள்ளது. இருப்பினும் சீன அரசு எடுத்து வருகின்ற தடுப்பு நடவடிக்கைகள் குறித்து உலக சுகாதார இயக்கம் பாராட்டியுள்ளது. அதனால் மக்கள் பீதியோ, பதற்றமோ கொள்ளத் தேவையில்லை என்று அதன் பிரதிநிதி மிக்கேல் ஒலேரி தெரிவித்துள்ளார். (ற)

## வில்லியமின் ஆசைக்கு 'கேட்' போட்டார் கேட் மிடில்டன்

லண்டன், ஏப்.10

பிரிட்டன் இளவரசர் வில்லியம் - கேட் மிடில்டன் திருமணம் கடந்த 2011ஆம் ஆண்டு நடைபெற்றது. தற்போது கேட் மிடில்டன் ஏழு மாதக் கர்ப்பிணியாக உள்ளார்.

இந்தநிலையில் இளவரசர் வில்லியத்துக்கு ஓர் விநோத ஆசை வந்துள்ளதாம். தனது வாரிசு இந்த பூமியில் பிறக்கும் இனிய தருணத்தை காணொலியாக எடுக்க வேண்டும் என்று திட்டமிட்டுள்ளார் வில்லியம்.

ஆனால் வில்லியத்தின் இந்த வினோத ஆசைக்கு 'கேட்' போட்டுள்ளார் வில்லியம் கேட். அந்தக் காணொலி, சமூக விரோதிகளின் கையில் கிடைத்து அந்த காட்சிகள் இணையதளத்தில் வெளியாகி விடக்கூடும் என்று கேட் மிடில்டன் அச்சப் படுகிறார் என்று தெரியவருகிறது.

தலைகீழாக நின்றாவது பிரசவத்துக்கு முன்னர் மனைவியின் எண்ணத்தை மாற்றி காணொலி எடுத்தே தீருவது என்பதில் உறுதியாக உள்ளாராம் வில்லியம். (ற)


## சிரியாவில் 4 பத்திரிகையாளர் கடத்தப்பட்டனர்

டமஸ்கஸ், ஏப்.10

சிரியாவில் பணியாற்றி வந்த இத்தாலியைச் சேர்ந்த 4 பத்திரிகையாளர்கள் கடத்தப்பட்டுள்ளனர் என்று கூறப்படுகிறது.

சிரியாவில் கடந்த 2 ஆண்டுகளாக உள்நாட்டு போர் நடைபெற்று வருகிறது. அங்கு செய்தி சேகரிப்புப் பணிகளில் ஈடுபட்டிருந்த இத்தாலியைச் சேர்ந்த பத்திரிக்கையாளர்களே கடத்தப்பட்டுள்ளனர். இந்தத் தகவலை இத்தாலி வெளியுறவுத் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. துருக்கி எல்லை அருகே அவர்கள் கடத்தப்பட்டனர் என்று கூறப்படுகிறது. எனினும் இது குறித்து மேலதிக தகவல் எதுவும் கிடைக்கப் பெறவில்லை. (ற)

## நேட்டோ ஹெலிகொப்டர் ஆப்கனில் நொறுங்கியது



காபூல், ஏப்.10

ஆப்கனில் நேட்டோ படைகளுக்குச் சொந்தமான ஹெலி ஒன்று விபத்துக்குள்ளாகியுள்ளது. வழக்கமான ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த ஹெலியே விபத்துக்குள்ளாகியது.

திடீரென ஏற்பட்ட இயந்திரக்கோளாறு காரணமாக விமானி ஹெலியை தரையிறக்க முயன்ற போதும் ஹெலி கட்டுப்பாட்டை இழந்து வயலில் வீழ்ந்து நொருங்கியது என்று கூறப்படுகிறது.

நொறுங்கிய ஹெலியில் விமானி உட்பட 3 நேட்டோ வீரர்கள் பயணம் செய்ததாகவும், அவர்களில் 2 பேர் அமெரிக்கர்கள் எனவும் அதிகாரப்பூர்வமற்ற தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும் நேட்டோ படைத் தலைமையகம் உயிரிழப்புகள் குறித்து எந்தத் தகவலையும் வெளியிடவில்லை. (ற)

## தாட்சரின் தலைமையை இழந்து விட்டோம்- மூன்

நியூயோர்க், ஏப்.10

இங்கிலாந்தின் முன்னாள் பிரதமர் மார்கரெட் தாட்சர் மறைவுக்கு ஐ.நா. பொதுச் செயலர் பான் கீ- மூன் இரங்கல் தெரிவித்துள்ளார்.

''நாம் அவரது சிறந்த தலைமையை இழந்து விட்டோம். இங்கிலாந்திலும், உலக அளவிலும், உறுதியான தலைவராக அவரை நாம் நினைவில் கொள்வோம். இங்கிலாந்தின் முதல் பெண் பிரதமர் என்கிற முறையில், பெண்களிடையே சமத்துவத்துக்கான நம்பிக்கையை விதைத்தவர்.'' என்று தனது இரங்கலில் தெரிவித்துள்ளார் மூன்.

அத்துடன் 1989ஆம் ஆண்டு நடைபெற்ற ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையில் காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் விளைவுகள் பற்றி பேசியதையும் நினைவு கூர்ந்த மூன் இந்த பிரச்சினைகள் குறித்து பேசிய முதல் தலைவர் அவர் தான் என்றும் குறிப்பிட்டார். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வற்றாப்பளை தாயே! அக்கிரமத்தை அழித்து ஒழித்திடு!!



வரலாற்றுச் சிறப்புமிக்க வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தில் வருடாந்த பங்குனி உற்சவ பொங்கல் விழா சிறப்பாக நடைபெற்றது. இதில் கண்ணகி அம்பாள் திருமஞ்சப் பவனியாக வந்து அடியார்களுக்கு அருள் பாலிப்பதையும், அடியார் கூட்டம் அலைமோதுவதையும் படத்தில் காணலாம். (ஐ-435)

# விளையாட்டு மைதானம் இல்லாததால் நெருக்கடி

துணுக்காய் அ.த.க.பாடசாலைக்கு நிரந்தர மைதானம் இன்மையால் பாடசாலை நிகழ்வுகளை நடத்த முடியாதுள்ளதாகவும் மாணவர்களது உடற்கல்வி செயற்பாடுகளுக்கும் தடையாக இருப்பதாகவும் பாடசாலை நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

150 வரையான மாணவர்கள் கல்விகற்கும் இந்தப் பாடசாலைக்கு விளையாட்டு மைதானத்துக்கு காணி வழங்க வேண்டும் என்று பிரதேச செயலக கூட்டங்களில் கோரப்பட்டு வந்தது என்றும் இதுவரை காணி கிடைக்கவில்லை என பாடசாலை நிர்வாகத்தினர் தெரிவிக்கின்றனர்.

மைதானம் இல்லாத காரணத்தால் முதலாம் தவணையில் நடத்தப்பட வேண்டிய இல்ல மெய்வன்மைப் போட்டியை நடத்த முடியவில்லை என பெற்றோர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இது தொடர்பாக துணுக்காய் பிரதேச செயலர் சி.குணபாலனிடம் கேட்டபோது பாடசாலைக்கென 12 ஏக்கர் காணி துணுக்காய் சந்தைக் கருகில் ஒதுக்கப்பட்டுள்ளதெனவும் இந்தக் காணியை பாடசாலை நிர்வாகம் ஏற்கவில்லை எனவும் தெரிவித்தார். (ஐ-18)

# விவசாயிகளுக்கு நிவாரணம் பாரபட்சமின்றி வழங்குக

## சிறிதரன் எம்.பி.கோரிக்கை

கிளிநொச்சி,ஏப்.10

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டத்தில் மழை காரணமாக கடந்தகால போக நெற்செய்கையால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க பொருளாதார அபிவிருத்தி அமைச்சு முன்வர வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தென்பகுதி மாவட்டங்களில் வெள்ளம், வறட்சியால் பாதிக்கப்படும் விவசாயிகளுக்கு உடனடியாக நிவாரணம் வழங்கப்படுகின்றன. ஆனால் வடக்கு, கிழக்கில் அவ்வாறு வழங்கப்படுவதில்லை.

கடந்த போகத்தில் எமது விவசாயிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். வெள்ளம் காரணமாக அறுவடையே செய்யாத விவசாயிகள் உள்ளனர். கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த காலபோகத்தில் 27851 ஏக்கர் நெற்பயிர் வெள்ளத்தால் அழிந்த நிலையில் 8516 குடும்பங்கள் நேரடியாகப் பாதிக்கப்பட்டுள்ளன. இவற்றின் அழிவுப் பெறுமதி 13 கோடியே 20 இலட்சம் ரூபாவாகும். தவிர கடந்த வறட்சிக் காலத்திலும் 3906 ஏக்கர் நெற் பயிர்ச் செய்கை எரிந்து நாசமாகியது. இதில் 1779 குடும்பங்கள் பாதிக்கப்பட்டன.

எனினும் இவர்களுக்கு எந்த வகையான கொடுப்பனவும், நிவாரண வசதிகளும் செய்து கொடுக்கப்படவில்லை. எனவே பாரபட்சமற்ற முறையில் இந்த விவசாயிகளுக்கும் நிவாரணம் வழங்கி உதவ வேண்டும் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)


## அறிவித்தல்

மானிப்பாய் கிராம உப அலுவலகம் (ஆனைக் கோட்டை)
வட்டாரம்- 08
கல்லுண்டாய் றோட்
ஆதன இலக்கம்- 41/19

வட்டாரம் 08 கல்லுண்டாய் றோட், ஆனைக்கோட்டை ஆதன இலக்கம் 41/19 இல் அமைந்துள்ள (உறுதிப்படி வட மாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம் மேற்குப்பகுதி மானிப்பாய் கோயிற் பற்று ஆனைக்கோட்டை இறை "காக்கை தீவு வெளி" எனும் பெயருள்ள விஸ்தீரணம் றூட் 02 பேச்சஸ் 4.435 இவ்வாதனமானதுநவாலி கிழக்கு மானிப்பாய் நல்லையாவும் பெண் மாணிக்கம் அவர்களால் நவாலி கிழக்கு மானிப்பாயினைச் சேர்ந்த செல்வராசா-புஸ்பராசா ஆகிய இவருக்கு குறித்த ஆதனம் பிரசித்த நொத்தாரிஸ் மாணிக்கம்-தியாகராசா முகதாவில் நிறைவேறிய 13292 ஆம் இலக்க 2011.06.16 ஆம் திகதிய அறுதி உறுதி மூலம் குறித்த ஆதனமானது தமக்கு சொந்தம் என தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உப அலுவலக (ஆனைக் கோட்டை) ஆதனப் பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார். இக் "காக்கை தீவு வெளி" றூட் 02 பேச்சஸ் 4.435 இவ் வாதனத்திற்கு உரிமை கோருபவர்கள் யாராவது இருந்தால் அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகள் ஆவணங்களுடன் எழுத்து மூலமாக 14 நாள்களுக்குள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன். அவ்வாறு எவராவது எவ்வித உரிமையும்14 நாள்களுக்குள் கோரப்படாதவிடத்து இவ் வாதனம் செல்வராசா-புஸ்பராசா என்பவர் பெயருக்கு மேற்குறித்த ஆதனத்தினை பெயர் மாற்றம் செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதனை அறியத் தருகின்றேன்.

தவிசாளர்
வலி. தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்.
(35860)(6,7,11)


## மரண அறிவித்தல்கள்

### திருமதி நிர்மலாதேவி ஜெகநாதன்



கொக்குவில் கிழக்கை பிறப்பிடமாகவும் கொழும்பு, மட்டக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நிர்மலாதேவி ஜெகநாதன் நேற்றுமுன்தினம் (08.04.2013) திங்கட்கிழமை அன்று அமெரிக்காவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயாத்துரை -இலச்சுமிப்பிள்ளை தம்பதியரின் கனிஸ்ட புத்திரியும், காலஞ்சென்ற செல்லத்துரை-ருக்குமணி தம்பதி யரின் மூத்த மருமகளும், ஜெகநாதனின் அன்புத் துணைவியும், மேகரூபன், மாதுரி ஆகியோரின் அன்புத் தாயாரும், நிரூஜாவின் மாமியாரும், விசாகனின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

சே.ஜெகநாதன் (கணவர்)
தொ.பே.இல:011 252 5460 (3561)(6.7.11) சே.ரகுநாதன் (மைத்துனர்)

### திருமதி கற்பகம் இராஜகோபால்



அராலி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கற்பகம் இராஜகோபால் கடந்த 06.04.2013 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் இராஜகோபால் (ஓய்வூதியர்) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான விஸ்வநாதர்- விசாலாட்சி தம்பதியரின் அருமை மகளும், காலஞ்சென்றவர்களான சபாபதிப்பிள்ளை - ஆச்சிமுத்து தம்பதியரின் மருமகளும், கமலாதேவி (ஜேர்மனி), ஈஸ்வரி (ஜேர்மனி), சோதிலிங்கம் (பொறியியலாளர் - கனடா) ஆகியோரின் அருமைத் தாயும், ஸ்ரீரஞ்சன் (ஜேர்மனி), ஸ்ரீகாந்தன் (ஜேர்மனி), சிவப்பிரியா (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும், நிலோஜினி, நிரோஜினி, நிவேதினி அருள்ராஜ், இரஞ்சுதன், ரொபியாஸ், சாமந்தி, சரண் ஆகியோரின் அருமைப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான நல்லம்மா, காமாட்சி, வள்ளியம்மை, தம்பிராசா மற்றும் ஏரம்புவின் அருமைச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான பொன்னம்மா, கனகம்மா, நல்லம்மா, சின்னம்மா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.04.2013) வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூனாவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
தொ.பே. 077 9362 723,
077 1804 066.

அராலி தெற்கு,
வட்டுக்கோட்டை.

(35862) (45.6.7)

# உருத்திரபுரம் கூழாவடியில் தாராளமாக கசிப்பு

கிளிநொச்சி,ஏப்.10

கிளிநொச்சி உருத்திரபுரம் கூழாவடிப் பகுதியில் கசிப்பு உற்பத்தியும் விற்பனையும் அதிகரித்துக் காணப்படுகிறது. இதனால் இளவயதினர் கசிப்புக்கு அடிமையாக வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளதாக அந்தப் பகுதி சமூக ஆர்வலர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

உருத்திரபுரம் கூழாவடிப் பகுதியில் உள்ள சில கடைகளில் சட்டவிரோத மதுபானமாகிய கசிப்பு விற்கப்பட்டு வருகின்றது. அதுமட்டுமன்றி சில வீடுகளிலும் கசிப்பு வியாபாரம் இரகசியமான முறையில் இடம்பெற்று வருவதாகக் கூறப்படுகின்றது.

குறிப்பாக கூழாவடிச் சந்தியில் மாலை நேரத்தில் கசிப்புப் பிரியர்களின் அட்டகாசம் அதிகரித்துள்ளதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். மறைவான இடங்களில் இளவயதினரும் சட்டவிரோத மதுபாவனைக்கு அடிமையாகின்றனர். இவ்வாறு கசிப்பு உற்பத்தியும் விற்பனையும் அதிகரித்துக் காணப்படுவது குறித்து பொறுப்பு வாய்ந்தவர்கள் உரிய நடவடிக்கை எடுக்க முயற்சிப்பதில்லை எனவும் கூறப்படுகின்றது.

கூலித் தொழிலாளர்கள் பலர் சட்டவிரோத மதுவுக்கு அடிமைப்பட்டுள்ளமையால் குடும்பப் பொருளாதாரத்தைக்கூட முன்னேற்ற முடியாத இக்கட்டான சூழ்நிலை உருவாகியுள்ளதாகக் கவலை வெளியிடப்பட்டுள்ளது. இவை தவிர குடும்ப வன்முறைகளும் சமூக விரோதச் செயல்களும் அதிகரித்துள்ளதாகவும் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது. இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்தி உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஐ-426)


## உடனடி வேலைவாய்ப்பு

மத்திய கிழக்கு கட்டாரை தலைமையகமாகக் கொண்டு 2006 ஆம் ஆண்டு முதல் இயங்கும் Morning Star Trading & Contracting கம்பனியில் மத்திய கிழக்கில் வேலை செய்வதற்கு பின்வரும் வேலை வாய்ப்புக்கள் உள்ளன.

| தொழில் | எண் | சம்பளம் QAR |
|---|---|---|
| 1. மேசன் | 20 | 1200 |
| 2. தச்சு தொழிலாளி | 20 | 1200 |
| 3. உருக்கு பொருத்துபவர் | 25 | 1200 |
| 4. HVAC தொழிநுட்பவியலாளர் | 05 | 1400 |
| 5. பிளம் பேர்ஸ் | 05 | 1200 |
| 6. HVAC Duct தொழிநுட்பவியலாளர் | 05 | 1200 |
| 7. எலக்ரீசியன்ஸ் | 05 | 1200 |
| 8. வெல்டேஸ் | 05 | 1300 |
| 9. உதவியாளர்கள் | 10 | 750 |
| 10. பெயின்ரர் | 05 | 1100 |

நிபந்தனைகள்
* இரண்டு வருட கால ஒப்பந்தம்
* வீசா இலவசம்
* மருத்துவ வசதி, தங்குமிட வசதி என்பன வழங்கப்படும்
* ஒப்பந்த காலத்திற்குள் அனைத்து வேலையாளருக்குமான காப்பு றுதி.

மேலதிக தொடர்புகளுக்கு:
அ.ஸ்ரனிஸ்லாஸ் 077 911 9075 (35856)(6.7.11)

சித்திரைப் புத்தாண்டு சிறப்புச் சலுகை
20.04.2013 வரை மட்டுமே




IIS OFFICE AUTOMATION
254, Stanly Road,Jaffna.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிபொருள் விலையை உடன் குறையுங்கள்

## கயந்த கருணாதிலக்க எம்.பி. வலியுறுத்து




கொழும்பு,ஏப்.10

எரிபொருள் விலையைக் குறைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் கயந்த கருணாதிலக்க வலியுறுத்தி உள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உலக சந்தையில் எரிபொருளின் விலை கணிசமான அளவு குறைவடைந்துள்ளது. இந்த விலைக் குறைப்பின் பயனாக இலங்கையில் எரிபொருள்களுக்கான விலையைக் குறைக்க வேண்டும்.

உலக சந்தையில் மசகு எண்ணெயின் விலை 85 டொலர்களுக்கு விற்பனை செய்யப்படுகின்றது. அதன்படி லாபம் வைத்துக் கொண்டு டீசல் ஒரு லீற்றரை 100 ரூபாவுக்கு விற்பனை செய்ய முடியும். இவ்வாறு எரிபொருள் விலையை குறைப்பதனால், மின்சாரக் கட்டண மற்றும் பேருந்து கட்டண உயர்வை தடுக்க முடியும்.

கடந்த பெப்ரவரி மாதம் உலக சந்தையில் ஒரு பீப்பாய் மசகு எண்ணெய் 118 டொலர்களுக்கு விற்பனை செய்யப்பட்ட காரணத்தினால், எரிபொருளுக்கான விலையை அரசு உயர்த்தியிருந்தது. தற்போது உலக சந்தையில் மசகு எண்ணெயின் விலை 85 அமெரிக்க டொலர்களாக வீழ்ச்சியடைந்துள்ளது. -என்றார். (ச)

## சர்வதேச அழுத்தத்தை எதிர்நோக்க மக்களின் ஒத்துழைப்பு அவசியம்

### சர்வதேசத்தில் இலங்கை விவகாரத்துக்கு கூடுதல் முக்கியத்துவம் என்கிறார் பீரிஸ்



கொழும்பு,ஏப்.10

சர்வதேச ரீதியாக நாடு எதிர்நோக்கி வரும் அழுத்தங்களை வெற்றிகொள்ள மக்களின் ஒத்துழைப்பு அவசியம் தேவை என்று வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்தார்.

திஸ்ஸமஹாராம பிரதேசத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

சர்வதேச ரீதியாகப் பிரயோகிக்கப்பட்டு வரும் அழுத்தங்கள் மற்றும் சவால்கள் குறித்து மக்கள் புரிந்து கொள்ள வேண்டியது மிக முக்கியம் என்று அவர் சுட்டிக் காட்டினார்.

குறுகிய காலப்பகுதியில் நாடு முன்னேற்றத்தை பதிவு செய்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

உலகின் சில நாடுகள் பக்கச்சார்பாக செயற்படுகின்றன. அந்த நாடுகள் இலங்கை அடைந்துள்ள அபிவிருத்திகளை கவனத்தில் கொள்ளத் தவறியுள்ளன என்று அவர் கூறினார்.

சர்வதேசத்தில் இலங்கை விவகாரங்களுக்கு கூடுதல் முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகின்றது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## மேர்வினின் செயலரின் மகனுக்கு பிடியாணை

கொழும்பு,ஏப்.10

களனி பிரதேச சபை உறுப்பினர் ஹசித்த மடவல சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக அமைச்சர் மேர்வின் சில்வாவின் நாடாளுமன்ற செயலாளரின் மகனுக்கு எதிராக நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடவத்தை பதில் நீதிவானே இந்தப் பிடியாணையை பிறப்பித்தார். சட்டமா அதிபரின் ஆலோசனையின்பேரில் அமைச்சர் மேர்வின் சில்வாவின் நாடாளுமன்ற செயலாளர் சரத்குமார் எதிரிசிங்க பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார்.

பிரதான சந்தேகநபரினால் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் மோட்டார் சைக்கிள் மாற்றியமைக்கப்பட்டதற்கான சான்றுகள் இருப்பதாக அரச பகுப்பாய்வாளர் அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாக குற்றப்புலனாய்வு பொலிஸார் நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் தெரிவித்தனர்.

கொலைக்குப் பயன்படுத்திய ஆயுதங்களை அமைச்சர் மேர்வின் சில்வாவின் நாடாளுமன்ற செயலாளரின் மகன் இஷான் எதிரிசிங்க தந்ததாக சந்தேகநபர்கள் தம்மிடம் கூறியதாக குற்றப்புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

குறித்த நபர் நாட்டைவிட்டு ஓடிவிட்டதாக விசாரணைகளில் இருந்து தெரியவருகின்றது என்று நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர்.

குறித்த நபர் நாட்டுக்குள் வந்தவுடன் கைது செய்யவேண்டும் என நீதிவான் பிடியாணை பிறப்பித்தார். அத்துடன் ஏனைய மூன்று சந்தேகநபர்களையும் எதிர்வரும் 18 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறும் நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (ச)

## பிள்ளையானின் சகா சு.கவில்

கொழும்பு,ஏப்.10

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் முன்னாள் தேசிய அமைப்பாளரும், கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினருமான எட்வின் கிருஸ்ணானந்தராஜா(பிரதீப் மாஸ்டர்) ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இணைந்துள்ளார்.

அவர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வவுணதீவு பிரதேச இணைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளதாக அந்தக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர் அருண் தம்பிமுத்து தெரிவித்தார். (ச)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
14.04.1927

மறைவு
10.04.2012



திருமதி
பொன்னம்மா கந்தையா

அன்பின் உறைவிடமாய் வாழ்ந்து எமக்கு
அறிவூட்டி வழிகாட்டி வாழ வைத்த அன்னையே
என்றென்றும் உமை மறவோம்
ஓராண்டென்ன ஒரு நூறு ஆண்டு சென்றாலும்
ஒளி விளக்காய் நின்று எம்மை வாழ வைத்த
உம் உழைப்பை என்றென்றும் நினைத்திருப்போம்.

உசன், மிருசுவில். (27825)(6.7.11) குடும்பத்தினர்.


## ரியாத் பறந்த விமானம் மத்தளவில் திடீர் இறக்கம்

கொழும்பு,ஏப்.10

கொழும்பிலிருந்து ரியாத் நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த ஸ்ரீலங்கன் விமானச் சேவைக்குச் சொந்தமான விமானம் ஒன்று தொழில்நுட்பக் கோளாறு காரணமாக அவசரமாகத் தரையிறக்கப்பட்டது.

குறித்த விமானம் கட்டுநாயக்கா விமான நிலையத்திலிருந்து புறப்பட்டு இலங்கையின் வான் பரப்பின் ஊடாகப் பறந்து கொண்டிருந்த போது அதன் இயந்திரப் பகுதியில் ஏற்பட்ட கோளாறு காரணமாக அம்பாந்தோட்டையிலுள்ள மத்தள விமான நிலையத்தில் அவசரமாகத் தரையிறக்கப்பட்டது.

சுமார் 350 பயணிகளுடன் தரையிறங்கிய இந்த விமானம் பத்து மணி நேர தாமதத்தின் பின்னரே தனது பயணத்தை மீண்டும் ஆரம்பித்தமை குறிப்பிடத்தக்கது. (ச)


## பாராட்டி வாழ்த்து

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில்
நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில்
முன்பள்ளி ஆசிரியர்களுக்கான
டிப்ளோமா பட்டத்தைப் பெற்ற
திருமதி செல்வகுமார்
மேரிதேவகுமாரி
(உடுத்துறை தூய மரியாள்
முன்பள்ளி ஆசிரியர்)
அவர்களை மேன்மேலும் பல
பட்டங்கள் பெற வாழ்த்துகின்றோம்.



Best Wishes

கொடுக்குளாய்,
ஆழியவளை. (35805)(6,7.11)

வாழ்த்துவோர்:
குடும்பத்தினர்.



## ஆயுள்வேத வைத்தியர்களினதும் மக்களினதும் கவனத்திற்கு!

- நீங்கள் முகப்பரு, சூரிய வெப்பத்தால் ஏற்படும் வரட்சி, கருவளையம், இளநரை, முடி உதிர்வு, பொடுகு, வாதம், கைகால் விறைப்பு, மூட்டுவலி, முதுகுவலி, இடுப்புவலி, சொறி, சிரங்கு, தோலை இடுக்குகளில் வரும் சிரங்கு என்பவற்றால் அவதிப்படுகின்றீர்களா?
- இந்நோய்களுக்கு பல வழிமுறைகளிலும் தீர்வு தேடிச் சலித்து விட்டீர்களா? இந்நோய்களுக்கான தீர்வாக ஆயுள்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட தைலங்கள் மூலிகைப் பவுடர்கள் எம்மிடம் உண்டு.

## ஆயுள்வேத வைத்தியர்களின் கவனத்திற்கு!

- சர்க்கரை நீரிழிவு, கொலஸ்ரோல், இரத்த அழுத்தம், நரம்புத் தளர்ச்சி, சளி, வரட்சி இருமல், மலச்சிக்கல், வெள்ளைபடுதல், மாதவிடாய்க்கால அதிக உதிரப்போக்கு, பாலியல் பிரச்சினை, இழுப்பு, சிறுநீர்க் கோளாறு, வாதம் போன்ற பலவகை நோய்களுக்குரிய அரிஷ்ட ஆஸவங்கள், தைலங்கள், சூரணங்கள், குளிகைகள், சிரப் வகைகளை மிகக்குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
- மற்றும் தரமான பஸ்பங்கள், செந்தூரங்கள், கோரோசனை மாத்திரைகள், கஸ்தூரி மாத்திரைகள், பாலசஞ்சீவி பேதிக் குளிகைகள் போன்றவற்றை மிகக்குறைந்த விலையிற் பெற்றுக்கொள்ளலாம்.

## சிதாரா முடக்கத்தான் அமுக்கரா சிறப்!

இளமைத் துடிப்பு மிக்க முழுமையான திருப்திகரமான பாலியல் இன்பத்தைப் பெற பாவியுங்கள் "சிதாரா முடக்கத்தான் அமுக்கரா சிறப்"

நீங்கள் நாட வேண்டிய இடம்:
**சிவா நறுமணப் பூங்கா**
இல: 288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சத்திர சந்திக்கு அருகில்)
தொலைபேசி: 021 222 2567
(சி/7245)(45,6.7)



## மலிவு விற்பனை

- சித்திரை வருடத்தை முன்னிட்டு சகலவிதமான வீட்டுத் தளபாடங்கள் தேக்கு, முதிரை, வேம்பு கட்டில்கள், மேசைகள், கதிரைகள், ஆர்பிகோ மெத்தைகள், கணினி மேசைகள் மலிவு விலை யில்
- மெத்தை கொள்வனவு செய்பவர்களுக்கு தலையணை ஒன்று இலவசம்.

தொடர்பு: இல.75, (சிவன் கோயில் முன்பாக)
ஸ்ரேசன் ரோட், சுன்னாகம்.
077 634 1119 (35632)(6.7.11)



## காணி விற்பனைக்கு

- நாவற்குழி, கோரதீவு வீதியில் நாவற்குழி மகாவித்தியாலயத்திற்கு அருகில் 6 பரப்புக் குடியிருப்புக் காணியும்
- சாவகச்சேரி, கைதடி நுணாவில் ஆராய்ச்சி தோட்டத்தில்,கிணற்றுடன் 2 ஏக்கர் குடியிருப்புக் காணியும் உடன் விற்பனைக்கு உண்டு

தொடர்பு: 077 803 0676,
077 592 0911 (27815)(6.7.11)



## மாதகல் நுணசை முருகன் ஆலயத்தின் மஹோற்சவத்தை முன்னிட்டு தற்காலிக கடைகள் அமைப்பதற்கான ஏலம்

நாளை (11.04.2013) வியாழக்கிழமை மாலை 5.00 மணிக்கு ஆலய முன்றிலில் தற்காலிக கடைகள் அமைப்பதற்கு ஏலம் நடைபெறும். கடை எடுக்கும் சகல வியாபாரிகளும் அன்றைய தினம் சமுகமளித்து நிதியை செலுத்தி இடத்தை ஒதுக்கீடு செய்து பற்றுச்சீட்டைப் பெற்று உறுதி செய்யும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

மாதகல். (35817)(8.6.7)
கணபதிப்பிள்ளை பாலசுப்பிரமணியம்
தர்மகர்த்தா.



## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
25.09.1977

உதிர்வு
16.03.2010

அமரர்
தம்பிராசா குகரூபன்
(முன்னாள் மின்னியலாளர், இலங்கை போக்குவரத்துச் சபை, கோண்டாவில்)

ஆண்டுகள் மூன்று சென்றாலும்
ஆறவில்லை உங்கள் நினைவுகள்
என்றும் எம்மை விட்டகலாத தெய்வமே!
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்.

நாச்சிமார் வீதி.
நவாலி வடக்கு. நவாலி. (C/8128)(6.7.11)

என்றும் உங்கள் நினைவுகளுடன்
மனைவி, பிள்ளை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 30 வருடங்கள் நடைபெற்றது போர்; இறுதி நாள்களில் நடந்ததே கேள்வி

## நாம் எதைச் செய்தாலும் குற்றச்சாட்டுக்களே மீதம் என்கிறார் ஜனாதிபதி

கொழும்பு,ஏப்.10

முப்பது வருடங்கள் போர் நடந்த போதும் இறுதி ஐந்து நாள்களில் என்ன நடந்தது என்ற கேள்வியே ஜெனிவாவில் எழுப்பப்படுகிறது என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

பாதெனிய, அநுராதபுரம் நெடுஞ்சாலையை நேற்று முன்தினம் திறந்து வைத்த பின்னர் மக்கள் பேரணிக் கூட்டத்தில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாம் நாட்டுக்காக எதைச் செய்த போதும் குற்றச்சாட்டுக்களும் விமர்சனங்களுமே எஞ்சியுள்ளன. மனித உரிமையை மதிப்பதில் நாம் அன்றும் இன்றும் முன்னணியிலுள்ளவர்கள்.

போர் முடிந்தாலும் தற்போது ஜெனிவாவில் எம்முடன். போர் ஆரம்பித்துள்ளது. இங்குள்ளவர்களும் ஜெனிவாவில் சென்று சாட்சியமளிக்கின்றனர். நாம் எதைச் செய்த போதும் குற்றச்சாட்டுக்களே எமக்கு மீதமாகியுள்ளன.

30 வருடங்கள் போர் தொடர்ந்த போதும் இறுதி ஐந்து நாள்களில் என்ன நடந்தது என்ற கேள்வியே ஜெனிவாவில் எழுப்பப்படுகிறது.போர் இடம்பெற்றபோது, எதிரிகள் எதிர் எதிரில் துப்பாக்கிகளுடன் சந்திக்க நேரும்போது முந்தியவர்கள் சுட நினைப்பர். போரில் இது இயல்பு தான்.

ஜெனிவா மாநாட்டில் கூறுவது போல் பெரும் எண்ணிக்கையான மக்கள் போரில் உயிரிழக்கவில்லை. நாம் மனித உரிமை தொடர்பில் மிகவும் உயர் மட்டத்தில் கவனம் செலுத்துபவர்கள். மனித உரிமை மற்றும் மக்களின் அடிப்படை உரிமைகள் சம்பந்தமாக நாம் அன்று தொட்டு இன்று வரை முக்கியமளிப்பவர்கள். இப்போதும் அதனை மதிப்பவர்கள்.-என்றார். (ச)




## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
03.10.1944
விண்ணில்
10.04.2011



அமரர்
**சின்னப்பு நடராசா**
(SLAS)

காலத்தின் ஒளிவிளக்காய் எம்மோடு இருந்து
இன்று உயிரோடு உயிராய் கலந்துவிட்ட தெய்வமே அப்பா
கண்முன்னே வாழ்ந்த காலங்கள் கனவாகிப் போனதுவோ
ஆயிரம் உறவுகள் இருந்தாலும் உங்கள் அன்புக்கு ஈடாகுமோ
மண்ணைவிட்டு விண்சென்று ஈராண்டு ஆனபோதும்
மண்ணில் நாம் உள்ளவரை மறப்போமா உங்கள் நினைவை.

ஆசிரியர் விடுதி,
தி/கோணேஸ்வரா இந்துக் கல்லூரி,
திருகோணமலை.

குடும்பத்தினர்.
077 236 5340

(34984)(5.6.7)


# சிறிசேனவின் பதவியை தூக்க சு.கட்சிக்குள் சூழ்ச்சித் திட்டம்

## ஐ.தே.க. தெரிவிப்பு

கொழும்பு,ஏப்.10

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் தற்போது சூழ்ச்சிகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. அமைச்சரும் கட்சியின் பொதுச்செயலாளருமான மைத்திரிபால சிறிசேனவை அந்தப் பதவியிலிருந்து நீக்குவதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது - என்று ஐக்கிய தேசியக் கட்சியின் ஊவா மாகாணசபை உறுப்பினர் திஸ்ஸ குட்டியாராய்ச்சி தெரிவித்தார்.

ராஜகிரியவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

'நீல அலை' என்ற புதிய நடவடிக்கையை அரசு ஆரம்பித்துள்ளது. இந்த நடவடிக்கையிலிருந்து அமைச்சர் மைத்திரிபால சிறிசேன ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளார். 'நீல அலை' நடவடிக்கைக்காக ஒட்டப்பட்டுள்ள சுவரொட்டிகளில் அமைச்சர் டலஸ் அழகப்பெரும, பஸில் ராஜபக்ஷ மற்றும் ஜனாதிபதியின் புகைப்படங்களே இருக்கின்றன .

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேனவின் இடத்துக்கு அந்தக் கட்சியைச் சேர்ந்த அமைச்சர் டலஸ் அழகப்பெருமவை நியமிப்பதற்கான சூழ்ச்சிகள் இடம்பெற்று வருகின்றன என்றார் திஸ்ஸ குட்டியாராய்ச்சி. (ச)

# 13 இல் மரங்களை நடும் வேலைத் திட்டம்

வாழ்வின் எழுச்சி வேலைத் திட்டத்தின் கீழ் நாடளாவிய ரீதியில் நான்கு லட்சம் மரக்கன்றுகளை நடும் வேலைத் திட்டம் எதிர்வரும் 13 ஆம் திகதி ஆரம்பித்துவைக்கப்பட வேண்டும் என்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சு சகல திணைக்களத் தலைவர்களையும் கேட்டுள்ளது.

ஒரு கிராம சேவகர் பிரிவில் 200 பயனாளிகள் வீதம் நாடு தழுவிய ரீதியில் உள்ள 14,000 இற்கும் மேற் பட்ட கிராம சேவகர் பிரிவுகளிலும், பாடசாலைகள், அரச அலுவலகங்களிலும் இந்த மரம் நடும் வேலைத் திட்டம் மேற்கொள்ளப் படவுள்ளது. இந்த வேலைத்திட்டத்துக்குத் தேவையான மரக் கன்றுகள் பிரதேச செயலகங்கள் ஊடாக பயனாளிகள், அரச நிறுவனங்களுக்கு வழங்கப்படும் என்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் வாழ்வின் எழிச்சிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ச)


## மூன்றாம் ஆண்டு நினைவலைகள்



புவியீர்ப்பு
04 ★ 10 ★ 1947

விண்ணேற்பு
15 ★ 03 ★ 2010

அமரர்
**பொன்னையா இராமச்சந்திரன்**
(முன்னாள் முகாமையாளர்,வலி.கிழக்கு ப.நோ.கூ.சங்கம்)

*மூன்றாண்டுகள் ஆனதப்பா முடியவில்லை நாம் மீள*
*பாசப்புறா ஒன்று பங்குனித் திங்களதில்*
*பயனிவிட்டுப் பறந்ததெங்கே?*
*நேசம் கொண்ட இதயங்கள் நெருப்பில் நெகிழுதிங்கே*
*விதி என்று தேற்றினாலும் விலகாது நம் துயரம்*
*காலமும் ஆற்றாத கனமான காயமிது*
*எந்த உறவும் ஈடு செய்யாது எம் அப்பாவை*
*காலனால் கலைக்கப்பட்டது கனவுகள் மட்டுமே*
*நினைவுகள் நிழலாக தொடர்கின்றது*
*நிஜத் தெய்வம் நீங்களிருக்க சிலைத்தெய்வம் ஏதப்பா*
*தெய்வமாய் எம்முள்ளே என்றுமே இருப்பீர்கள்*
*உங்களின் ஆசியினாலே நம் வாழ்வு நடக்குமிங்கு*

சிறுப்பிட்டி கிழக்கு,
நீர்வேலி.

மனைவி,பிள்ளைகள்,
மருமக்கள்,பேரப்பிள்ளைகள்.

(35814)(5-6-7)



எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டை
முன்னிட்டு 14.04.2013 வரை மட்டும்

வழங்கும்
விசேட
அதிரடித் தள்ளுபடி

# ஈஸ்வரன் ரேடர்ஸ்



**Lumala**
**ஆண்கள் மிதிவண்டி - 11.500/=**
(சீற், கரியர், பெல், ஸ்ராண்ட், பூட்டு அடங்கலாக)



**Lumala**
**பெண்கள் மிதிவண்டி - 11.750/=**
(சீற், கரியர், பெல், ஸ்ராண்ட், பூட்டு அடங்கலாக)

## அத்துடன் Lumala மிதிவண்டி

உதிரிப் பாகங்கள் அனைத்தும் 30% தள்ளுபடி விலையில்

**உங்கள் தெரிவுக்கு இன்றே முந்துங்கள்**

மேலும்:

இலங்கை தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவால்,
அங்கீகரிக்கப்பட்ட சொகுசு பஸ் சேவை யாழ் - கொழும்பு - யாழ்.
சேவையும் நடைபெறுகின்றது.

விவசாயிகளின் நன்மையைக் கருத்தில் கொண்டு
வெங்காயம் ஒரு மூடைக்கு 14.04.2013 வரை 100/= மட்டும்.


# ஈஸ்வரன் ரேடர்ஸ்

இல.69, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 222 2813

(C78275)(2,6,7)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுவரெலியாவில் வசந்தகால காட்சிக்கூடம்



நுவரெலியா,ஏப்.10

இலங்கை தேசிய அருங்கலைகள் பேரவையின் காட்சிக் கூடங்களும் விற்பனை நிலையங்களும் நுவரெலியா மாநகர சபை மண்டபத்தில் அமைக்கப்பட்டுள்ளன.

இந்தக் கூடங்களில் பாரம்பரிய கலைகள் தொடர்பான உற்பத்திகளை மேற்கொள்ளும் அதிகளவானவர்கள் தமது உற்பத்திகளை காட்சிப்படுத்தியுள்ளனர்.

நுவரெலியா வசந்த காலம் மற்றும் தமிழ்-சிங்கள புத்தாண்டுக் காலத்தை இலக்காக கொண்டு அமைக்கப்பட்டுள்ள இந்தக் காட்சிக் கூடங்கள் பொது மக்களை கவர்ந்துள்ளன. அத்தோடு நமது நாட்டு பாரம்பரிய அருங்கலைகள் பற்றி தெரிந்துகொள்ளவும் வாய்ப்பளித்துள்ளது.

நுவரெலியாவில் முதன் முறையாக அமைக்கப்பட்டுள்ள இந்தக் காட்சிக் கூடங்களை இன்று புதன்கிழமைவரை மக்கள் பார்வையிட முடியும். (ச)

# மாற்றுத் திறனாளிகளுக்கு விசேட வேலைத் திட்டம்

மாற்றுத் திறனாளிகளின் கலை ஆர்வத்தினை மேம்படுத்தும் பொருட்டு அவர்களின் திறமைகளை தேசிய மட்டத்தில் பிரகாசிக்கச் செய்யும் வகையில் விசேட வேலைத்திட்டமொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மாற்றுத் திறனுள்ள இளைஞர், யுவதிகளின் கலை ஆர்வத்தைக் கண்டறிதல், அவர்களுக்கு சமூகத்தில் உயர்ந்த வரவேற்பைப் பெற்றுக் கொடுத்தல், அவர்களின் அறிவை மேம்படுத்திக் கொள்வதற்குத் தேவையான தரமான பயிற்சிகளை வழங்கல், முன்னணிக் கலைஞர்களின் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளல் ஆகிய நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் இந்த வேலைத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

மாவட்ட ரீதியாக செயற்படுத்தப்படவுள்ள இவ்வேலைத் திட்டத்தின் ஊடாக பாடல், இசைக்கருவி வாசித்தல், மனவளர்ச்சி குன்றியவர்களுக்கான நாட்டியம், வேறு குறைபாடுகள் உள்ளவர்களுக்கான நாட்டியம், பேச்சு ஆகிய பிரிவுகளில் போட்டிகள் நடத்தப்பட்டு வெற்றியாளர்களுக்கு விருதுகளும், பெறுமதிமிக்க பரிசுகளும் வழங்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. (ச)

## மாத்தளை மனித புதைகுழி விவகாரம்:

# பல்வேறு கோணங்களில் விசாரணை; 8 நிபுணர்களிடம் அறிக்கை பெற திட்டம்

மாத்தளை,ஏப்.10

மாத்தளையில் கண்டு பிடிக்கப்பட்ட மனிதப் புதை குழி எந்தக் காலத்தைச் சேர்ந்தது என்பதற்கான உறுதியான சான்றுகள் இதுவரை கிடைக்கவில்லை. எனினும் இது தொடர்பான முழுமையான விசாரணைகள் பலதரப்பினர்களால் பல்வேறு கோணங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையத்தின் பணிப்பாளர் லக்ஷ்மன் ஹுலுகல்ல தெரிவித்தார்.

நாட்டின் தற்போதைய நிலைமைகள் தொடர்பாக ஊடகங்களுக்கு விளக்கமளிக்கும் செய்தியாளர் மாநாடு நேற்றுமுன்தினம் கொழும்பிலுள்ள தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையத்தில் இடம்பெற்றது. இந்த மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மனிதப் புதைகுழி தொடர்பான விசாரணைகளை அரசு எந்தக் காரணத்தைக் கொண்டும் நிறுத்தப் போவதில்லை. மனிதப் புதைகுழி கண்டுபிடிக்கப்பட்ட காலம் தொடக்கம் குற்றப்புலனாய்வு திணைக்கள பொலிஸார் விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

மனிதப் புதைகுழி குறித்து முழுமையான விசாரணைகளை நடத்துவதற்கென நியமிக்கப்பட்டுள்ள ஜனாதிபதி விசேட ஆணைக் குழுவில் அங்கம் வகிப்பவர்களின் பெயர், விவரங்கள் விரைவில் வெளியிடப்படவுள்ளன. பகுப்பாய்வுத் துறையில் நிபுணத்துவம் வாய்ந்த சுமார் எட்டு வைத்தியர்களிடமிருந்து அறிக்கைகளைப் பெற்றுக் கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

சிலர் அரசியல் இலாபம் கருதி திட்டமிட்ட அடிப்படையில் தேவையற்ற, உண்மைக்குப் புறம்பான பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

மாத்தளை புதைகுழியில் கண்டு பிடிக்கப்பட்ட எச்சங்களில் சில பொருள்களை பகுப்பாய்வு செய்த களனிப் பல்கலைக்கழக பகுப்பாய்வுத்துறை பேராசிரியர் ராஜ் சோமதேவ தமது பகுப்பாய்வு மூலம் அவை 1986 - 1992 ஆம் ஆண்டு காலகட்டத்துக்குரியவை என்று கூறியுள்ளார்.

எனினும் இது ஒருவரது அறிக்கை மாத்திரமே. இதனை மாத்திரம் வைத்துக் கொண்டு எந்தவொரு தீர்மானத்துக்கும் வர முடியாது.

எனவே இந்தத் துறையில் நிபுணத்துவம் வாய்ந்த ஏழு அல்லது எட்டு வைத்திய நிபுணர்களிடமும் அறிக்கை கோரவுள்ளோம். -என்றார். (ச)

# கணினி மயப்படுத்தப்பட்டன ரயில் நிலைய செயற்பாடுகள்

மட்டக்களப்பு,ஏப்.10

மட்டக்களப்பு, வாழைச்சேனை ரயில் நிலையங்களின் செயற்பாடுகள் கணினி மயப்படுத்தப்பட்டுள்ளன என்று மட்டக்களப்பு ரயில் நிலையத்தின் பிரதி நிலையப் பொறுப்பதிகாரி ஏ.ஜே.அப்துல் கபூர் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அதற்கமைய ரயில் நிலையங்களில் முன்கூட்டியே ஆசனப்பதிவு செய்வோர் இணையதளத்தின் மூலமும் ஆசனப்பதிவை மேற்கொள்ள முடியும்.

இதேவேளை வெலிக்கந்த மற்றும் பொலநறுவை, ஹிங்குராகொட ரயில் நிலையங்களும் கணினி மயப்படுத்தப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டக்களப்பு , வாழைச்சேனை ஆகிய இரண்டு ரயில் நிலையங்களிலுமே கணினி வசதிகள் காணப்படுகின்றன.-என்றார். (ச)

## வீடு விற்பனைக்கு

மானிப்பாய் மேற்கு, சமுர்த்தி வங்கி வீதியில் வீடு விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை.

தொடர்பு: 077 652 4291/ 077 728 4502

(35839)(5-6-7)

## TV கள் மலிவு விற்பனை

யாழ். நகரில் எங்குமில்லாத மலிவு விலையில் SONY Wega Flat TV கள் 21"- 12000/= முதல், 25"- 13800/=, , 29"- 16000/= Panasonic (பனசோனிக்) 29" -15000/= DTS அம்பிளிபயர், Box வகைகள், DVD -3000/=

தொடர்பு: 0770440570 (அப்பர்)

ரேவி ரேற் சென்ரர் (கொமர்ஷல் வங்கி எதிரில்)

56, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.

(35834)(5,6,7)

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம், சுண்டிக்குளி மகளிர் கல்லூரிக்கு அருகில், நாகராசா வீதியில் அமைதியான சூழலில் 2¼ பரப்புக்காணியில் அமைந்த நன்னீர் கிணற்றுடன் கூடிய ஓட்டு வீடு உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 720 9686

(35757)(5-6-7)

## நீங்காத நினைவுகளுடன்

பதினேழாம் ஆண்டு | முதலாம் ஆண்டு





அமரர்
வல்லி இரத்தினம்

திருமதி
இரத்தினம் நாகம்மா

| | | |
|---|---|---|
| 05.10.1939 | மண் மகிழ | 13.04.1948 |
| 25.03.1996 | கண் நெகிழ | 21.03.2012 |
| 16.04.2013 | திதி | 10.04.2013 |

இத்தனை நாள்கள் கடந்தாலும் ஆறவில்லை எம் துயரம்.
உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

நந்தாவில் முனியப்பர் லேன்,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி மகோற்கடமூர்த்தி சுசிலாதேவி (குஞ்சு)



122/10, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகோற்கடமூர்த்தி சுசிலாதேவி நேற்று (09.04.2013) செவ்வாய்க்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு (ஓய்வுபெற்ற மலேசியன் பொறியியலாளர்)- செல்வராணி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற மகோற்கடமூர்த்தியின் அன்பு மனைவியும், வாமதேவன், விமலாதேவி, தேவகி, காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி, கமலாதேவி, கெங்காதேவி, உஷாதேவி, பரமதேவன் ஆகியோரின் அன்புச்சகோதரியும், குமாரசாமி, திருவிளங்கம், செல்வரட்ணம், ஸ்ரீஸ்கந்தராஜா, சற்குணவதி, வாமதேவன், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், வெற்றிவேல் ஆகியோரின் மைத்துனியும், நிர்மலா, வாசுகி, வசுமதி ஆகியோரின் பெரிய தாயாரும், சிந்துஜாவின் அன்பு அத்தையும், குமரேசன், குமாரதாஸ், அகிலன் ஆகியோரின் அன்பு மாமியும், வரதன், வாணி, கமலி, விஜி, அமிர்ஷன், அனிஷ், ஆதர்ஷா, அதி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.04.2013) புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

122/10, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (35843)(6.7.11)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி அழகம்மா சிவகுருநாதன்

சங்கானை, தேவாலய வீதியைப் பிறப்பிடமாகவும் தெகிவளையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அழகம்மா சிவகுருநாதன் (08.04.2013) திங்கட்கிழமை காலமானார்

அன்னார் காலஞ்சென்ற சிவகுருநாதனின் அன்பு மனைவியும்,காலஞ்சென்ற சோதிலிங்கம் மற்றும் பாலமுகி ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற இரத்தினராஜாவின் அன்பு மாமியும், றம்மியா (கனடா), சர்வேஸ்வரன் (கனடா) ஆகியோரின் பேர்த்தியும் அபிஷாவின் பூட்டியும், காலஞ்சென்றவர்களான, இராசமணி, சரஸ்வதி, திரவியம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(10.04.2013) புதன்கிழமை பிற்பகல் 2 மணியளவில் கல்கிசை மகிந்த மலர்ச் சாலையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ.பாலமுகி(மகள்)
077 881 2527

அல்பேட்பிளேஸ், தெகிவளை. (35837)(5.6.7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொது பல சேனா அமைப்பின் சர்வதேச நடவடிக்கை ஆரம்பம்

கொழும்பு,ஏப்.10

பொது பல சேனா இந்த மாதத்தில் இருந்து தமது அமைப்பின் சர்வதேச நடவடிக்கைகளை ஆரம்பிக்க உள்ளதுடன், சர்வதேச சமூகத்துக்கு தெளிவுப்படுத்தும் பணிகளையும் ஆரம்பிக்கத் தீர்மானித்துள்ளது.

அதன் முதல் நடவடிக்கையாக அந்த அமைப்பின் செயலர் கலகொட அத்தே ஞான சார தேரர் மற்றும் அமைப்பின் தேசிய அமைப்பாளர் விஹாரன்தெனியே நந்த தேரர் உள்ளிட்ட குழுவினர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நியூயோர்க் சென்றுள்ளனர்.

அங்கு ஒரு மாதம் தங்கியிருக்கும் அவர்கள், அங்குள்ள பௌத்த தேரர்கள் மற்றும் இலங்கையர்களைச் சந்தித்து தமது அமைப்பின் நோக்கங்கள் குறித்து அவர்களுக்கு விளக்கமளிக்க உள்ளனர். (ச)

## நாட்டில் தினமும் 1000 கருக்கலைப்பு



### அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா சொல்கிறார்

இலங்கையில் நாள்தோறும் ஆயிரம் கருக்கலைப்பு சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன என்று சமூக சேவைகள் அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா தெரிவித்தார்.

நாடு சகலதுறைகளிலும் முன்னேற்றமடைந்து செல்கின்றன. எனினும், நாள் தோறும் ஆயிரம் கருக்கலைப்புச் சம்பவங்கள் இடம் பெற்று வருகின்றன என்று அவர் கூறினார்.

இலங்கைப் பெண்களின் கல்வியறிவு 90 வீதமாகவும், தொழில் பங்களிப்பு 33 வீத மாகவும் உயர்வடைந்துள்ளது. இவ்வாறான ஒரு பின்னணியில் அதிகளவான பெண்கள் கருத்தரிப்பதைப் பொருளாதார ரீதியான பிரச்சினையாக கருத முடியாது என்று அவர் தெரிவித்தார்.

இதனை ஒரு சமூகப் பிரச்சினையாகவே கருத வேண்டும். இது தொடர்பிலான குற்றச்சாட்டை சுகாதாரத் துறையினர் மீது சுமத்த முடியாது என்று அவர் மேலும் கூறினார். (ச)

# தொடர்ந்து கைதாவர் இந்திய மீனவர்கள்

## சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்

கொழும்பு,ஏப்.10

இலங்கை கடற்பரப்புக்குள் சட்டவிரோதமாக நுழையும் இந்திய மீனவர்கள் கைது செய்யப்படுவர் என்று மீன்பிடி மற்றும் நீரியல் வள அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

உலகின் எந்தவொரு நாட்டின் கடற்பரப்புக்குள்ளும் அனுமதியின்றி எவரும் நுழைய முடியாது என்று அவர் சுட்டிக் காட்டினார்.

இந்திய மீனவர்கள் இலங்கை கடல் பரப்புக்குள் நுழைந்து, மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடுவதன் காரணமாக இலங்கையின் கடல் வளம் பெரிதும் பாதிக்கப்படுகிறது என்று அமைச்சர் குறிப் பிட்டார்.



கடந்த சில நாள்களாக சட்டவிரோதமாக இலங்கை கடற்பரப்புக்குள் நுழைந்த இந்திய மீனவர்கள் பலர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளனவென்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## திருட்டில் ஈடுபட்ட இருவர் வசமாக மாட்டினர்

கேகாலை,ஏப்.10

பல்வேறு பகுதிகளில் திருட்டில் ஈடுபட்ட பெண் ஒருவர் உட்பட இருவர் கேகாலையில் வைத்து கைதுசெய்யப் பட்டுள்ளனர்.

ஓட்டோவைப் பயன்படுத்தி கேகாலை, அரநாயக்க, ஹதரலியத்த, வரக்காபொல போன்ற பகுதிகளில் அவர்கள் திருட்டில் ஈடுபட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வீதியில் சென்று கொண்டிருந்தவரின் சங்கிலியை அபகரிக்க முயற்சித்த சந்தர்ப்பத்திலேயே அவர்கள் கைது செய்யப் பட்டுள்ளனர். (ச)

## மதுபானக் கடைகள் 13,14 இல் மூடப்படும்

கொழும்பு,ஏப்.10

சித்திரைப் புத்தாண்டை யொட்டி நாட்டில் உள்ள அனைத்து மதுபானக் கடைகளையும் மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 13ஆம், 14 ஆம் திகதிகளில் மதுபானக் கடைகளை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று மதுவரித் திணைக்கள ஆணையாளர் நாயகம் வி. ஹப்புஆரச்சி தெரிவித்தார். (ச)


**தவறிவிட்டது**

பாலசிங்கம் தர்மரெட்ணம் (642642189V) கொய்யாத் தோட்டம், யாழ்ப்பாணம், கணேசன் வனஜா (738251946V) மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி ஆகிய முகவரியுடைய தேசிய அ-அட்டைகள் யாழ்ப்பாணம் தேசிய வங்கிக்கு அருகில் 22.03.2013 அன்று தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கீழ் காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு: 078 633 0685 (35851)(5.7.11)

**கார் விற்பனைக்கு**

நல்ல நிலையில் உள்ள வெள்ளை நிற 300-xxxx Peugeot கார் உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 312 6374 (35847)(5-6-7)

**நாய்க்குட்டி விற்பனைக்கு**

நான்கு மாதம் நிரம்பிய ஜேர்மன் சப்பேட் ஆண் நாய்க்குட்டி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 81/14, பிறவுன் வீதி, கொக்குவில் ஸ்ரேசனடி. 075 667 7962 (35816)(5-6-7)

**சாவகச்சேரி ஸ்ரீராம் சில்க்**

இந்தியாவிலிருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட சிறுவர், சிறுமியருக்கான நவீன டிசைன் ஆடைகள், நாகரீக நங்கையரின் பஞ்சாபிகள், ஸ்கேட் அன்ட் பிளவுஸ், கல்யாண பட்டுப் புடைவைகள் அனைத்தும் மலிவான விலையில் நிறைவான தரத்தில் முற்றிலும் குளிரூட்டப்பட்ட காட்சி அறையில் புத்தாண்டைக் கொண்டாட ஒருமுறை விஜயம் செய்யுங்கள். சாவகச்சேரியிலுள்ள தனித்துவமான நிறுவனம்.

ஸ்ரீராம் சில்க்
இல. 17, நவீன சந்தை,
சாவகச்சேரி.
077 706 9078 (2726)(5.6.7)

**யாழ். மண்ணில் புதியதோர் உதயம்**

**இவன்ஸ் ஆடையகம்**

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு 14.04.2013 ஆம் திகதி வரை 5000/= ரூபாவுக்கு மேல் உடுபுடைவைகள் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களுக்கு

Side Hand Bag இலவசம்

- பெண்களுக்கான நவநாகரிக சாறிவகை, சுடிதார், ஸ்கேட் பிளவுஸ் வகைகள்.
- சிறுவர்களுக்கான ஆடைத்தினுசுகள்
- ஆடவர்களுக்கான ரீ. சேட், ரவுசர் மற்றும் சேட் வகைகள்
- மகளிர்களுக்கான அழகு சாதனப் பொருள்கள்

ஒரு முறை விஜயம் செய்து பாருங்கள் வித்தியாசத்தை அறிவீர்கள்

இவன்ஸ் ஆடையகம்
23, கஸ்தூரியார் வீதி,
(றொலெக்ஸ் பேக்கரி முன்பாக)
யாழ்ப்பாணம். (சி.6250)(45.6.7)

**NORTH LEAD COMPUTER & ACCESSORIES WHOLESALER**

உங்கள் வீடுகளில் உள்ள பெறுமதிமிக்க இலத்திரனியல் உபகரணங்களை (Computer, LCD & LED TV, Etc.) பாதுகாத்துக் கொள்ள இன்றே தெரிவு செய்யுங்கள். நீண்ட நேரம் மின்சாரத்தை சேமித்து வைக்க கூடிய சாதனம். உத்தரவாத காலத்தில் பழுது ஏற்படின் உடன் நிவர்த்தி செய்யப்படும். (Warranty 18 Months)

TECHFINE UPS (LED DISPLAY)

650watts : Rs. 4475, ~~4900~~/=
1200watts : Rs. 9850, ~~11,700~~/=
1500watts : Rs. 12,700, ~~14200~~/=

சகலவிதமான கணனி உதிரிப்பாகங்களையும் குறைந்த விலையில் கூடிய உத்தரவாதத்துடன் பெற்றுக் கொள்ளலாம், உங்கள் கணனிகள் அனைத்தும் ஒரே நாளில் உத்தரவாதத்துடன் பழுது பார்த்துக் கொடுக்கப்படும். (வியாபாரிகளுக்கு விசேட விலையில்)

Authorized Dealer in Jaffna District

328, Stanly Road, Jaffna. (ஆரியகுளம் சந்திக்கு அருகில்)
Tel: 021-222 4459, 0772533390, Fax: 222 4460

**வீடு வாடகைக்கு உண்டு**

உரும்பிராய் சந்தி ஐயப்பன் கோயில் அருகில் உள்ள வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு:077 515 9348 (26213)(5-6-7)

**கார் விற்பனைக்கு**

13 MITSUBISHI LANCER கார் உடன் விற்பனைக்கு. விலை-3¾ லட்சம்

தொடர்பு: 077 977 3533 (35845)(5-6-7)

**சித்திரை புத்தாண்டை முன்னிட்டு பொன்னாலை அமரர் S.S. சின்னையா ஞாபகார்த்த மாபெரும் மாட்டு வண்டி சவாரிப்போட்டி**


இடம் : பொன்னாலை மான்பாய்ந்த திடல்
காலம் : 14.04.2013 ஞாயிற்றுக்கிழமை மாலை 2 மணி
பெறுமதிமிக்க பரிசில்கள் வழங்கப்படும்.
மேலதிக தொடர்புகளுக்கு: கணபதிப்பிள்ளை - வசந்தரூபன் 077 4457 400. (35859)(15.6.7)

**யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் -வ.து 43-0349 இசூசு பாரவூர்தி விற்பனை விலைமனுக்கோரல்**

1. எமது சங்கத்திற்குச் சொந்தமான பாவனையிலுள்ள,நல்ல நிலையிலுள்ள 43-0349 இலக்க இசூசு லொறி(பதிவுத் திகதி: 06.04.1992,பதிவு இலக்கம் : 43-0349(2)) விற்பனை செய்யப்படவுள்ளது. இதற்கான விலைமனுக்கள் கோரப்படுகின்றன.
2. விலைமனுக்கோரல்கள் யாவும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் '43-0349 இலக்க இசூசு வாகன விலைமனுக் கோரல்' எனக் குறிப்பிடப்பட்டு, 'பொது முகாமையாளர், யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், 127,கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்' என்னும் முகவரிக்கு 2013.04.22ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். இத்திகதிக்குப் பின்னர் வரும் விலைமனுக்கோரல்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.
3. இவ்வாதனத்தை பார்வையிட விரும்புபவர்கள் 09.04.2013ஆம் திகதியிலிருந்து 22.04.2013ஆம் திகதி வரை விடுமுறை தவிர்ந்த ஏனைய கிழமை நாள்களில் காலை 8.30-5.00 மணி வரை பார்வையிட முடியும். அத்துடன் மேலதிக விவரங்களுக்கு 0212222587 இலக்க தொலைபேசி மூலமும் தொடர்புகொள்ளமுடியும்.
4. விலை மனுக்கோரல்கள் 22.04.2013ஆம் திகதி பி.ப.2.00 மணிக்கு கூட்டுறவுச் சங்க இயக்குநர் சபை முன்னிலையில் திறக்கப்படும். அத்தருணத்தில் தாங்களோ தங்கள் அத்தாட்சி பெற்ற பிரதிநிதிகளோ சமுகமளிக்க முடியும். வாகன விற்பனை தொடர்பான இறுதித் தீர்மானம் இயக்குநர் சபையில் முடிவுசெய்யப்படும்.

தலைவர்/ பொதுமுகாமையாளர்,
யாழ்ப்பாணம் ப.நோ.கூ.சங்கம்.
(சி/8284)(5.6.7)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள்

**உடுத்துறை மகா வித்தியாலயம்**

ஜெ.ஜெயசுபாஷினி-2ஏ3பி3சிஎஸ், ஏ.தனுசன்-ஏ3பி3சி, ஜெ.ஜெய அர்ச்சனா-ஏ3சி5எஸ், ரி.நிக்சனா-ஏ3பி3சி2எஸ், ஆர்.நிறைமகள்-ஏபி6சிஎஸ், ஏ.நிருஜா-ஏ3பி2சி3எஸ்.

**வல்வை சிவகுரு வித்தியாசாலை**

க.கேசவி-9ஏ, கி.பிரியங்கா-7ஏ2பி, பு.மதுஷா-5ஏ2பி2சி, நா.ஜதுர்ஷா-5ஏபி3சி, பா.பிரியங்கா-3ஏ5பிசி, தி.குருபரன்- 3ஏ3பி2சிஎஸ், அ.கேமரதா- 2ஏ2பி4சிஎஸ், ப.மதுமதி- 2ஏ2பிசி3எஸ், சி.சுவன்யா-2ஏபி3சி2எஸ், சி.தர்சினி-2ஏபிசி4எஸ், சி.அனுஜன்- 2ஏ4சி2எஸ்.

**புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி**

சி.தனஞ்சிகா-9ஏ, பா.விதுஷா- 8ஏபி, ஸ்ரீ.ரேணுகா-6ஏ3பி, நா.எழில்-6ஏ2பிசி, ச.சதுர்சன்-6ஏ2பிஎஸ், கே.ஜீவசாந்-6ஏ2பிஎஸ், ஞா.தனுஸ்ஷன்-5ஏ2பிசி, இ.கதுசாளினி-4ஏ3பி2எஸ், நா.டிவானா-4ஏ2பி2சிஎஸ், சி.சிவரஞ்சன்-4ஏ2பி2சி, சா.நிதுர்ஷனா-4ஏபி3சிஎஸ், வி.தேனுகா-3ஏ4பி2சி, த.கோபிகன்-3ஏ3பி3சி, சி.தசினி-3ஏ2பி2சி2எஸ், சா.மயூரன்-3ஏ2பி2சி2எஸ், இ.நிகுந்தினி-3ஏபி2சி2எஸ், த.வித்தியா-3ஏ4சிஎஸ்.

(ந-400-253-8)



நவாலியூர் மறைந்த சின்னையா பரராசசிங்கம் ஞாபகார்த்தமாக 80 முதியவர்களுக்கு உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன. நவாலி முருகானந்தா சனசமூக நிலையத்தின் உப தலைவர் சமூகமணி செல்லத்துரை, மகேந்திரன் ஆகியோர் அருகில் உள்ளனர். (ந-50)

## மூத்த பிரஜைகளின் மாதாந்தக் கூட்டம்

வடமராட்சி,ஏப்.10

வடமராட்சி வடக்குப் பிரதேச செயலக மூத்த பிரஜைகள் பேரவையின் மாதாந்தக் கூட்டம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

பருத்தித்துறை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் தலைவர் சிவா. கிருஷ்ணமூர்த்தி தலைமையில் கூட்டம் நடைபெறும்.

கூட்டத்தில் 'முதுமை நலம் பேணல்' என்னும் தலைப்பில் கா.வைத்தீஸ்வரனின் சொற்பொழிவும் இடம்பெறும். (ந-253)

## காந்தி வேலாயுதபிள்ளையின் நினைவு தினம்

உருத்திரபுரம் காந்தி நிலையத்தின் ஸ்தாபகரும் அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் முன்னாள் தலைவருமான காந்தி வேலாயுதபிள்ளையின் 20 ஆம் ஆண்டு நினைவு தின நிகழ்வு நடைபெறவுள்ளது.

உருத்திரபுரம் காந்தி நிலையத்தில் நாளை வியாழக் கிழமை மாலை 4.30 மணிக்கு அகில இலங்கை காந்தி சேவா சங்கத் தலைவர் தி.இராசநாயகம் தலைமையில் நிகழ்வு நடைபெறும்.

நிகழ்வில் நினைவுரைகளும், காந்தீயம் பத்திரிகை வெளியீடும் நடைபெறவுள்ளன. (ந)

## வீதி விளக்குகள் ஒளி தருமா?

கொழும்புத்துறை,ஏப்.10

கொழும்புத்துறை மேற்குப் பகுதியின் பல வீதிகள், மற்றும் உள்ளக ஒழுங்கைகளுக்கு போதிய வீதி மின் விளக்குகள் இல்லை. அதனால் அந்தப் பகுதிகள் இரவில் இருளில் மூழ்கிக் கிடப்பதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

பல இடங்களில் பொருத்தப்பட்டுள்ள மின் விளக்குகள் இரவில் ஒளிராது காணப்படுகின்றன. இதனால் போக்குவரத்துப் பிரச்சினைகள், திருடர்களின் அச்சுறுத்தல்கள் என்பவற்றுக்கு உள்ளாவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக மாநகர சபை உறுப்பினர் அ.கொர்னேசியஸிடம் கேட்டபோது கடந்த கூட்டத்தில் இது தொடர்பாக பேசப்பட்டதாகவும் விரைவில் இந்தக் குறைபாடு நீக்கப்படுமெனவும் தெரிவித்தார். (ந-135)

## 5 ஆயிரத்துக்கு மேற்பட்ட

# முன்னாள் போராளிகளுக்கு 'ஐ.ஓ.எம்.' நிறுவனம் உதவி

யாழ்ப்பாணம்,ஏப்.10

வட மாகாணத்தில் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட முன்னாள் போராளிகளுக்கு வாழ்வாதார உதவிச் செயற்றிட்டங்களை சர்வதேச புலம் பெயர்தலுக்கான அமைப்பு (ஐ.ஓ.எம்.) மேற்கொண்டு வருகிறது. சர்வதேச புலம் பெயர்தலுக்கான அமைப்பின் கிளிநொச்சி மாவட்ட நிகழ்ச்சித் திட்ட ஒருங்கிணைப்பாளர் வி.வரதபரன் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சமூகத்துடன் ஒன்றிணைக்கப்பட்ட முன்னாள் போராளிகள் தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்ளக் கூடிய வகையில் தொழில் வாய்ப்புக்குத் தேவையான உபகரணங்களையும், பயிற்சிகளையும் ஆலோசனைகளையும் வழங்கி வருகிறோம்.

**முன்னாள் போராளிகள் தாமாகவே தொழில் முயற்சிகளை மேற்கொண்டு தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்த வேண்டும்.**

தற்போது எமது நிறுவனத்துடன் வடக்கில் மட்டும் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட முன்னாள் போராளிகள் இணைந்து பயன்பெறுகின்றனர்.

ஆஸ்திரேலியா, கனடா, ஜப்பான் உட்பட வெளிநாடுகளின் நிதிப் பங்களிப்புடன் இந்த வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

இதில் இணைந்துள்ள முன்னாள் போராளிகள் தாமாகவே தொழில் முயற்சிகளை மேற்கொண்டு தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்த வேண்டும் என்பதே எமது நோக்கமாகவுள்ளது.

தொடர்ந்து எமது செயற்றிட்டங்களை மேலும் விரிவுபடுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவித்தார். (ந-14)

## மணவாளக் கோலத் திருவிழா

யாழ்ப்பாணம்,ஏப்.10

கைதடி ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயத்தின் மணவாளக் கோலத் திருவிழா கிரியைகள் இன்று பிற்பகல் 4 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து நாளை வியாழக்கிழமை 108 திரவிய ஹோமம், 108 திரவிய அபிஷேகம், 108 பாற்குட அபிஷேகம், 108 இளநீர் அபிஷேகம் என்பன நடைபெற்று மாலை 5 மணிக்கு விஷேட பூசைகளுடன் சுவாமி வெளி வீதி உலா வருவார். (ந-13)

## சமுர்த்தி புத்தாண்டுச் சந்தை

தென்மராட்சி,ஏப்.10

தென்மராட்சி பிரதேச சமுர்த்தி சங்கங்களின் வாழ்வெழுச்சித் திட்டம் (திவிநெகும) சமுர்த்தி புத்தாண்டுச் சந்தை கடந்த திங்கட்கிழமை மட்டுவில் பன்றித் தலைச்சி கண்ணகை அம்பாள் ஆலயத்துக்கு முன்பாக உள்ள மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலயத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன் தலைமையில் நடைபெற்ற புத்தாண்டுச் சந்தையை யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் நாடாவை வெட்டி ஆரம்பித்து வைத்தார்.

புத்தாண்டுச் சந்தையில் பிரதேச சமுர்த்தி மற்றும் (திவிநெகும) பயனாளிகளால் உற்பத்தி செய்யப்பட்ட மற்றும் தயாரிக்கப்பட்ட பொருள்களுடன் சமுர்த்தி அல்லாத நிறுவனங்களான ச.தோ.ச. பழக்கலவை நிறுவனம், சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் போன்றவையும் பொருள்களை விற்பனைக்கு வைத்திருந்தன.

அத்துடன் பெருமளவு மரக்கறிகள், தென்னம் பிள்ளைகள், பனையோலை உற்பத்திப் பொருள்கள் போன்றவையும் காணப்பட்டன.

நேற்றுமுன்தினம் பங்குனித் திங்கள் என்பதால் மட்டுவில் பன்றித்தலைச்சி அம்பாள் ஆலயத்துக்கு வருகை தந்த பொது மக்கள் தங்களுக்குத் தேவையான பொருள்கள், மரக்கறிகள் ஆகியவற்றைக் கொள்வனவு செய்தமையைக் காணக் கூடியதாக இருந்தது. நேற்றும் இந்தப் புத்தாண்டுச் சந்தை இயங்கியது. (ந-9)

★ ★ ★

வலி.கிழக்கு பிரதேச சமுர்த்திப் பிரிவினரின் ஏற்பாட்டில் நடைபெறும் புத்தாண்டுச் சந்தை இன்று புதன் கிழமையும் நாளை வியாழக் கிழமையும் புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரியில் நடைபெறும்.

புத்தாண்டுச் சந்தையின் ஆரம்ப விழா நிகழ்வுகள் இன்று முற்பகல் 10 மணிக்கு வலி.கிழக்கு பிரதேச செயலர் எம்.பிரதீபன் தலைமையில் நடைபெறும்.

நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரினும், கௌரவ விருந்தினர்களாக யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகமும், யாழ். மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் கே.மகேஸ்வரனும் கலந்து கொள்வர்.

சமுர்த்தி புத்தாண்டுச் சந்தையில் உள்ளூரில் உற்பத்தியான உணவு வகைகள், மரக்கறி, பழ வகைகள் மற்றும் உடுபுடைவைகள் மற்றும் வீட்டுப் பாவனைப் பொருள்கள் நியாய விலையில் விற்பனை செய்யப்படவுள்ளன. (ந-11)

## இப்படியும் வதைக்கலாமா..?



கொழும்புத்துறை,ஏப்.10

யாழ்.போதனா வைத்தியசாலை விடுதிகளில் தங்கி சிகிச்சை பெற்றுவரும் நோயாளர்களைப் பார்வையிடச் செல்லும் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்வதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

நோயாளர்களைப் பார்வையிடுவோர் சென்று வரும் நுழைவாயில் அடிக்கடி இடம் மாற்றப்படுவதால் மக்கள் முன்புறம் செல்வதா பின்புறம் செல்வதா என்று புரியாது அலைந்து திரிவதைக் காண முடிகிறது.

முன்னர் ஆஸ்பத்திரி வீதி வாசலூடாகவும், பின்னர் மின்சார நிலைய வீதிப் பக்கமாகவும் பார்வையாளர்கள் உட்செல்ல அனுமதிக்கப்பட்டனர். தற்போது வைத்தியசாலையின் பின்புறமுள்ள விக்ரோறியா வீதியில் பிரேத அறை அருகிலுள்ள வாசல் பயன்படுத்தப்படுகிறது.

குறித்த பகுதியில் பார்வையாளர்கள் உட்செல்ல அனுமதிக்கப்படும் வரையில் நண்பகல் வேளை உச்சி வெயிலில் மக்கள் வீதியோரத்தில் காத்திருக்க வேண்டியுள்ளது. தற்போது நிலவும் கடும் வெய்யிலில் காத்திருப்போரின் நிலையோ பரிதாபம்.

புதிதாக அமைக்கப்பட்ட வைத்தியசாலை மாடிக் கட்டடக் கட்டுமானப் பணிகளுக்காக இடமாற்றம் செய்யப்பட்ட பார்வையாளர்கள் செல்லும் வாயில், கட்டடம் திறந்து வைக்கப்பட்ட பின்னரும் வழமைக்கு வராமை ஏன் என்று மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

போக்குவரத்துக்கு சுலபமாகவும் மக்கள் மழை வெய்யில் போன்ற இயற்கைத் தாக்கங்களால் பாதிக்கப்படாதும் நின்று செல்ல வசதியான ஏற்பாடுகளைச் செய்து தருமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ஓ-135)

## சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு

# தனியார் பஸ் சேவைகள் தாராளமாக ஓடும்

யாழ்ப்பாணம்,ஏப்.10

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு பொதுமக்களின் போக்குவரத்தை இலகுபடுத்த உள்ளூர் மற்றும் வெளியூர் பஸ் சேவைகள் தாராளமாக ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன என்று தனியார் பஸ் சங்கத்தின் உப தலைவர் பொ.கெங்காதரன் தெரிவித்தார்.

**புதுவருடத்தை முன்னிட்டு விசேட பஸ் சேவைகள் எதுவும் ஏற்படுத்தப்படவில்லை.**

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்.மாவட்டத்திலிருந்து உள்ளூர் மற்றும் வெளியூர் சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்கள் உரிய நேர அட்டவணைகளின்படி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

புதுவருடத்தை முன்னிட்டு விசேட பஸ் சேவைகள் எதுவும் ஏற்படுத்தப்படவில்லை. பயணிகள் அதிகமாக இருந்தால், நேர அட்டவணைகளின்படி பயணிகளைக் காத்திருக்க வைக்காமல் உரிய இடங்களுக்குச் செல்வதற்கான பஸ் ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும்.

யாழ். நகர் பஸ் தரிப்பிடத்திலிருந்து பயணிகள் பஸ்ஸுக்காக நீண்ட நேரம் காத்திருக்க வேண்டிய அவசியமில்லை. ஏற்கனவே குறித்த நேரங்களில் பஸ் சேவைகள் தாராளமாக இடம்பெற்று வருகின்றன.

தனியார் பஸ் சங்கத்தின் ஊடாக சேவையில் ஈடுபடும் பஸ்கள் நேரக்கணிப்பாளரால் கண்காணிக்கப்பட்டு, உரிய இடங்களுக்கு உரிய நேரத்தில் பஸ் சேவைகள் இடம்பெறக் கூடியதாக வழி நடத்தப்படுகின்றன.

பொதுமக்கள் தாம் செல்ல வேண்டிய இடங்களுக்கு தாமதம் இன்றி பஸ் சேவையைப் பெற்றுக் கொள்ள முடியும்.-எனவும் தெரிவித்தார். (ந-14)

## முதலுதவிப் பயிற்சி

சங்கானை,ஏப்.10

இடர் முகாமைத்துவத்தின் கீழ் தெரிவுசெய்யப்பட்ட மாணவ அணிக்கான முதலுதவிப் பயிற்சியும், கருத்தரங்கும் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இந்தக் கருத்தமர்வு சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் வேர்ட்ஸ் ஒப் பீஸ் நிறுவனத்தால் மாணவர்களுக்கு வழங்கப்பட்டன.

எதிர்பாராத விதத்தில் ஒருவருக்கு விபத்தோ அல்லது பெரிய காயங்களோ ஏற்படுமிடத்து, எவ்வாறு முதலுதவியை வழங்கவேண்டும் என இந்தக் கருத்தரங்கில் மாணவர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது. (ந-29)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது
வித்தியா

# இன்றைய நாள்
## உங்களுக்கு எப்படி?

**மேஷம்:** எதிர்பார்த்தவை தாமதமாக முடியும். சில காரியங்களை அலைந்து, திரிந்து முடிக்க வேண்டி வரும். திடீர் பயணங்களால் அலைச்சல் உண்டு. வியாபாரத்தில் மிகுதிகளை போராடிப் பெறுவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களுடன் மோதல்களைத் தவிருங்கள்.

**இடபம்:** திறமைகளை வெளிப்படுத்த நல்ல சந்தர்ப்பங்கள் அமையும். வியாபாரத்தில் மகிழ்ச்சியுண்டு. நட்பு வட்டாரம் விரிவடையும். அரச காரியங்களில் இருந்து வந்த தடைகள் விலகும். வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும்.

**மிதுனம்:** உடன்பிறந்தவர்களின் நீண்ட நாள் ஆசைகளை நிறைவேற்றுவீர்கள். வியாபார ரீதியாக சிலரைச் சந்திப்பீர்கள். வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். அரசியல்வாதிகளின் சந்திப்பு நிகழும். பெற்றோரின் ஆதரவு கிடைக்கும்.

**கடகம்:** வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். வெளியூர் பயணங்களால் ஆதாயம் உண்டு. எதிர்பார்த்தபடி உதவிகள் கிடைக்கும். மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள். பிள்ளைகளால் உறவினர்கள் மத்தியில் மதிக்கப்படுவீர்கள்.

**சிங்கம்:** அவசர முடிவுகள் எடுக்காமல் இருப்பது நல்லது. நன்றி மறந்த ஒருவரை நினைத்துக் கவலையடைவீர்கள். சிறுசிறு அவமானம் ஏற்படக்கூடும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை குறையும். உத்தியோகத்தில் சக ஊழியர்களை பகைத்துக் கொள்ள வேண்டாம்.

**கன்னி:** முடியாமல்போன சில காரியங்களை இன்று முடிப்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். பேச்சில் கம்பீரம் பிறக்கும். அயல் வீட்டாரின் ஆதரவு கிடைக்கும்.

**நாளை**

பங்குனி-29 வியாழக்கிழமை 11.04.2013
திதி: பிரதமை பி.ப.04.22 வரை
நட்சத்திரம்: அஸ்வினி மு.இ. 11.23 வரை
சுபநேரம்: 07.36- 09.6 வரை
இராகுகாலம்: 01.36- 03.06 வரை

**துலாம்:** உங்களது வெளிப்படையான பேச்சை அனைவரும் ரசிப்பார்கள். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள். வேலையாள்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரியிடம் அனுசரித்துப் போவீர்கள்.

**விருச்சிகம்:** மனக்குழப்பங்கள் நீங்கி தெளிவான முடிவுகளை எடுப்பீர்கள். வெளிவட்டாரத்தில் மதிப்பு மரியாதை அதிகரிக்கும். வியாபார ரீதியாக முக்கிய பிரமுகர்களைச் சந்திப்பீர்கள். தாய்வழி உறவினர்களால் ஆதரவு உண்டு.

**தனுசு:** பரபரப்புடன் காணப்பட்ட நீங்கள் இன்று குடும்பத்தினருடன் மனம் விட்டுப் பேசுவீர்கள். அவர்களின் எண்ணங்களைப் பூர்த்தி செய்வீர்கள். அரச காரியங்களில் அனுகூலமான நிலை காணப்படும். வியாபார ரீதியாக பிரபலங்களைச் சந்திப்பீர்கள்.கோபம் நீங்கும்.

**மகரம்:** முகமலர்ச்சியுடன் காணப்படுவீர்கள். வியாபாரத்தில் இருந்துவந்த சிக்கலுக்கு முடிவு கட்டுவீர்கள். நீண்டநாள் ஆசைகளைப் பூர்த்தி செய்துக்கொள்வீர்கள். பணவரவு திருப்திகரமாக இருக்கும். வெளியூர் பயணங்களால் சந்தோஷமடைவீர்கள். உத்தியோகத்தில் மன உளைச்சல் விலகும்.

**கும்பம்:** எதிர்ப்புகள், இழப்புகள், ஏமாற்றங்கள் நீங்கும். பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். சகோதரர்கள் உதவுவார்கள். வியாபாரத்தில் மிகுதிகளை விரைந்து பெறுவீர்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். பணிகளில் இருந்துவந்த தேக்க நிலை மாறும்.

**மீனம்:** புதிய முயற்சிகள் பிற்போடப்படும். சிலர் உங்களை மட்டம் தட்டிப் பேசினாலும் உணர்ச்சி வசப்படாதீர்கள். மற்றவர்களைச் சார்ந்திருக்க வேண்டாம். எவரையும் பகைத்துக் கொள்ளாதீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களுடன் சச்சரவு ஏற்படும். உத்தியோகத்தில் பிறரின் குறைகளை சுட்டிக் காட்ட வேண்டாம்.

# சுடோக்கு
## எண் விளையாட்டு


| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 9 | | 7 | | | 2 | |
| | | 3 | | | 1 | 9 | | |
| | 8 | 5 | | 4 | 2 | 1 | | 6 |
| | 7 | | 1 | 3 | | 6 | | |
| | | 4 | | | | 2 | | |
| | | 1 | | 2 | 9 | | 7 | |
| 5 | | 6 | 8 | 9 | | 7 | 1 | |
| | | 8 | 4 | | | 5 | | |
| | 9 | | | 6 | | 8 | | |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 1 | 2 | 8 | 6 | 5 | 3 | 4 | 7 |
| 4 | 3 | 5 | 1 | 2 | 7 | 6 | 9 | 8 |
| 1 | 9 | 7 | 3 | 9 | 4 | 2 | 1 | 5 |
| 1 | 9 | 7 | 5 | 3 | 6 | 4 | 8 | 2 |
| 3 | 2 | 4 | 7 | 1 | 8 | 9 | 5 | 6 |
| 6 | 5 | 8 | 2 | 4 | 9 | 1 | 7 | 3 |
| 2 | 7 | 3 | 9 | 5 | 1 | 8 | 6 | 4 |
| 5 | 6 | 1 | 4 | 8 | 3 | 7 | 2 | 9 |
| 8 | 4 | 9 | 6 | 7 | 2 | 5 | 3 | 1 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


50 ஆவது பிறந்தநாள் வாழ்த்து




இன்று 10.04.2013 பிரான்ஸில்
தனது 50 ஆவது பிறந்த நாளைக்
கொண்டாடும்

பேரம்பலம்
பாஸ்கரன்

அவர்களை சகல செல்வங்களும்
பெற்று நீடூழி வாழ்கவென
வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்

மனைவி - தேவரஞ்ஜினி (பிரான்ஸ்),
பிள்ளைகள் - டயானா, பிரசாந் (பிரான்ஸ்),
சகோதரிகள் - திருநாவுக்கரசு பேரின்பராணி குடும்பம் (கைதடி நுணாவில்).
பத்மாவதி குடும்பம் (கைதடி நுணாவில்).
மாமி - கணேசபிள்ளை விமலாதேவி (மீசாலை),
மாமா, மாமி - செல்வராசா மல்லிகா (பிரான்ஸ்),
மச்சான், மச்சாள்மார் - தேவரஞ்சன் கௌசலாதேவி குடும்பம் (பிரான்ஸ்),
யோகேஸ்வரன் சுதாயினி குடும்பம் (பிரான்ஸ்),
சதகேசன் நிவேதினி குடும்பம் (பிரான்ஸ்),
பிரதீபன் விஜிதா குடும்பம் (மீசாலை),
சோமஸ்கந்தராசா செல்வசுதா குடும்பம் (சுவிஸ்),
செல்வசுதன் சுதாஜினி குடும்பம் (பிரான்ஸ்),
செல்வமைந்தன் காந்தீபா குடும்பம் (பிரான்ஸ்),
ஜிவதாஸ் செல்வசுதர்சினி குடும்பம் (பிரான்ஸ்),
செல்வ சுரேஸ் லோஜினி குடும்பம் (பிரான்ஸ்).

ஆகியோருடன் உறவினர்கள், நண்பர்கள்
அனைவரும் வாழ்க வளமுடன்
என வாழ்த்துகின்றனர்.

தி. பேரின்பராணி குடும்பம்,
கைதடி நுணாவில்,
அறவெளி முன் ஒழுங்கை,
சாவகச்சேரி.

(35715) (45.6.7)



MEGA SALE

சித்திரைப் புத்தாண்டை
முன்னிட்டு

மாபெரும்
விற்றுத் தீர்த்தல்



சகல விதமான புடவை
தினுசுகளை 5000/= ரூபாவுக்கு
மேல் கொள்வனவு செய்யும்
வாடிக்கையாளர்களின் பற்றுச்
சீட்டு இலக்கம் (Bill Number)
குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்
பட்ட அதிர்ஷ்டசாலிகளுக்கு

முதலாம் பரிசு குளிர்சாதனப் பெட்டி
2 ஆம் பரிசு - DVD Player
3 ஆம் பரிசு - Stand Fan
4 ஆம் பரிசு - Mixer Grainder
5 ஆம் பரிசு - Rice Cooker





மேலும் 5 ஆறுதல் பரிசுகள்
இன்றே விரையுங்கள்.
5000 ரூபாவுக்கு
உடு புடவைகள் கொள்முதல் செய்து
அதிர்ஷ்டசாலியாகுங்கள்.

(வெற்றிபெறும் அதிர்ஷ்டசாலிகளின் சிட்டை இலக்கம் (Bill Number)
18.04.2013 வியாழன் உதயன் பத்திரிகையில் வெளியிடப்படும்)

யாழ் ரெக்ஸ் YARL TEX
134, நவீன சந்தை வெளிபுறம்- சாவகச்சேரி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழம்பெரும் ஏட்டுச் சுவடிகள் இலங்கை இந்து மாமன்றத்திடம்

## யாழ்.கிளையில் பார்வையிடலாம்

யாழ்ப்பாணம்,ஏப்.10

பிரான்ஸ் அரசு பாண்டிச்சேரி பல்கலைக்கழகத்தில் நீண்டகாலமாகப் பாது காப்புடன் வைத்திருந்த பழம் பெரும் ஏட்டுச்சுவடிகள் இலங்கையில் உள்ள பேராசிரியர்கள், ஆய்வாளர்கள், சிவாச்சாரியர்கள், ஆன்மிகவாதிகள், இந்து சமய மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் ஆகியோருக்கு பயன்படும் வகையில் அகில இலங்கை இந்து மாமன்றத்தின் யாழ்.கிளை ஆராய்ச்சி நிலையத்தில் ஒப்படைக்கப்படுவதாக இந்து மாமன்ற உபதலைவர் ஆறு.திருமுரு கன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது:-

ஏட்டுச் சுவடிகளைப் பாதுகாத்து இந்து மக்கள் பயன்பெறக் கூடியவாறு அமெரிக்க ஹவாய் சைவ ஆதீனம், பிரான்ஸ் அரசுடன் நான்கு வருடங்களுக்கு மேலா கப் பேச்சு நடத்தி அவர் களின் ஒப்புதலுடன் சுமார் ஒன்றரை இலட்சம் ரூபா செலவில் கணினி மயப் படுத்தி ஒரு பிரதியை கொழும்பில் உள்ள இந்து மாமன்றத்திடம் கையளித்துள்ளது. மற்றுமொரு பிரதி இங்கு கையளிக்கப்பட்டுள்ளது. ஹவாய் சைவ ஆதீனம் இதற்காகப் பெரும் சேவையை வழங்கியுள்ளது. ரிஷி தொண்டுநாத சுவாமிகள் அதனைக் கையளித்துள்ளார்.

இந்துக்களின் முதல் நூல் எனக் கொள்ளப்படும் வேதங் கள், ஆகமங்கள், உபநிடதங்கள், தலபுராணம், திருமுறைகள், ஆலயங்கள் அமையவேண் டிய முறைகள் உட்பட சங்க காலம், பல்லவர் காலக் குறிப்புக்கள், ஆயுள் வேத வைத்தியம் தொடர்பான ஏட்டுச் சுவடிகளின் பிரதிகள் இதில் அடங்கும்- என்றார். (த-7)

STYLO
TEXTILES & TAILORING
442,Hospital Road,
Jaffna.
Tel: 021 221 9696
E-mail: stylogents.yall@gmail.com

ஸ்டைலோ உங்களோடு சில நிமிடம்

அன்பான வாடிக்கையாளர்களே மற்றும் வவுனியா வாழ் உறவுகளே!
ஸ்டைலோ நிறுவனம் முற்று முழுதாக வவுனியாவிலிருந்து வெளியேறியுள்ளது என்பதை எங்கள் அன்பான வாடிக்கையாளர்களுக்கு (ஸ்டைலோ-ஸம்சூல்) தெரிவித்துக்கொள்கின்றார்.
அத்தோடு எம்மை வளர்த்துவிட்டமைக்காக நன்றிகள் பல கூறிநிற்பதோடு எம் வாடிக்கையாளர்களை யாழ்நகரில் மீண்டும் ஓர் உதயம் எனும் குரலில் ஸ்டைலோ உதயமாகியுள்ளது.
அன்பர்கள்,நண்பர்கள்,வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் கூறிக்கொள்ளும் ஸ்டைலோ உங்கள் வரவை யாழ் நகரில் காத்திருக்கும். எங்களுக்கு ஆதரவு வழங்கியமைக்கு நன்றிகள் பல கோடி.
(35868)(5.6.7) (ஸ்டைலோ) S.Samsul

## வலி. வடக்கில் மீளக் குடியேறிய மக்களுக்கு உதவிகள்

வலி.வடக்குப் பிரதேச சபையினால் 'யுனிசெப்' நிறு வனத்தின் அனுசரணையுடன் மீளக்குடியமர்ந்த மக்க ளுக்கு மலசல கூடம் மற்றும் கிணறு என்பன அமைத்துக் கொடுக்கப்பட்டு வருவதாகப் பிரதேச சபையின் தவிசாளர் சோ.சுகிர்தன் தெரிவித்தார்.

வலி.வடக்கில் மக்கள் மீளக்குடியமர்ந்த பல்வேறு பகுதிகளிலும் மக்களுக்கான உதவிகள் உரியமுறையில் சென்றடைவதில்லை. இதுவரை எந்தவிதமான உதவிகளையும் பெறாத மக்களைத் தெரிவு செய்து அவர் களுக்கே பிரதேச சபை உதவிகளை வழங்கி வருகின்றது.

மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட கூவில், வசந்தபுரம், வலித்தூண்டல், நகுலேஸ்வரம், கொல்லன் கலட்டி, மாவிட்டபுரம் ஆகிய பகுதிகளில் உள்ள மக்களுக்கே இந்த உதவிகள் வழங்கப்படவுள்ளன.

80 ஆயிரம் ரூபா பெறு மதியில் 28 மலசல கூடங்களும், ஒரு இலட்சம் ரூபா பெறுமதியில் 22 கிணறுகளும் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன. இதற்குரிய வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை 'யுனிசெப்' நிறுவன நிதியில் ஏற்கனவே 25 மலசல கூடங்களும், 10 கிணறுகளும் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

மீளக்குடியமர்ந்த மக்களுக்கான உதவிகள் தொடர்ச்சியாக வழங்கப்படும் என்று வலி.வடக்கு பிரதேச சபைத் தலைவர் தெரிவித்தார். (த-5)

## 10 வருடங்களுக்கு மேலாகத் திருத்தாத நெடுந்தீவு வீதிகள்

நெடுந்தீவு பிரதான வீதி யில் இருந்து வெள்ளைக் கடற்கரை வரையான வீதி கடந்த பத்து வருடங்களுக்கு மேலாகத் திருத்த வேலைகள் எதுவும் இடம்பெறாத நிலையில் உள்ளது.

வீதி அபிவிருத்தித் திணைக் களத்துக்குரிய இந்த வீதி யைத் திருத்தியமைக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பலதடவைகள் கோரிக்கை விடுக்கப்பட்ட போதும் இது குறித்து எந்த நடவடிக்கையும் இதுவரை இடம் பெறவில்லை.

வெள்ளக் கடற்கரை வீதியுடன் கிழக்கு ஆவமாவனப் பிள்ளையார் கோயில் வரை யான வீதியும் திருத்தம் செய்யப்பட வேண்டியுள்ளது.

இந்த வீதிகள் திருத்தத் துக்கென நிதி ஒதுக்கப்பட்டுள்ளது போதும் இன்னமும் வீதித் திருத்த வேலைகள் ஆரம்பிக்கப் படவில்லை எனவும், இந்த இரண்டு வீதிகளுமே உள்ளூர்ப் போக்குவரத்தில் முக்கியமானவை எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (த-7)

மாடி வீடு விற்பனைக்கு
கச்சேரிக்கு அண்மையில் ஒன்றரைப் பரப்பில் அமைந்துள்ள புதிய மாடி வீடு உடன் விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை. 11,12,13 ஆம் திகதி களில் பார்வையிடலாம்.
(சி/0145)(8.16) உரிமையாளர் : 0777359506

கார் விற்பனைக்கு உண்டு
நல்ல நிலையில் உள்ள தொடர் இல 301 - xxxx Nissan Sunny Ex Saloon கார் விற்பனைக்கு உண்டு.
(35867)(6.7) தொடர்பு : 077 978 9223

உயர் கலைக் கல்லூரி - நீசாலை
A/L - 2013 விசேட செயலமர்வுகள்
காலம்:- 12.04.2013 நேரம் :- 8.30 - 1.00
விவசாய விஞ்ஞானம் - V. சசிக்குமார்
நாடகமும் அரங்கியலும் - N. ராமதாஸ்
A/L - 2013, 2014, 2015
கலை, வர்த்தக, கணித, உயிரியல் பிரிவுகள் நடைபெறுகின்றன.
(35866)(6.7) நிர்வாகி.


ஓம் சக்தி
ஸ்ரீ வடபத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம்
தாவடி தெற்கு, கொக்குவில்
வருடாந்த மஹோற்சவம்-2013
அம்பிகை அடியார்களே!
அம்பாளின் வருடாந்த மஹோற்சவம் நாளை (11.04.2013) வியாழக்கிழமை கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகி (25.04.2013) வியாழக்கிழமை சித்திரா பௌர்ணமிதின தீர்த்தோற்சவத்துடன் நிறைவு பெறும்.
விசேட தினங்கள்:

| | | | |
|---|---|---|---|
| கொடியேற்றம் | 11.04.2013 | வியாழக்கிழமை | மு.ப.10.00 மணி |
| கைலாசவாகனம் | 19.04.2013 | வெள்ளிக்கிழமை | மாலை 07.00 மணி |
| சப்பரம் | 23.04.2013 | செவ்வாய்க்கிழமை | மாலை 07.00 மணி |
| இரதோற்சவம் | 24.04.2013 | புதன்கிழமை | |
| தீர்த்தோற்சவம் | 25.04.2013 | வியாழக்கிழமை | |
| பூங்காவனம் | 26.04.2013 | வெள்ளிக்கிழமை | |

பகல் உற்சவம் காலை 8.00 மணிக்கும் இரவு உற்சவம் மாலை 5.00 மணிக்கும் ஆரம்பமாகி நடைபெறும்.
அம்பாள் அடியார்கள் இப்புனித மஹோற்சவ நாள்களில் ஆசாரசீலர்களாக வருகை தந்து தரிசித்து அவளின் திருவருளால் அனைத்து நலன்களும் பெற்று பெருவாழ்வு வாழ்வீர்களாகுக.
ஸ்ரீ வடபத்திரகாளி
அம்பாள் தேவஸ்தானம்,
தாவடி தெற்கு, கொக்குவில். (35872)(8.6.14) ரவி ஐயா
ஆதீனகர்த்தா.

VACANCIES
UNIVERSITY OF JAFFNA, SRILANKA
University of Jaffna will entertain applications upto 23.04.2013 from suitably qualified persons for the under mentioned posts on temporary basis.
FACULTY OF MANAGEMENT STUDIES AND COMMERCE
Temporary Lecturer in
Accounting/ Marketing/ Human Resource Management/ Financial Management.

| POST | SALARY SCALE |
|---|---|
| Temporary Lecturer | Rs. 26, 020/- p.m.(Fixed) |

In addition to the above salary, the allowances approved by University Grants Commission will also be paid.
Application forms and other details may be obtained from the office of the Senior Assistant Registrar/ Acadimic Establishments, Univer-sity of Jaffna, Sri-Lanka.either in person or by post, on a payment of Rs.100/- per application form. those who wish to obtain applicati-on forms by post are requestd to send a money order/ postal order drawn in favour of the Bursar, University of Jaffna together with a self adderssed stamped envelope 23x10 c.m. in size.
Application forms and other details will also be available in the university website www.jfn.ac.lk. Those who wish to send the application forms downloaded from the University website should attach a money order/postal order for Rs.100/- to the application form drawn in favour of the Bursar, University of Jaffna.
Those who wish to apply for more than one post should apply in **separate forms.**
Applicants from the University System/ Government Departments/ Corporations and Statutory Board should channel their applica tions through the Head of respective Institutions. Illegible, incomplete and late applications will be rejected without intimation. Only short listed applicants will be called for an interview.
Registrar,
University of Jaffna, SriLanka.
(8290) (23-14)

தென்மராட்சி பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் (வ.து)
கொடிகாமம்
அரிசி ஆலை களஞ்சிய கட்டடம், மதில் அத்திவாரம் அமைத்தற்கான
கூறுவிலை கோரல்
எமது சங்கத்தினால் கொடிகாமம் கச்சாய் வீதியில் அரிசி ஆலைக்கான களஞ்சியக் கட்டடம் (அளவு- 60',38') மதில் அத்திவாரம் அமைத்தற்கு பதிவு செய்யப்பட்ட கட்டட ஒப்பந்தகாரர்களிடம் இருந்து கூறுவிலை கோரப்படுகின்றது.
★ கேள்விப் பத்திரம் வழங்கப்படும் திகதி:- 10/04//2013-24/04/ 2013 வரை
★ கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி:- 24/04/2013 நண்பகல் 12.00மணி வரை
★ மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூபா 1000/= உம் மீளளிக்கப்படும் வைப்புப் பணமாக 25000/= உம் செலுத்துதல் வேண்டும்.
★ சரியாக நிரப்பப்படாத, தெளிவற்ற கேள்விப் பத்திரங்களை ஏற்கவோ, மறுக்கவோ பணிப்பாளர் சபைக்கு அதிகாரம் உண்டு.
கேள்வி விண்ணப்பப் படிவத்தையும், கட்டட வரைபடத்தையும், சங்க கடமைத் தினங்களில் பிரதம சங்கத்தில் பெற்று கூறுவிலையை தபாலுறையில் "தலைவர் தென்மராட்சி கிழக்குப் ப.நோ.கூ.சங்கம் (வ.து) பருத்தித்துறை வீதி, கொடிகாமம்" எனும் முகவரியிட்டு இடது பக்க மேல் மூலையில் "அரிசி ஆலை களஞ்சியக் கட்டடம், மதில் அத்திவாரம் அமைத்தற்கான கூறுவிலை" என எழுதி நேரிலோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ கிடைக்கப் பெறச்செய்யும் வண்ணம் கேட்டுக்கோள்கின்றேன்.
தென் கிழக்கு. பல். நோ. கூ.சங்கம் (வ.து)
பருத்தித்துறை வீதி, கொடிகாமம். தலைவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபர்களுக்கான கூட்டம்

தென்மராட்சி,ஏப்.10

தென்மராட்சி கல்வி வலயத்தில் க.பொ.த.சாதாரண தரம் வரையான வகுப்புக்களைக் கொண்ட பாடசாலைகளின் அதிபர்களுக்கான கூட்டம் இன்று புதன்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு வலயக் கல்வி அலுவலகத்தில் நடைபெறும்.

இதுவரை பரீட்சைப் பெறுபேற்றுக்கான பகுப்பாய்வு அறிக்கையினை சமர்ப்பிக்காதவர்கள் அவற்றினைக் கொண்டு வருமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் அறிவித்துள்ளார். (ந-9)

# அரச அலுவலர்களுக்கு ஆக்கத்திறன் போட்டி

தென்மராட்சி, ஏப்.10

இலங்கை கலாசார மற்றும் கலை அலுவலர்கள் அமைச்சினால் அரச அலுவலர்களிடமிருந்து இந்த வருடத்துக்கான ஆக்கத்திறன் போட்டியினை நடத்துவதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

சிறுகதை, பாடல், கவிதை, சிறுவர்கதை, குறுநாடகம், ஓவியம் ஆகிய போட்டிகளே நடத்தப்படவுள்ளன. ஆக்கங்களைத் தத்தமது நிறுவனத் தலைவரின் பரிந்துரையுடன் ஜூன் முப்பதாம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு அமைச்சின் செயலாளர் வசந்த ஏக்கநாயக்கா சகல திணைக்களத் தலைவர்களுக்கும் அறிவித்துள்ளார். (ந-9)

# நிர்வாக சபை உறுப்பினர் தெரிவு

யாழ். கொக்குவில் ஸ்ரீ வாராஹி சனசமூக நிலைய-புதிய நிர்வாக சபை தெரிவு, பிரதேச சபைத் தலைவர் ப.வசந்தகுமார் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

புதிய நிர்வாகிகளாக தெரிவுசெய்யப்பட்டோர் விவரம் வருமாறு:-

தலைவர் இ.சிவபாலன், செயலாளர் த.தனதீசன், பொருளாளராக மா.ரவிசங்கர், போஷகராக, து.பிறேம்குமார், உள்ளக கணக்காய்வாளராக இ.ராஜ்கரன், உப தலைவராக தே.ஜெயராசா, உப செயலாளராக ரி.மேனுகா தெரிவாகினர். மேலும் நிர்வாக சபை உறுப்பினர்களாக ஆறுபேர் தெரிவுசெய்யப்பட்டனர். (எ)

# பச்சை மரங்களை வெட்டி அழிக்கும் விறகு வியாபாரிகள்

## வடமராட்சி கிழக்கு மக்கள் கவலை

வடமராட்சி,ஏப்.10

பச்சை மரங்கள் வெட் டுவதும், தேங்காய் பிடுங்கு வதிலும் விறகு வியாபாரம் செய்வோர் ஈடுபட்டுள்ளதாக அந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவித்தனர்.

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் உள்ள நாகர் கோயில் தெற்கு தரவைப் பகுதியில் விறகு வியாபாரிகளால் பச்சை மரங்கள் வெட்டப்படுவதுடன் தென்னை மரங்களில் உள்ள தேங்காய்களும் பறிக்கப்படுவதாக அந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

அந்தப் பகுதியில் பூர்வீக நாகதம்பிரான் கோயிலின் பின்புறத்தில் உள்ள குடியிருப்பாளர்களின் காணிகளிலேயே பச்சை மரங்கள் வெட்டுவதும், தேங்காய் பிடுங்குவதிலும் விறகு வியாபாரம் செய்வோர் ஈடுபட்டுள்ளதாக அந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவித்தனர்.

நாகர்கோவில் தெற்கில் நாகதம்பிரான் கோயிலைச் சூழவுள்ள பகுதி விடுவிக்கப்பட்ட போதிலும் மக்கள் இன்னமும் மீள்குடியமரவில்லை. இருப்பினும் அவர்கள் தத்தமது குடியிருப்புக் காணிகளுக்கு அடிக்கடி சென்று துப்புரவுப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

ஆண்கள் இல்லாத நேரம் பார்த்து அந்தப் பகுதிக்கு அதிகமாகச் சென்றுவரும் விறகு வியாபாரிகள் வேம்பு, நாவல், சவுக்கு உள்ளிட்ட பயன்தரும் மரங்களை வெட்டி வீழ்த்தி விறகுகளுக்காக எடுத்துச் செல்வதுடன் தென்னை மரங்களில் உள்ள தேங்காய்களை பிடுங்கிச் செல்கின்றனர்.

விறகு வியாபாரிகள் தொடர்ந்து குறித்த நடவடிக்கைகளில் ஈடுபடுவதால் கிராம இயற்கைவளம் பாதிப்படைகின்றது.

இத்தகைய செயல்களைத் தடுக்க சம்பந்தப்பட்டோர் முன்வரவேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (வ-8)


BARATHY
சித்தன்கேணி
O/L DAY CLASS
நாளை ஆரம்பம்
11.04.2013 வியாழக்கிழமை 8.00A.m.
நீங்கள் நன்கு அறிந்த இந்தப் பிரதேசத்தின் மிக பிரபல்யம் பெற்ற ஆசிரியர் குழுவினால்

| | |
|---|---|
| ★ விஞ்ஞானம் தேவா | ★ கணிதம் சிவரூபன் |
| ★ தமிழ் பாலா சூகபரன் | ★ வரலாறு சுதன் பார்த்திபன் |
| ★ ஆங்கிலம் சுதர்சன் மனோகரன் | ★ சமயம் N.T. தரன் |
| ★ வர்த்தகம் திருக்குமரன் | ★ விவசாயம் விஸ்ணுதேவன் |
| ★ சுகாதாரம் பார்த்திபன் | ★ நாடகம் சுஜீதரன் |

★ புவியியல் - சர்வேஸ்வரன்
Note: இந்த முறை 80 மாணவர்களுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்படும் (34952) (45.6.7)
அனுமதிக்கு முந்திக்கொள்ளுங்கள்

ஆங்கில வகுப்புக்கள்
இலகுவான முறையில்
ஆங்கிலம் கற்பிக்கப்படும்.
மணித்தியாலத்துக்கு 100/=
தொடர்பு: 021 567 0350/
077 329 6407
(35853)(6.7.11)

விற்பனைக்கு
Champ T.V.S, LCD 22" சொனிTV
விற்பனைக்கு உண்டு. (35854)(6.7)
தொ.பே:0750394152,0212212059


முதலாவது பிறந்தநாள் வாழ்த்து
கோப்பாய் தெற்கைச் சேர்ந்த
லதீஷன் - தாரணி தம்பதியரின்
செல்வப் புதல்வி
நிஷானா
இன்று (10.04.2013)
தனது முதலாவது
பிறந்தநாளை தனது இல்லத்தில் வெகு
விமரிசையாகக் கொண்டாடுகின்றார்.
இவரை சகல கலைகளும் கற்று
செல்வச்சிறப்புடன் பல்லாண்டு வாழ்கவென
வாழ்த்துவோர்.
ஜேர்மனியில் வசிக்கும்
பெரிய மாமா- பிரசாத்,
அத்தை- சோபிகா,
மச்சான் - சந்தோஷ்
மச்சாள் - இலக்கியா


(35858)(5.6.7)

பாராட்டி வாழ்த்துகின்றேன்
கிளி/ விவேகானந்த வித்தியாலயத்தின் வரலாற்றில் முதல் தடவையாக 2012 க.பொ.த. (சா/த) பரீட்சையில் கணித பாடத்தில் 100%மான மாணவர்கள் சித்தியடைந்து பாடசாலைக்குப் பெருமை தேடித்தந்த மாணவர்களை மனமுவந்து பாராட்டுகின்றேன்.

| | | | |
|---|---|---|---|
| 01.சி.லக்சன் | "C" | 15.ம.யதுர்சன் | "S" |
| 02.க.தினேஸ் | "C" | 16.சி.சுஜந்தன் | "S" |
| 03.இ.நவநீதரன் | "C" | 17.யூ.டிலக்சன் | "S" |
| 04.ர.விதுசன் | "C" | 18.சி.பிருந்தன் | "S" |
| 05.இ.தனுசன் | "C" | 19.க.வருண்ராஜ் | "S" |
| 06.பி.நொவின் பிரகாஸ் | "C" | 20.சு.சுரேஸ்குமார் | "S" |
| 07.சே.துவாரகன் | "C" | 21.ப.பத்மகுமார் | "S" |
| 08.க.அகிலன் | "C" | 22.பொ.மகிவரசன் | "S" |
| 09.மு.தேனுஜன் | "C" | 23.இ.மதன்ராஜ் | "S" |
| 10.சி.நிவேதா | "C" | 24.சு.சுதர்சன் | "S" |
| 11.வி.டுசாந்தினி | "C" | 25.வெ.வனிதா | "S" |
| 12.ஞா.அபிசாளினி | "C" | 26.பி.நிலானி | "S" |
| 13.வி.தனோசா | "C" | 27.ச.ரதீசியா | "S" |
| 14.அ.சியாமளா | "C" | 28.கோ.சுயாத்தா | "S" |

(35857) (23-14,6) சி.பாலச்சந்திரன் (கணிதபாட ஆசிரியர்)
கிளி/விவேகானந்த வித்தியாலயம், அம்பாள்குளம், கிளிநொச்சி.

MARSHA SYSTEMS (PVT) LTD
www.marshasystems.lk
Solution to the People
SOLUTION TO THE PEOPLE

Special offer
FREE
1 year key
Antivirus
CLASSIC
Intel Pentium
3rd Generation
Intel® Dualcore® Processor G2020
Motherboard G61
2GB DDR III
Hard Disk 500 GB
19" LED Monitor
UPS DCP
ATX Casing
DVD Writer
KEY Board
Mouse
49000.00
HP G4 Pavilion
Intel Core i3 370M 2.40Ghz
2GB DDRIII SDRAM
500GB HDD 7200rpm
14" HD LED Display
69000.00

சித்திரைப்புத்தாண்டு
சிறப்புத்தள்ளுபடி
கையிருப்பு உள்ளவரை மட்டுமே..
CLASSIC
Intel CORE i3
3rd Generation
Intel® Core i3 Processor 3.30GHz
Motherboard G61
2GB DDR III
Hard Disk 500 GB
19" LED Monitor
UPS DCP
ATX Casing
DVD Writer
KEY Board
Mouse
58000.00
எம்மிடம் கணனிகளை கொள்வனவு செய்து கணனி பராமரிப்பு சேவையினை எப்பொழுதும் இலவசமாக்கிக் கொள்ளுங்கள்.
இன்றே உங்கள் அருகில் இருக்கும் எமது காட்சியறைக்கு விரையுங்கள்..
யாழ்ப்பாணம்
இல : 232 கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்
TP :021 4924437
நெல்லியடி
MMV Road, Nelliady
TP : 021 4924118

COMPUTERS
124B. பலாலி வீதி. யாழ்ப்பாணம்
(இலுப்பையடி சந்திக்கு அருகாமையில்)
10-04-13 முதல்
மாபெரும் மலிவு
விற்பனை
20-04-13 வரை
Hotline :
0777683676
Tel : 0212224959

INTEL DUAL CORE PC
Intel Dual Core 2.9ghz-2020 Processor
Intel DH61 Ho Motherboard
2GB DDR3 Kingston/ Trasend Ram
500GB Sata HD Toshiba/Samsung/Hitchi
24X Samsung Sata Dvd Writer
450w Casing Teckcom 47 250/=
19" Samsung LED Monitor
A4Teck Keyboard & Optical Mouse
Optical Mouse Pad, Usb Multi-m Speaker
650VA Teck Fine UPS

INTEL I3 PC
Intel I3-3.3GHz-3220 Processor
Intel DH61 Ho Motherboard
2GB DDR3 Kingston/ Trasend Ram
500GB Sata HD Toshiba/Samsung/Hitchi
24X Samsung Sata Dvd Writer
450w Casing Teckcom 52 250/=
19" Samsung LED Monitor
A4Teck Keyboard & Optical Mouse
Optical Mouse Pad, Usb Multi-m Speaker
650VA Teck Fine UPS

HP PAVILLION G4-I3
(I3/2GB/500GB/WEBCAM/)
62 000/=
HP PROBOOK 6460-I5
( I5/4GB/500GB/WECAM)
70 000/=
TOSHIBA I3- c850
(.I3/2GB/320GB/WEBCOM )
62 500/=

Kaspersky Single User-2013 :1400/=
Huwaei E173 Hsda Dongle... :3100/=
Laptop Bag With Free Mouse:1300/=
Esonic 41 Series Combo
Motherboard(DDR1+DDR2)....:7000/=
650va Teck Fine Ups.............:4100/=
Techcom Web Camera...........:1400/=
500gb Sata Hardiak............. :7000/=
150mbps TP-Link W-Ls router.:4750/=
மேலும் பல கணனி உதிரிப்பாகங்கள் மலிவுவிலையில்.....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டிப்ளோமாதாரி ஆசிரியராக நியமனம் பெறுவோர்;

# இன்றும் நாளையும் நேர்முகம்

யாழ்ப்பாணம், ஏப்.10

வடக்கு மாகாணப் பாடசாலைகளின் ஆசிரியர் வெற்றிடங்களுக்கு 212 தேசிய போதனாக் கல்வி டிப்ளோமாதாரர்களுக்கு ஆசிரியர் நியமனம் வழங்கப்படவிருக்கிறது. இந்த நியமனத்திற்காக நியமிக்கப்படவிருக்கும் தேசிய போதனாவியல் டிப்ளோமாதாரர்களில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த டிப்ளோமாதாரிகள் இன்று புதன் கிழமையும் நாளை வியாழக்கிழமையும் 11.04.2013 வடமாகாண கல்வி அமைச்சு அலுவலகத்தில் காலை 9.30 மணி தொடக்கம் மாலை 4.00 மணிவரை பாடசாலைத் தெரிவுக்காக நடைபெறவிருக்கும் நேர்முகத் தேர்வில் தங்கள் பிறப்புச் சான்றிதழ் மற்றும் தேசிய அடையாள அட்டை பிரதிகளுடன் தவறாது சமுகமளிக்குமாறு ஏனைய மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் வட மாகாணக் கல்வி அமைச்சின் உதவிச் செயலாளர் திருமதி. செ.சு. செபஸ்ரியனுடன் 077-209-0038 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் வட மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் சி. சத்தியசீலன் அறிவித்துள்ளார்.

நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டிருக்கும் 212 பேரின் விவரம் வருமாறு:-

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| என்.பிருந்தா- | (888650169V), | இ.றொபின்சன்- | (892221855V), | பி.தினேஸ்குமார்- | (880060295V), | பி.றஜனி- | 896503146V), |
| யு.சசிகலா- | (897123959V), | ஜே.சங்கீதா- | (887711313V), | இ.துஷாந்தினி- | (857733886V), | கே.கோசலா- | 885231705V), |
| எஸ்.சரன்ஜா- | (896582208V), | வி.விஜயசங்கர்- | (880580779V), | கே.அஜந்தினி- | (895440604V), | ஏ.பிரதீபா- | (895633305V), |
| ஆர்.மேகலா- | (887261520V), | எஸ்.செந்துரன்- | (870623542V), | கே.மைதினி- | (876093103V), | ஏ.நிரோசா- | (906711710V), |
| ரி.தியாகேஸ்வரி- | (886982747V), | எஸ்.பாலதீபன்- | (880720279V), | கே.சியாமளா- | (896610244V), | ஏ.தாரணி- | (898090485), |
| எஸ்.மதனரூபி- | (865792050V), | பி.புஸ்பவிஜிதா- | (886642113V), | என்.செந்தாளன்- | (883511271V), | எஸ்.நர்மலா- | (898601072V), |
| கே.ஜனனி- | (896701959V), | கே.றுக்சிகா- | (887860777V), | ஏ.ஆதவன்- | (841742133V), | எவ்.ஜெனாட் றம்ஷியா- | (887351376V), |
| கே.தயானிதி- | (895692255V), | வி.கவீசன்- | (890104223V), | பி.பிரியதர்சினி- | (885661009V), | எஸ்.யாழினி- | (898341224V), |
| ரி.கிருத்திகா- | (876402947V), | ஜே.கவித்ரா- | (895372714V), | ஏ.ஜே.மேரிதனுசியா- | (896472550V), | ஜே.கனிஷ்ரா- | (887934762V), |
| எஸ்.கோபிகா- | (905242946V), | கே.சசிரேகா- | (898662462V), | எம்.விமல்ராஜ்- | (890114091V), | எஸ்.சோபிகா- | (896773518V), |
| சி.மேரி ஜெயபாலினி- | (887871680V), | ஐ.அகிலரூபி- | (897952580V), | எஸ்.சிரோமி- | (897593882V), | ரி.யதுர்ஷியா- | (896503677V), |
| பி.ராதிகா- | (897091042V), | எஸ்.லக்சனா- | (886703090V), | ஜே.ப்ரின்சி- | (885397598V), | எஸ்.கோகுலராணி- | (867881743V), |
| ஆர்.மாதங்கினி- | (895800406V), | கே.சரன்ஜா- | (896462342V), | எம்.மெலனி- | (896043781V), | எம்.ஜனனி- | (885242901V), |
| சி.கிறிஸ்ரின் வேர்ஜினி- | (895713058V), | பி.மயூரி | (887101957V), | பி.அ.சகோ.மேரி மொறின் றோச்- | | பி.சுமணா- | (895984892V), |
| ரி.வனஜா- | (897802341V), | எஸ்.கௌசியா- | (876542510V), | | (847950616V), | ரி.ஜெயரூபி | (895352977V) |
| ஆர்.சிந்துஜா- | (898141390V), | ஆர்.சுகந்தன்- | (885640052V), | அ.சகோ.பி.டிலீசியா- | (847321571V), | வை.கார்த்திகாஜினி | (896072676V) |
| எம்.நிசாந்த்- | (897701464V), | பி.தமயந்தி- | (896803620V), | ஜே.றதீசியா- | (887122504V), | ஜே.சாலினி- | (898141918V) |
| ப.தாரணி- | (878581962V), | எம்.லக்சிகா- | (897022320V), | எஸ்.ஏ.மினோல்டா- | (896612646V), | எம்.மஞ்சுலா- | (876671697V) |
| ரி.சுதர்சன்- | (850121800V), | ஆர்.தர்மிலா- | (856922731V), | அ.சகோ.இ.பி.சவியானா கில்டா- | | வி.நிக்ஷன்- | (830461264V) |
| எஸ்.யாழினி- | (856142353V), | இ.அரனியா- | (897232090V), | | (836361059V), | ஜே.குயின்ஷ்கா- | (885853741V) |
| ஏ.சாலினி- | (896921940V), | எஸ்.ரஞ்சிதா- | (897761750V), | பி.விபுலாஜினி- | (878133161V), | பி.கஜந்தன்- | (892113866V) |
| பி.தர்சிகா- | (877473210V), | எஸ்.டிலக்ஷா- | (897971232V), | இமாஜினி- | (867943501V), | எஸ்.செவ்வேள்- | (850023441V) |
| ஆர்.ரமணன்- | (881761866V), | எஸ். அபிராமி- | (888410490V), | எம்.நிரோஜன்- | (890052134V), | எவ்.சிஷவ்னா- | (906783401V) |
| ஜே.ஈ மார்லின் தயானா- | (896503383V), | வி.புவி- | (886002696V), | பி.கார்த்தீபன்- | (870712685V), | எஸ்.ஜெயசுஜி- | (895162892V) |
| ஜே.கௌசிகா- | (897851024V), | ரி.தர்சிகன்- | (871652406V), | என்.நிசாந்தினி- | (887891591V), | கே.பாலகுமார்- | (890352413V) |
| எஸ்.சிவாஜினி- | (898592367V), | கே.தேனுகா- | (888572473V), | வி.ஜெயராஜா- | (872892354V), | எஸ்.சுபதர்சினி- | (896941976V) |
| ரி.மயூரன்- | (842152160V), | ரி.தாரணி- | (888520392V), | ஏ.நிரோசா- | (897723867V), | தி.கொலின்ஸ்- | (881032799V) |
| ரி.பத்மசிறி- | (822073166V), | வி.கீதாசினி- | (886692889V), | எஸ்.ஏ.நிலோஜினி- | (887303061V), | ஆர்.அபினேஷ்- | (881922391V) |
| என்.றேகா- | (897761254V), | ரி.பிரமிளா- | (895821322V), | கே.அர்ஜினி- | (876543265V), | என்.ஐ.எவ்.கேமலதா- | (896053655V) |
| ஏ.சுபேசன்- | (890992510V), | எம்.மயூரன்- | (887820759V), | எம்.ஆன்.லுட்ஸ்- | (887021848V), | ரி.லிங்கேஸ்வரன்- | (881093600V) |
| ரி.அஜந்தன்- | (898370500V), | எஸ்.சங்கீதா- | (896240765V), | ரி.தர்சினி- | (875883992V), | எஸ்.நிஷாந்த்- | (881511436V) |
| கே.மஜீதா- | (896083589V), | வி.துஜீவா- | (897604094V), | ரி.சிஜானா- | (898294323V), | எஸ்.பிரவினா- | (856204081V) |
| பி.மேகலா- | (898534051V), | கே.ஜனகன்- | (893151478V), | வி.ஜசோதா- | (877762068V), | எஸ்.மிர்தா- | (896434411V) |
| வி.சரண்யா- | (895722553V), | எஸ்.ஆர்த்திகா- | (876802112V, | ஜே.அஸ்வின்- | (886632363V), | கே.தசிகரன்- | (882161455V) |
| ஜி.சாரங்கன்- | (896243063V), | எஸ்.சோமகாந்தி | (896490869V), | ஈ.சுவீற்றி- | (898172090V), | ரி.கஸ்தூரி- | (905122770V) |
| எஸ்.மேரி புஸ்பமலர்- | (896452789V), | அஜந்தாஜினி- | (897851172V), | பி.றஜிதா- | (858604354V), | எஸ்.வினோதா- | (886532946V) |
| பி.சுபாசினி- | (875803689V), | ரி.ஜீவிதா- | (897502542V), | ஜே.நிரூபறோஜினி- | (865112602V), | எஸ்.ஸ்ரீமதி- | (885212727V) |
| எஸ். அபிராமி- | (876482479V), | எஸ்.ஆன்.குயின்ரீனா | (897362872V), | என்.பார்த்தீபன்- | (893570594V), | எஸ்.சுரேனா- | (888304096V) |
| எம். சதீஜா- | (888531289V), | எம்.சொரூபினி- | (897232103V), | பி.தனுஷயா- | (897621169V), | ஜெ.சர்மிலா- | (875333313V) |
| கே.பிரியதர்சினி- | (876023555V), | எஸ்.கோபிகா- | (897023989V), | வை.பைஷ்ரபி- | (897994607V), | எஸ்.மதுரியா- | (897713063V) |
| வை.லக்ஸ்மன் சுரெந்தர்- | (881363240V), | ஏ.சுதாசினி- | (895912557V), | வி.தர்மினி- | (898422445V), | கே.குகப்பிரியா- | (905104390V) |
| எஸ்.நிலானி- | (876532891V), | கே.பிரசாலினி- | (896991655V), | கே.அஜிந்தினி- | (897772922V), | எஸ்.சியாமளா- | (846583062V) |
| பி.சுதேசினி- | (905060589V), | எஸ்.சர்மிலா- | (895834157V), | டபிள்யு.ஜான்சியா- | (896972260V), | ஏ.அனிதா- | (856012107V) |
| எஸ்.சிவரமணன்- | (881282704V), | வி.விஜிதா- | (895923400V), | என்.பிரசாந்தினியா- | (895082856V), | ஏ.யசில்டா சாலினி- | (896203371V) |
| பி.துதீஸ்குமார்- | (860892545V), | எஸ்.பாஸ்கரன்- | (893581995V), | ஆர்.எமில்டா- | (897370557V), | வி.தியாகினி- | (856303322V) |
| எஸ்.கங்காதரன்- | (891313837V), | பி.கௌபிரியா- | (885573053V), | எஸ்.ஹம்ஷா | (896962078V), | ஆர்.வினிதா- | (896533596V) |
| ஏ.சர்வேஸ்வரன்- | (883591208V), | பி.சுசிலதா- | (885074430V), | ஜீ.நிஷாந்தியா- | (877332020V), | எஸ்.கஜானி- | (895673480V) |
| என்.சகிலன்- | (8883341749V), | ஆர்.பானுஜா- | (896394169V), | எஸ்.சைலஜா- | (897542897V), | ரி.பமிலா- | (896953117V) |
| கே.துஜாந்தனன்- | (871154295V), | ரி.கார்த்திகா- | (847362014V), | எஸ்.நிரோஜினி- | (898180891V), | எஸ்.மேனகா- | (896623460V) |
| ஓ.இ.ஜெயபிரியங்கன்- | (891632185V), | கே.நிக்சா- | (866433518V), | எஸ்.தீபனா- | (895514055V), | எஸ்.சுசீந்திரா- | (877142558V) |
| பி.சுதேஸ்- | (872363025V), | கே.சத்தியப்பிரகாஸ்- | (882140113V), | ஆர்.சுவேந்தினி- | (898092232V), | சி.பவகரன்- | (890533531V) |
| கே.கஜந்தன்- | (883551362V), | ஜே.எம்.சமீர்- | (871152306V), | என்.நிரோஜி- | (895973432V), | ஏ.சங்கீதா- | (888661328V) |
| பி.நிசாந்தன்- | (871010455V), | என்.கேசனா- | (877492931V), | என்.நாகசுதர்சினி- | (898451151V), | | |
| ஆர். ஹேமச்சந்திரன்- | (873172070V), | டபிள்யூ.சிவதர்சன் | (891411863V), | ரி.சர்மிலா- | (905041886V), | | |

## தென்மராட்சி பாடசாலைகளுக்கு விளையாட்டுப் பயிற்சி மையம்

தென்மராட்சி,ஏப்.10

இலங்கை தேசிய இளைஞர் சேவைகள் மன்ற யாழ். மாவட்டக் கிளையினர் தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளில் விளையாட்டுக்களை ஊக்குவிக்கும் பொருட்டு பயிற்சி மையத்தை ஆரம்பிக்கவுள்ளனர்.



பயிற்சி மையத்திற்கான விளையாட்டு உபகரணங்களை வழங்கும் நிகழ்வு நேற்று செவ்வாய்க்கிழமை சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் இடம்பெற்றது. தேசிய இளைஞர் சேவைகள் மன்ற வடமாகாண இணைப்புச் செயலாளர் திருமதி வி.ஸ்ரீகாந்தரூபன் மன்ற யாழ்.மாவட்ட உதவிப் பணிப்பாளர் த.ஈஸ்வரராஜா ஆகியோர் விளையாட்டுப் பயிற்சி உபகரணங்களை தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமாரிடம் கையளித்தனர்.

இந்தப் பயிற்சி மையம் மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மவி.மைதானத்தில் நடத்தப்படவுள்ளதால் உபகரணங்கள் அனைத்தும் வித்தியாலயத்தில் வைக்கப்பட்டிருக்குமெனவும் வலயப் பாடசாலைகள் இந்த உபகரணங்களைப் பயன்படுத்தலாமெனவும் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரிக் குரிய விளையாட்டு உபகரணங்கள் அதிபர் க.அருந்தவபாலனிடம் கையளிக்கப்பட்டன. (தே-6)

## வலி. வடக்கில் மீளக்குடியேறிய மக்களுக்கு உதவிகள்

யாழ்ப்பாணம், ஏப்.10

வலி.வடக்குப் பிரதேச சபையினால் 'யுனிசெப்' நிறுவனத்தின் அனுசரணையுடன் மீளக்குடியமர்ந்த மக்க ளுக்கு மலசல கூடம் மற்றும் கிணறு என்பன அமைத்துக் கொடுக்கப்பட்டு வருவதாகப் பிரதேச சபையின் தவிசாளர் சோ.சுகிர்தன் தெரிவித்தார்.

வலி.வடக்கில் மக்கள் மீளக்குடியமர்ந்த பல்வேறு பகுதிகளிலும் மக்களுக்கான உதவிகள் உரியமுறையில் சென்றடைவதில்லை. இதுவரை எந்தவிதமான உதவிகளையும் பெறாத மக் களைத் தெரிவு செய்து அவர் களுக்கே பிரதேச சபை உதவிகளை வழங்கி வருகின்றது.

மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட கூவில், வசந்தபுரம், வலித்தூண்டல், நகுலேஸ்வரம், கொல்லன் கலட்டி, மாவிட்டபுரம் ஆகிய பகுதிகளில் உள்ள மக்களுக்கே இந்த உதவிகள் வழங்கப்படவுள்ளன.

80 ஆயிரம் ரூபா பெறுமதியில் 28 மலசல கூடங்களும், ஒரு இலட்சம் ரூபா பெறுமதியில் 22 கிணறுகளும் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன. இதற்குரிய வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை 'யுனிசெப்' நிறுவன நிதியில் ஏற்கனவே 25 மலசல கூடங்களும், 10 கிணறுகளும் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

மீளக்குடியமர்ந்த மக்களுக்கான உதவிகள் தொடர்ச்சியாக வழங்கப்படும் என்று வலி.வடக்கு பிரதேச சபைத் தலைவர் தெரிவித்தார்.(த-5)

## மாணவர்களுக்கு மாதுளம் கன்றுகள்

சங்கானை,ஏப்.10

இன்று செடி நடுவோம்-நாளை பயன் பெறுவோம் மஹிந்த சிந்தனையின் கீழ், மரம் நடும் விழாவும், பாடசாலை மாணவர்களுக்கான பயன்தரும் மரங்கள் வழங்கும் நிகழ்வும், சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

மாணவர்களின் பெற்றோர்கள் வரவழைக்கப்பட்டு, 1,000இற்கும் மேற்பட்ட மாதுளம் மரங்கள் அவர்களுக்கு வழங்கப்பட்டன. அத்துடன் 'இன்று செடி நடுவோம்-நாளை பயன் பெறுவோம்' என்ற தொனிப்பொருளில் விவசாய ஆசிரியரினால் கருத்தரங்கும் நடைபெற்றது.

(ந-29)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# வடமாகாணப் பூப்பந்தில் யாழ். அணிகள் சாதிப்பு

## ஆடவர், மகளிர் பிரிவுகளில் சம்பியன்

வவுனியா, ஏப். 10

வட மாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட மாவட்ட அணிகளுக்கிடையிலான மாகாண மட்டப் பூப்பந்தாட்டப் போட்டியில் யாழ். மாவட்ட அணி ஆண், பெண் ஆகிய இரு பிரிவுகளிலும் சம்பியனாகிச் சாதனை படைத்தது.

மாகாண மட்டப் பூப்பந்தாட்ட இறுதிப் போட்டிகள் வவுனியா நகரசபை உள்ளக விளையாட்டரங்கில் இடம்பெற்றன.

முதலில் இடம்பெற்ற பெண்களுக்கான இறுதியாட்டத்தில் வவுனியா மாவட்ட அணியும், யாழ். மாவட்ட அணியும் மோதிக்கொண்டன. மூன்று ஒற்றையர் மற்றும் இரண்டு இரட்டையர் ஆட்டங்களைக் கொண்ட இந்த இறுதிப் போட்டியில் முதலில் இடம்பெற்ற ஒற்றையர் ஆட்டத்தில் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த துவாரகாவும், யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த நிஷாதாரணியும் மோதிக்கொண்டனர். இதில் 21:17, 21:14 என்ற புள்ளிகள் அடிப்படையில்முதல் இரண்டு செற்களையும் தன்வசமாக்கி வவுனியா அணியின் துவாரகா வெற்றியீட்டினார்.

தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது ஒற்றையர் ஆட்டத்தில் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த ஜனனியும், யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த நிவர்சிவாவும் மோதிக் கொண்டனர். மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் முதல் செற்றை 21:4 என்ற புள்ளிகள் அடிப்படையில் நிவர்சிவா வெற்றி கொண்டார். ஆயினும், இரண்டாவது சுற்றில் ஆக்ரோஷத்துடன்போராடிய ஜனனி 18:21 என்ற புள்ளிகள் அடிப்படையில் அந்தச் சுற்றை தன்வசமாக்கி, பதிலடி கொடுத்தார். எனினும் வெற்றியாளரை நிர்ணயிக்கும் 3ஆவது சுற்றில் நிவர்சிவா எழுச்சி பெற்று ஆடினார். இதனால் அந்தச்சுற்றை அவர், 21:8 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றி ஆட்டத்தில் வெற்றியீட்டினார்.

அடுத்து இடம்பெற்ற மூன்றாவது ஒற்றையர் ஆட்டத்தில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த நிஷாந்தினியும், வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த தர்சிகாவும் மோதிக் கொண்டனர். இதில் 21:3, 21:5 என்ற புள்ளிகளைப் பெற்று 2:0 என்ற நேர் செற் கணக்கில் யாழ். மாவட்ட அணியின் நிஷாந்தினி வெற்றி வாகை சூடினார்.

பின்னர் இடம்பெற்ற இரட்டையர் ஆட்டத்தில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த பெனிசன - நிஷாந்தினி இணையை எதிர்கொண்டது வவுனியா மாவட்ட ஜனனி- துவாரகா இணை. இந்த ஆட்டத்தில் அபாரமாக ஆடிய யாழ். வீராங்கனைகள் 2:0 என்ற நேர் செற்கணக்கில் வெற்றியீட்டினர்.

இறுதியில் 3:1 புள்ளிகள் அடிப்படையில் மகளிர் பிரிவு பூப்பந்தில் யாழ்.மாவட்ட வீராங்கனைகள் சம்பியனாகினர். இறுதிப் போட்டியில் சிறந்த வீராங்கனையாக யாழ். மாவட்ட அணியைச் சேர்ந்த நிவர்சிவா தெரிவு செய் யப்பட்டார்.

அடுத்த இடம்பெற்ற ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் யாழ்.மாவட்ட அணியும் வவுனியா மாவட்ட அணியும் மோதிக் கொண்டன.

நடப்புச் சம்பியனான வவுனியா மாவட்ட அணியை இம்முறை எப்படியும் வெற்றி கொண்டே தீரவேண்டும் என்ற ஆவேசத்துடன் யாழ். மாவட்ட அணி வீரர்கள் களமிறங்கினர். கடந்த வருடம் நடைபெற்ற இறுதிப் போட்டியில் வவுனியா அணியிடம் பெற்ற தோல்விக்கு இந்தமுறை அந்த அணியை வென்று பழி தீர்க்க வேண்டும் என்ற ஓர்மம் யாழ். வீரர்களின் ஆட்டத்தில் வெளிப்பட்டது.

இதில் முதல் இடம்பெற்ற ஒற்றையர் ஆட்டத்தில் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த இராஜ்குமாரும், யாழ். மாவட்ட அணியைச் சேர்ந்த ஆன்சவியும் மோதிக்கொண்டனர். இதில் ஆன்சவி 21:18, 21:14 என்ற புள்ளிகளைப் பெற்று 2:0 என்ற நேர் செற் கணக்கில் வென்றார்.

அடுத்து இடம்பெற்ற இரண்டாவது ஒற்யைர் ஆட்டத்தில் வவுனியா மாவட்ட அணியைச் சேர்ந்த சுபேசன் மிகவும் அபாரமாக விளையாடி 21:19,18:21,22:20 என்ற புள்ளிகள் அடிப்படையில் யாழ். மாவட்ட வீரரான துஷாந்தனைத் தோற்கடித்தார்.

பின்னர் இடம்பெற்ற மூன்றாவது ஆட்டத்தில் யாழ். மாவட்ட அணி வீரர் ரெமின்சன், வவுனியா மாவட்ட வீரரான கோபிநாத்தை 21:15, 21:11 என்ற புள்ளிகள் அடிப்படையில் இலகுவாக வெற்றி கொண்டார்.

எனவே வெற்றி தோல்வியை தீர்மானிக்கும் வகையில் நடந்த முதலாவது இரட்டையர் ஆட்டத்தில் யாழ். மாவட்ட அணியைச் சேர்ந்த நிஷாந்தன்- ரெமின்சன் இணையும், வவுனியா மாவட்ட இராஜ்குமார்-சுதர்சன் இணையும் ஒன்றையொன்று எதிர்த்து ஆடின.

இதில் ஆரம்பம் முதலே அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய யாழ். மாவட்ட வீரர்கள் 21:7, 21:13 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றனர். இந்த வெற்றியின் மூலம் 3:1 என்ற புள்ளிகள் அடிப்படையில் ஆடவர் பிரிவில் வடமாகாணச் சம்பியனானது யாழ்.மாவட்ட அணி.

ஆடவர் பூப்பந்து இறுதிப் போட்டியில் சிறந்த வீரராக யாழ். மாவட்ட அணி யைச் சேர்ந்த ரெமின்சன் தெரிவு செய்யப்பட்டார்.

(ங-23-400)

*இலங்கை மெய்வல்லுநர் சங்கத்தால் கொழும்பு சுகததாசா விளையாட்டு மைதானத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற அகில இலங்கைப் பெண்களுக்கான மெய் வன்மைப் போட்டிகளில் யாழ்ப்பாணம் அளவெட்டியைச் சேர்ந்த ஆர்.காவேரி கோலூன்றிப் பாய்தல் போட்டியில் 3.20 மீற்றர் பாய்ந்து இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்டார். இவர் அளவெட்டி அருணோதயக் கல்லூரியின் பழைய மாணவியும் தற்போது கடற்படை அணியினருக்காக விளையாடி வருகின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ற-86)*



## இன்றைய ஆட்டங்கள்



யாழ்ப்பாணம், ஏப்.10

பருத்தித்துறை உதைபந்தட்ட லீக்கின் அனுமதியுடன் நக்கீரன் விளையாட்டுக் கழகம் நடந்தும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் இன்று புதன்கிழமை இடம்பெறவுள்ள ஆட்டத்தில் பங்குபற்றவுள்ள அணிகளின் விவரம்:-

பி.ப. 3.30 மணி

றேஞ்சஸ் வி.க. 'ஏ' அணி எதிர் ஆதிசக்தி வி.க.

பி.ப. 4.30 மணி

பருத்தித்துறை ஐக்கிய வி.க. எதிர் கலட்டி வி.க. 'ஏ' அணி. (ற-23)

★★★

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகம் நடந்தும் உதைபந்தாட்டத் தொடரில் இன்று புதன்கிழமை இடம்பெறவுள்ள அரையிறுதி ஆட்டத்தில் பங்குபற்றவுள்ள அணிகளின் விவரம்:-

பி.ப. 4 மணி

கொற்றவத்தை சிவானந்தா வி.க. எதிர் நவிண்டில் கலைமதி வி.க. (ற-23-400)

★★★

தெல்லிப்பழை நாமகள் சனசமுக நிலையத்தினதும் விளையாட்டுக்கழகத்தினதும் 50 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடந்தப்படும் கரப்பந்தாட்டச் சுற்றுத் தொடரில் இன்று புதன்கிழமை இடம் பெறவுள்ள அரையிறுதியாட்டத்தில் பங்கு கொள்ளும் அணிகளின் விவரம்:-

இரவு 7மணி

தெல்லிப்பழை நண்பர்கள் 'ஏ' அணி எதிர் ஏழாலை சரஸ்வதி 'பி' அணி

இரவு 8.30 மணி

சங்கனை ஞான வைரவர் 'ஏ' அணி எதிர் தெல்லிப்பழை நண்பர்கள் 'பி' அணி.

(ற-23)

## தென்மராட்சி பாடசாலைகளுக்கான விளையாட்டுச் செயற்பாடுகள் நாளை

தென்மராட்சி, ஏப்.10

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான வலயமட்ட விளையாட்டுச் செயற்பாடுகள் நாளை வியாழக்கிழமை ஆரம்பமாகி எதிர்வரும் 25 ஆம் திகதி நடைபெறுமென அறிவிக்கப் பட்டுள்ளது.

15,17,19 வயது பிரிவு ஆண்கள், பெண்கள் பிரிவுகளுக்கான எல்லை, 15,19 வயது பிரிவுகளுக்கான கரம், சதுரங்கம் பட்மின்டன் , 19 வயது ஆண், பெண் பிரிவுகளுக்கான மேசைப்பந்து, உடற்பயிற்சி ஆகிய போட்டிகள் மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வ., சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி, சாவகச்சேரி மகளிர் கல்லூரி கைதடி நவில்ட் பாடசாலை ஆகியவற்றில் நடத்தப்படவுள்ளன.

15,17,19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டிகள் நாளையும், நாளை மறுதினமும் பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டிகள் எதிர்வரும் 15 ஆம் திகதி, 16 ஆம் திகதிகளில் மட்டுவில் சந்திரபுர ஸ்கந்த வரோதய மகாவித்தியாலய மைதானத்தில் இடம் பெறும் எனவும் வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஸ்ணகுமார் அறிவித்துள்ளார். (ற-9)

## கரப்பந்தாட்ட அரையிறுதி ஆட்டங்கள் இன்று

வலி.வடக்கு, ஏப்.10

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெறும் 15,17,19 வயதுப் பிரிவு ஆண்கள் பெண்களுக்கான கரப்பந்தாட்ட போட்டிகளின் அரையிறுதி ஆட்டங்கள் மற்றும் மூன்றாம் இடத்துக்கான இறுதிப் போட்டிகளும் இன்று புதன்கிழமை காலை 8 மணி முதல் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நடபெறவுள்ளது.(ற-86)

## பெண்கள் கிரிக்கெட் இறுதியாட்டம் இன்று

தென்மராட்சி,ஏப்.10

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் பெண்கள் கிரிக்கெட் அணிகளுக்கான சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியும் மூன்றாவது இடத்துக்கான போட்டியும் இன்று புதன்கிழமை பி.ப.2. மணிக்கு மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வி. மைதானத்தில் நடைபெறும் என்று வலயக் கல்விப் புணிப்பாளர் சு.கிருஸ்ணகுமார் அறிவித்துள்ளார்.

இறுதிப் போட்டியில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி அணியும் மட்டுவில் ஸ்கந்தவரோதய ம.வி. அணியும் மோத வுள்ளன.

மூன்றாம் இடத்துக்கான போட்டியில் கச்சாய் அ.த.க. பாடசாலை அணியும் சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி அணியும் மோதவுள்ளன. (ற-9)

## புதுவருடத்தை முன்னிட்டு பாரம்பரிய விளையாட்டுகள்

யாழ்ப்பாணம், ஏப்.10

வடமாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் தமிழ் சிங்களப் புது வருடத்தை முன்னிட்டுப் பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகளை நடந்தவுள்ளது.

இதில் 10 வயதிற்கு உட்பட்ட ஆண், பெண் இருபாலாருக்குமான தேசிக்காய் ஓட்டம், பலூன் உடைத்தல் சாக்கு ஓட்டம் ஆகிய போட்டிகளும், திறந்த வயதுப் பிரிவினருக்கான மரதன் ஓட்டம் (ஆண்கள் 10 கி.மீ, பெண்கள் 5 கீ.மீ.), கீறிஸ் மரம் ஏறுதல் (ஆண்கள்), தலையணைச் சண்டை (ஆண்கள்), [illegible] தேங்காய் சண்டை உடைத்தல் (ஆண்கள்), கிடுகு பின்னுதல் (பெண்கள்), தேங்காய் திருவுதல் (பெண்கள்), வேக நடை (ஆண்கள், பெண்கள்), முட்டி உடைத்தல் (ஆண்கள், பெண்கள்), மெதுவான சைக்கிள் ஓட்டப்போட்டி (ஆண்கள்,பெண்கள்), முட்டை எறிதல் (ஆண்கள் பெண்கள் இணைந்து) ஆகியன நடைபெறவுள்ளன.

இதில் மரதன் ஓட்டப் போட்டியில் பங்குபற்றவுள்ள வீர, வீராங்கனைகள் தங்களுடைய மருத்துவ சான்றிதழைக் கட்டாயமாக சமர்ப்பித்தல் வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, அணிகளுக்கிடையேயான போட்டிகளாக கபடி (காட்சி போட்டி ஆண்கள், பெண்கள்), கயிறு இழுத்தல் (ஆண்கள், பெண்கள் - அணிக்கு 11 பேர்) ஆகியனவும் இடம்பெறவுள்ளன.

மேற்படி போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் போட்டியாளர்கள் எதிர்வரும் 11 ஆம் திகதிக்கு முன்னர் மருதனார் மடத்தில் அமைத்துள்ள வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்திலோ அல்லது நல்லூரில் அமைத்துள்ள யாழ். வலய கல்வி திணைக்கள கலாசாரத் திணைக்களத்திலோ அலுவலக நேரத்தில் தங்களது பெயர் விவரங்களைப் பதிவு செய்ய முடியும் என்று போட்டி ஏற்பட்டாளர்கள் தெரித்துள்ளனர்.

(ற-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோஹ்லி அதிரடி வென்றது சலஞ்சர்ஸ்



ஐ.பி.எல். தொடரின் நேற்றைய முதல் ஆட்டத்தில் பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ் அணி, ஐதராபாத் சன் ரைசர்ஸ் அணியை 7 இலக்குகள் வித்தியாசத்தில் வீழ்த்தியது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற ஹைதராபாத் சன் ரைசர்ஸ் அணி, முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

அதன்படி ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்களாகக் களமிறங்கினர் ரெட்டி மற்றும் பட்டேல்.

இருவரும் ஓட்டங்களைச் சேகரிக்க ஆரம்பித்தனர். எனினும் அவர்களைப் பிரித்தார் சிங். ரெட்டி 11 பந்துகளில் 2 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 12 ஓட்டங்களைப் பெற்று சிங்கின் பந்துவீச்சில் விஹோரியிடம் பிடிகொடுத்தார்.

அடுத்து களமிறங்கிய சங்ககார ஓட்டங்களைச் சேகரிக்கத் தொடங்கினார். அவருக்கு ஒத்துழைப்பு வழங்கினார் பட்டேல். இருவரும் நிதானமாக அணியின் ஓட்ட எண்ணிக்கையை அதிகரித்தனர். 7 ஆவது பந்துப் பரிமாற்றத்தில் இருவரையும் பிரித்தார் முரளிதரன். 19 பந்துகளில் 20 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் முரளியின் சுழலில் வெளியேறினார் பட்டேல். அப்போது அணியின் ஓட்ட எண்ணிக்கை 50ஐ எட்டியிருந்தது.

நிதானமாக ஆடிக் கொண்டிருந்த சங்ககாரவுடன் இணைந்தார் வைற். எனினும் சங்ககாரவின் நிதான ஆட்டம் வெகுநேரம் நீடிக்கவில்லை. 24 பந்துகளில் 23 ஓட்டங்களைப் பெற்றநிலையில் கார்த்திக்கின் பந்துவீச்சில் கோஹ்லியிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார் சங்ககார.

வைற் பெரேரா இணை கைகோர்த்தது. அணியின் ஓட்டவேகம் அதிகரிக்கத் தொடங்கியது. வைற்றும் பெரேராவும் வேகமாக ஓட்டங்களைக் குவித்தனர். 17 ஆவது பந்துப் பரிமாற்றத்தில் பெரேராவின் வேகத்துக்கு முற்றுப்புள்ளி வைத்தார் ஆர்.பி.சிங். 24 பந்துகளில் 40 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் போல்ட் முறையில் ஆட்டமிழந்து வெளியேறினார் பெரேரா. அப்போது அணி 155 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. அடுத்த பந்துப் பரிமாற்றத்திலேயே அரைச்சதம் கடந்து ஆடிக் கொண்டிருந்த வைற்றும் வெளியேறினார். வினய்குமாரின் பந்தில் டீ. வில்லியர்ஸிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். வைற் 3 சிக்ஸர், 3 பவுண்டரிகள் அடங்கலாக 52 ஓட்டங்களை அணிக்காகப் பெற்றிருந்தார்.

அடுத்துக் களமிறங்கிய ரெட்டி ஏமாற்றமளித்தார். 3 ஓட்டங்கள் பெற்ற நிலையில் சிங்கின் பந்தில் போல்டானார். இறுதியில் சன் ரைசர்ஸ் அணி 6 இலக்குகளை இழந்து 161 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. விஹாரி 4 ஓட்டங்களுடனும் சமன்திரேய் 2 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது இருந்தனர். உ திரிகளாக 5 ஓட்டங்கள் பெறப்பட்டன.

ரோயல் சலஞ்சர்ஸ் அணி சார்பில் பந்துவீச்சில் ஆர்.பி.சிங் 3 இலக்குகளையும், வினய்குமார், முரளிதரன், முரளி கார்த்திக் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

162 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கியது ரோயல் சலஞ்சர்ஸ் அணி. அஜித் அகர்வால் மற்றும் கெய்ல் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாகக் களமிறங்கினர். இருவரும் சிறப்பாக ஆடினர். அகர்வால் ஓட்ட எண்ணிக்கையை வேகமாக அதிகரித்தார். 20 பந்துகளில் 29 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் பெரேராவின் பந்தில் சங்காரவிடம் பிடிகொடுத்து வெளியேறினார் அகர்வால். அடுத்துக் களமிறங்கிய கோஹ்லி சன் ரைசர்ஸ் பந்து வீச்சாளர்களை துவம்சம் செய்யத் தொடங்கினார். பந்து எல்லைக்கோட்டை நோக்கி ஓடத் தொடங்கியது. மறுபுறம் ஆடிக் கொண்டிருந்த கெய்ல் 13 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் சர்மாவின் பந்தில் பட்டேலிடம் பிடிகொடுத்து வெளியேற அடுத்துக் களமிறங்கினார் டீ. வில்லியர்ஸ். கோஹ்லி ஒரு புறம் வெளுத்துக் கட்டிக் கொண்டிருந்தார். டீ. வில்லியர்ஸ் 15 ஓட்டங்களைப் பெற்று வைற்றின் பந்தில் ஆட்டமிழந்தார். அப்போது அணியின் ஓட்ட எண்ணிக்கை 96. பந்துப்பரிமாற்றங்கள் 11.6. பின்னர் களமிறங்கிய ஹென்றிகுக்ஸுக்கு அதிக வேலை இருக்கவில்லை. கோஹ்லி வானவேடிக்கை காட்ட 17 ஆவது பந்துப் பரிமாற்றத்தில் வெற்றியின் எல்லையைத் தொட்டது ரோயல் சலஞ்சர்ஸ். கோஹ்லி 47 பந்துகளில் 11 பவுண்டரிகள், 4 சிக்ஸர்கள் அடங்கலாக 93 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழக்காதிருந்தார். உ திரிகளாக 5 ஓட்டங்கள் பெறப்பட்டிருந்தன.

சன் ரைசர்ஸ் அணி சார்பில் பந்துவீச்சில் சர்மா, பெரேரா, வைற் ஆகியோர் தலா ஓர் இலக்கைக் கைப்பற்றினர்.

ஆட்ட நாயகனாக விராட் கோஹ்லி தெரிவு செய்யப்பட்டார். [ற]

# மும்பை அபாரம்

6 ஆவது ஐ.பி.எல். தொடரில் 200 ஓட்டங்களை முதன்முதலாகக் கடந்த அணி என்ற சாதனையோடு அபார வெற்றியீட்டியது மும்பை இந்தியன்ஸ்.

இந்தத் தொடரின் 10 ஆவது போட்டியில் மும்பை இந்தியன்ஸ் அணியும் டில்லி டேர்டெவில்ஸ் அணியும் மோதிக்கொண்டன.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற மும்பை இந்தியன்ஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. ஆயினும் வழக்கம் போலவே பொன்டிங்கையும் [0], சச்சினையும் [1] இழந்து தடுமாறியது. எனினும் அதன் பின் இணைந்த தினேஸ் கார்த்திக்கும், ரோஹித் சர்மாவும் அணியைச் சரிவிலிருந்து மீட்டு அதிரடியாக ஓட்டங்களைக் குவிக்க, மும்பை இந்தியன்ஸ் இந்தத் தொடரில் முதல் முறையாக 200 ஓட்டங்களைக் கடந்த அணி என்ற சாதனையைப் படைத்தது.



20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் அந்த அணி 5 இலக்குகளை இழந்து 209 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. தினேஸ் கார்த்திக் 86 ஓட்டங்களையும், ரோஹித் சர்மா ஆட்டமிழக்காது 74 ஓட்டங்களையும் பெற்றனர்.

210 ஓட்டங்கள் என்ற இமாலய இலக்கை துரத்தத் தொடங்கிய டில்லி அணி முதற்பந்திலேயே உன்முக்த் சந்தை இழந்தது. அதன் பின்னர் டேவிட் வோர்ணரும் [61], யுனேயாவும் [49] போராடியபோதும் ஏனைய வீரர்கள் கைவிட்டதால் அந்த அணியால் தோல்வியைத் தவிர்க்க முடியவில்லை.

இறுதியில் 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் டில்லி அணி 9 இலக்குகளை இழந்து 165 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. இதனால் 44 ஓட்டங்கள் வித்தியாசத்தில் மும்பை அணி வெற்றியீட்டியது.



ஆட்டநாயகனாக மும்பை அணியின் தினேஸ் கார்த்திக் தெரிவானார். [ங]

# தாமதத்துக்கு தண்டம்



கொல்கத்தா அணிக்கெதி ரான ஐ.பி.எல். ஆட்டத்தில் தாம தமாகப் பந்து வீசிய ராஜஸ் தான் ரோயல்ஸ் அணியின் அணித்தலைவர் ராகுல் டிராவிட் டுக்கு அபராதம் விதிக்கப்பட்டது.

ஜெய்ப்பூரில் நடந்த ஐ.பி.எல். ஆட்டத்தில் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி 19 ஓட்டங்கள் வித்தி யாசத்தில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியை வீழ்த்தியது. அந்தப் போட்டியில் ராஜஸ்தான் அணி குறிப்பிட்ட நேரத்துக்குள் பந்துவீச தவறியிருந்தது.

இரண்டு பந்துப் பரிமாற்றங் கள் வரை தாமதமாகப் பந்து வீசிய காரணத்துக்காகவே ராஜஸ்தான் அணியின் அணித் தலைவர் ராகுல் டிராவிட்டுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. இது இந்தத் தொடரில் விதிக்கப் பட்ட முதலாவது அபராதமாகும்.

இது குறித்து ஐ.பி.எல். நிர் வாகி ஒருவர் கருத்துத் தெரி விக்கையில், ''குறிப்பிட்ட நேரத் துக்குள் பந்துவீச தவறுவது ஐ.பி.எல். விதிமுறைப்படி குற்ற மாகும். அதனால் ராஜஸ்தான் அணியின் அணித் தலைவர் என்ற ரீதியில் டிராவிட்டுக்கு அபராதம் விதிக்கப்பட்டது''– என்று கூறினார். [ற]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாற்றுவலுவுடைய இருவருக்கு வீடமைப்பு உதவிக் கொடுப்பனவு

யாழ்ப்பாணம்,ஏப்.10

வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவு ஊடாக மாற்று வலுவுடையோருக்கான வீடமைப்பு உதவித்திட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட இருவருக்கு இரண்டாம் கட்ட கொடுப்பனவு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

பயனாளிகள் எதிர்வரும் 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தமது தேசிய அடையாள அட்டை, குடும்ப அட்டை ஆகியவற்றுடன் பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவுடன் தொடர்புகொள்ளுமாறு பிரதேச செயலர் எஸ்.சிவஸ்ரீ அறிவித்துள்ளார்.

ஈஸ்வரன் சதீஸ்கரன் (சமரபாகு, சங்கத் தோட்டம்), மாணிக்கம் தங்கவேலு (உடுப்பிட்டி) ஆகியோருக்கு இரண்டாம் கட்ட கொடுப்பனவாகத் தலா ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்பட்டுள்ளது.

மாற்று வலுவுடையோருக்கான வீடமைப்பு உதவித்திட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட இருவருக்கும் முதலாம் கட்டக் கொடுப்பனவு தலா ஒரு இலட்சம் ரூபா வீதம் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த-9)


## New Degree College
மானிப்பாய் மகளிர் கல்லூரி முன்பாக

A/L 2015 கலை, வர்த்தகப் பிரிவுகள் ஆரம்பம் 12.04.2013 வெள்ளி 7.30a.m யாழ். நகரின் தலைசிறந்த ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த சேவையில்

A/L 2013, Day Class வினாவிடை வகுப்புகள்

A/L 2014, புதிய பிரிவுகள் சிறப்பாக நடைபெறுகின்றன.

அனுமதிகள் வழங்கப்படுகின்றன. நிர்வாகி.

(35869)(14.9)

## நாளை புதிய சித்திரத்தேர் வெள்ளோட்டம்





ஈழ வள நாட்டின் மகுடம் என விளங்கும் யாழ்ப்பாணத்தில் சப்ததீவு கூட்டங்களில் மண்கும்பான் வெள்ளைப் புற்றடியில் ஓங்கார ரூபமான ஸ்ரீவீரகத்தி விநாயகப் பெருமானுக்கு உரிய முகவுத்தர எண்கோண வடிவத்தேர் வெள்ளோட்டம் மு.ப 10.00 மணிதொடக்கம் நண்பகல் 12.00 மணிவரையுமான அமிர்த சித்தயோகமும் அச்சுவினி நட்சத்திரமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில் வெள்ளோட்ட விழாக் காண வாரீர். தேவ மந்திரங்கள் விண்ணளவும் ஓங்கி ஒலிக்க, பக்தர்கள் பாமாலை பாடிவர, சங்குகள் முழங்க, கடல் அலைகளின் ஓசைகள் பொங்கி வர அருளாட்சி புரியும் ஸ்ரீவீரகத்தி விநாயகரே மண்கும்பான் மக்கள் இடர் தீர்க்க சித்திரத் தேரில் வந்திடுவீர்.

அனுசரணையாளர்: புதிய நதியா நகை மாடம் NEW NATHIYA NAGAI MADHAM

தங்கரின் அழகு நகைகளை அசல் 22 காரட்டில் செய்து பெற்றுக் கொள்ள அழகிற்கு அழகு செய்யும் அழகிய தங்கப்பவுன் நகைகளுக்கு நாடவேண்டிய ஒரே இடம் (சி/8294) (14.9)

இல.73, 103, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P- 0212228397, 021 2223261

## தவற விடாதீர்கள்
### மாபெரும் தளபாட மலிவு விற்பனை.

இல.230, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (இலுப்பையடிச் சந்திக்கும் ஆனைப்பந்திச் சந்திக்கும் இடையில்)
077 3583879, 077 8314201

## பணியாளர்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் சுப்பர் மார்க்கட் ஒன்றுக்கு பின்வரும் ஆளணியினர் வேண்டப்படுகின்றனர்.

1.) Cash Counter Clerk
2.) உதவியாளர்கள் (Track maintanence Staff)

★ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
★மும்மொழி தேர்ச்சி, அனுபவம் என்பனவற்றுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தொடர்பு:- 0773041447

(35833)(8.6.7)

## ALLIANCE FRANÇAISE DE JAFFNA

French மொழி கற்பிப்பதற்கு French Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட வடமாகாணத்திலுள்ள ஒரேயொரு நிறுவனம் Alliance Française de Jaffna மட்டுமே. இது ஓர் அரிய சந்தர்ப்பம்.மேலும் தரமான CERTIFICATEஐ பெறுங்கள். புதிய வகுப்புகள் மிக விரைவில்...T.P.021.222.8093

61, Kachchery-Nallur Road, Jaffna
(நக்கா வீதியும் கச்சேரி-நல்லூர் வீதியும் இணையும் சந்தியில்)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 19-08-1943



மறைவு 12-03-2013

அமரர்
### கந்தையா பொன்னுத்துரை

(முன்னாள் துரைவேக்ஸ் உரிமையாளர், செம்மண் தீவு, முருங்கன்-மன்னார்)

எமது குடும்பத் தலைவரின் பிரிவால் நாம் துயருற்றிருந்தபோது அனைத்து வழிகளிலும் எமக்கு ஆறுதல் வழங்கியோருக்கும் இறுதி நிகழ்வில் கலந்து கொண்டோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை (11.04.2013) வியாழக்கிழமை காலை 6.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

வீரப்பத்திராஜன், கரணவாய் தெற்கு, கரவெட்டி
தொ.பே.இல-0212262146 (35326)(8.6.7) குடும்பத்தினர்.

## பெண் ஊழியர் தேவை

யாழ்.நகரில் அமைந்துள்ள தனியார் கல்வி நிலையத்தில் கடமையாற்ற பெண் ஊழியர் தேவை.

RINI ADD, 4, மணிக்கூட்டு ஒழுங்கை, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு (11.04.2013) நாளை வியாழக்கிழமை 4.30-6.00 நேரில் சமுகம் தரவும்.

தொடர்பு:- 0776669950,0212229483

## இந்திய சாஸ்திரியார் வருகை

யாழ்ப்பாணப் புண்ணிய பூமிக்கு மீண்டும் வருகை தந்துள்ளார்

ஓம் சக்தி அருள் வாக்கு பெற்ற பரம்பரை ஜோதிடர்

### S.N. குமாரசாமி

கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத்தடை, கல்வித்தடையா, குழந்தை பாக்கியம் மற்றும் புதிய தொழில் தொடங்க வேண்டுமா? தொழில் முன்னேற்றம் இல்லையா, குடும்பப் பிரச்சினையா?வெளிநாடு செல்லத் தடையா?, மனஉளைச்சலா ?

எந்தப்பிரச்சினைக்கும் நேரில் சந்திக்கவும்

(காலை 9 மணி முதல் மாலை 5 மணிவரை)

பீப்பிள்ஸ் இன் (PEOPLE INN)

இல.112/1, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். (பிள்ளையார் ஹோட்டல் முன்பாக)

T.P: 072 6816681, 0726816691

"கல்வி உலகின் சிகரம்"
## ஞானோதய அக்கடமி
-சாவகச்சேரி- -கொடிகாமம்-

(இரு இடங்களிலும்)

### A/L 2015

கலை, வர்த்தகப்பிரிவுகள்

ஆரம்பம்-12.04.2013 At 8 a.m (வெள்ளி)

-யாழ்.மாவட்ட முன்னணி ஆசிரியர்களின் வழிகாட்டல்-

"தென்மராட்சி மாணவர்களின் பல்கலைக்கழக கனவை நனவாக்கும் ஒரே நிறுவனம்"

Note-A/L Day Class சிறப்பாக நடைபெறுகிறது.

நிர்வாகம்.

## வேலை வாய்ப்புக்களை அள்ளி வழங்கும் பிரித்தானிய உயர்கல்வித் தகமைகள்

edexcel BTEC

HND
- CIVIL ENGINEERING
- SOFTWARE ENGINEERING
- QUANTITY SURVEYING
- BUSINESS MANAGEMENT
- BUSINESS MARKETING

Leading to BSc.,BE,B.Com from UK,USA,Canada Universities

முந்துங்கள்.... வெல்லுங்கள்....

10.04.2013 ம் திகதி முதல் 20.04.2013 ம் திகதி வரை பதிவினை மேற் கொள்ளும் அனைத்து மாணவர்களும் Toshiba i3 Laptop கணனியுடன் மேலதிக கட்டணச் சலுகைகளையும் பெற்றுக் கொள்ள முடியும்.

மேலதிக விபரங்களுக்கு : 021 4900 900






## IIS CITY CAMPUS

No. 200, Sivan Pannai Road, Jaffna
Tel: 222 8060 Fax: 222 6933
Web: www.iis.edu.lk E-mail :info@iis.edu.lk

## சித்திரைப்புத்தாண்டை முன்னிட்டு மாபெரும் விலைத்தள்ளுபடி

## COMPUTER CORNER

**System 1**
intel Core i3
Mother Board H61M DGS
2 GB DDRIII RAM
500 GB HDD
DVD Writer LITE ON
Casing POWER LOGIC
Monitor HP 19" LED
Key Board
Mouse
UPS Power III
61,200/=

**System 2**
Dual Core 2nd G
Mother Board H61M DGS
2 GB DDRIII RAM
500 GB HDD
DVD Writer LITE ON
Casing POWER LOGIC
Monitor HP 19" LED
Key Board
Mouse
UPS Power III
50,500/=

FREE
Speaker
Card Reader
4 GB Flash
Web Camera
Head Phone

இச்சலுகை 16.04.2013 வரை மட்டும்

TOSHIBA 4 GB - 750/-
SONY 8 GB - 1100/-
KINGSTON 8 GB - 1000/-
Kaspersky 1 User 1550/-
Kaspersky 3 User 3000/-
USB Mouse 310/-
Speaker 450/-
Web camera 750/-
Card Reader Multi 350/-
HP Monitor 19" 12,500/-



**Laptop HP 1000**
2nd G intel Core i3 2348 M
2 GB DDRIII RAM
500 GB HDD
DVD Writer Optical
14.1" LED HD Bright Display
W LAN & BT
67,500/=

**Laptop HP 2000**
2nd G intel Core i3 2328M
2 GB DDRIII RAM
500 GB HDD
DVD Writer Optical
15.6" LED HD Bright Display
W LAN & BT
68,500/=

FREE
Head Phone
Mouse
Laptop Cooler

**Laptop ASUS X55A**
Dual Core 2nd G
2 GB DDRIII RAM
500 GB HDD
DVD Writer Optical
15.6" LED HD Display
W LAN & BT
59,500/=

நம்பகரமான உத்தரவாதத்துடன் வழங்கும் ஒரே ஒரு நிறுவனம்

Computer Corner, K.K. S Road, Mallakam. TP No:- 021 205 9044 / 077 353 7126

## ABI BABY MART in
### பரிசு மழை

1000/= மேல் கொள்வனவு செய்யும் அனைத்து வாடிக்கையாளர்களிற்கும் பரிசுப்பொருள்கள்! உடனேயே தங்கள் வீட்டிற்கு எடுத்துச் செல்லலாம். காத்திருக்காமல் உடனேயே விரையுங்கள்...!

Discount 10% - 20% வரை

★ 3000/= மேல் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களின் பெயர்கள் 13.04.2013 11 மணிக்கு குலுக்கலும் இடம் பெறும்.

#267, Brown Road, Jaffna.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 10.04.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

ஒரு கடிதம்
பாதி
சந்திப்புக்குச்
சமன்
-யாரோ

புதன் பொய்கை A

உதயன் ஏப்ரல் 10 2013 புதன்கிழமை பக்கங்கள்: எட்டு

# விரிவடையும் இடைவெளி




■ ராஜராஜன்

இந்த அரசின் ஆட்சிக் காலத்திலேயே ஏழைகளுக்கும் செல்வந்தர்களுக்கும் இடையிலான இடைவெளி பெரியளவில் அதிகரித்துக் காணப்படுகின்றது.

இதனைத் தெரிவித்திருப்பவர் சாதாரண ஒரு இலங்கைக் குடிமகன் அல்ல.

தற்போதைய அரசில் முக்கிய பொறுப்புக்களை வகிக்கும் அமைச்சர் டியூ.குணசேகரவே இதனைத் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர் என்பதால் அவரது சிந்தனையில் இந்தக் கருத்துக்கள் உதித்திருக்கலாம். ஆனால் இந்த நாட்டின் இன்றைய யதார்த்த நிலை இதுவேதான்.

அபிவிருத்தி என்ற கோஷம் ஒரு புறத்தில் இருந்து எழுகின்ற போதிலும் மறுபுறத்தில் ஏழ்மையின் அடையாளங்கள் பெருகிக் காணப்படுகின்றன.

அரசின் ஆசீர்வாதத்துடன் இயங்கும் பெரிய பெரிய வர்த்தக நிறுவனங்கள் ஆண்டுதோறும் பல பில்லியன் கோடி ரூபா அளவில் இலாபத்தை ஈட்டி வருகின்றன.

ஆனால் இவற்றில் பணியாற்றிவரும் பணியாளர்களின் வாழ்வியல் மிகவும் தாழ்ந்த நிலையிலேயே காணப்படுகின்றது. மிகக் குறைந்த வேதனம் இவர்களுக்கு வழங்கப்படுகின்றமையே இதற்கான முக்கிய காரணமாக உள்ளது. அரசும் இதனைக் கண்டுகொள்வதாகத் தெரியவில்லை.

மேலும், தனியார்துறையைச் சேர்ந்த பணியாளர்களின் குறைந்த பட்ச வேதனம் 9 ஆயிரம் ரூபாவென அறிவித்தல் வருவதுடன் எல்லாமே முடிந்து விடுகின்றன. இது தனியார் துறைகளில் சரிவரக் கடைப்பிடிக்கப்படுகின்றதா? என்பதை எவரும் கவனிப்பதே இல்லை. இதனால் தமது பணியாளர்களுக்குக் குறைந்தளவு வேதனத்தை வழங்கிவிட்டு தனியார் நிறுவனங்கள் கொழுத்த இலாபத்தை ஈட்டி வருகின்றன.

இந்த நிலை நீடிக்குமாயின் செல்வந்தர்களுக்கும் வறிய மக்களுக்கும் இடையிலான இடைவெளி குறைவடைவதற்கான வாய்ப்புகள் ஒருபோதுமே ஏற்படமாட்டாது.

இன்று சாதாரண குடும்பத்தைச் சேர்ந்த ஒருவன் ஒரு சிறிய நேர்க்கடையைக்கூட வெளியில் நின்று வேடிக்கை பார்க்கும் நிலையே

> ஏழ்மை நிலை அதிகரித்துச் செல்வதால் நாட்டிலே குற்றச் செயல்களும் அதிகரித்துக் காணப்படுகின்றன. வசதி குறைந்தவன் செல்வந்தர்களைத் தனது எதிரிகளாகவே நோக்குகின்றான். அவனது அடி மனதிலே விரக்தி, வெறுப்பு, கோபம் என்பன அதிகரித்துக் காணப்படுகின்றன. இதனால் எதனைச் செய்வதற்கும் அவன் தயாராகி விடுகின்றான். இந்த நிலையை மாற்றுவதற்கான செயற்றிட்டம் எவையும் அரசிடம் இருப்பதாகத் தெரியவில்லை. பசியைப் போக்குவதாகக் கூறி ஆட்சிபீடத்தில் அமர்ந்தவர்களின் வரலாறு இந்த நாட்டில் உண்டு.

இந்த நாட்டில் காணப்படுகின்றது. உள்ளே செல்வதற்கு அவனிடத்தில் பணம் இருப்பதில்லை.

இந்த அளவுக்கு உணவுப் பொருள்கள் மற்றும் எரிபொருள்களின் விலைகள் தாறுமாறாக உயர்ந்து காணப்படுகின்றன. இதனால் பல குடும்பங்கள் பசித்த வயிற்றுடன் பொழுதைக் கழிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் எமது முன்னோர்களின் வாக்கு ஒன்று நினைவுக்கு வருகின்றது.

பசி வந்திடப் பத்தும் பறந்து போய்விடுமென அவர்கள் கூறிச் சென்றுள்ளனர்.-மானம், குலம், கல்வி, வன்மை, தனம்தவம், முயற்சி, அறிவுடைமை, தாளாண்மை, காமம் என்பனவே அந்தப் பத்துமாகும்.

இதன் மூலமாக பசியின் வலிமை எமக்குப் புரிகின்றது.- பசி இல்லையே எனப் பணம் படைத்தவர்கள் ஒரு புறத்தில் வாட்ட மறு பசி [illegible] இதைத்தான் விதி என்று கூற வேண்டும்.

பல்வேறு வசதிகளுடன் மாடமாளிகைகளில் வசிப்பவர்கள் வன்னியையும் ஒரு முறை எட்டிப் பார்க்க வேண்டும். அப்போதுதான் இந்த நாட்டின் உண்மை நிலை அவர்களுக்குப் புரியும். போரினால் பாதிக்கப்பட்ட ஏராளமான மக்கள் தற்காலிகக் கொட்டில்களிலேயே தமது வாழ்வைத் தொலைத்து வருகின்றனர். அடிப்படை வசதிகள் எதுவுமின்றி விலங்குகள் போன்றதொரு நிலையில் இவர்கள் காணப்படுகின்றனர். சுட்டெரிக்கும் வெயிலும் சுழன்றடிக்கும் காற்றும் கொட்டித்தீர்க்கும் மழையும் இவர்களின் வாழ்க்கையையே குறிவைக்கின்றன.

ஆனால் அரசு தரப்போ, போரில் பாதிக்கப்பட்ட மக்களைக் மீளக்குடியமர்த்திவிட்டோமென மார்தட்டுகிறது. வெளிநாடுகளில் பிரச்சாரங்களை மேற்கொள்கின்றது.- சில அரசுக்குச் சார்பான நாடுகளும் , தனிப்பட்ட சிலரும் இதனை விதந்துரைப்பதையும் காண முடிகின்றது.

இன்று வங்கிகள் கூட இலாபமீட்டுவதையே குறியாகக் கொண்டு இயங்குவதைக் காணமுடிகின்றது. அறவிடப்படும் வட்டி வீதங்களிலும் வங்கிகளுக்கு வங்கி வேறுபாடு காணப்படுகின்றது. இந்த நிலை மாற்றப்பட வேண்டும். ஏழைகளின் வயிற்றில் அடித்து இலாபமீட்டுவதால் உண்மையான ஆத்ம திருப்தி ஒருபோதுமே ஏற்படமாட்டாது.

மேலும் ஏழ்மை நிலை அதிகரித்துச் செல்வதால் நாட்டிலே குற்றச் செயல்களும் அதிகரித்துச் செல்கின்றன. வசதி குறைந்தவன் செல்வந்தர்களைத் தனது எதிரிகளாகவே நோக்குகின்றான். அவனது அடி மனதிலே விரக்தி, வெறுப்பு, கோபம் என்பன அதிகரித்துக் காணப்படுகின்றன. இதனால் எதனைச் செய்வதற்கும் அவன் தயாராகி விடுகின்றான்.

இந்த நிலையை மாற்றுவதற்கான செயற்றிட்டம் எவையும் அரசிடம் இருப்பதாகத் தெரியவில்லை.

பசியைப் போக்குவதாகக் கூறி ஆட்சிபீடத்தில் அமர்ந்தவர்களின் வரலாறு இந்த நாட்டில் உண்டு.

ஆனால் இனவாதம் என்ற ஒன்று இருக்கும் வரை எம்மை எவரும் எதுவுமே செய்ய முடியாது என்ற மனநிலை இன்றைய ஆட்சியாளர்களிடம் இருக்கும்வரை பசியும் ஏழ்மையும் புறந்தள்ளப்படுமென்பதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது.

ஆகவே அமைச்சர் டியூ குணசேகர குறிப்பிட்ட அந்த இடைவெளி மேன்மேலும் அதிகரித்துச் செல்லும் என்பதில் ஐயமே இல்லை. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடல் எடையை குறைக்கும் கரும்பு



பக்க விளைவுகள் எதையும் ஏற்படுத்தாமல், உடல் எடையைக் குறைக்க கரும்பு பயன்படுகிறது.


இன்றைய உலகில் ஆணும், பெண்ணும் உடல் எடையைக் குறைக்க நடைப் பயிற்சி, உடற்பயிற்சி என்று பல பயிற்சிகளில் ஈடுபடுகின்றனர்.

இன்னொரு பக்கம் ஆறு வாரங்களில் அழகான இடை என்று சொல்லும் விளம்பரங்களை நம்பி மாத்திரை வாங்கிச் சாப்பிட்டு, எப்படியாவது உடல் எடையைக், குறைக்க பணத்தைச் செலவழிப்பதும் உண்டு.

ஆனால், இத்தகைய எந்தவொரு சிரமங்களும் இல்லாமல், உடல் எடையைக் குறைக்க முடியும். ஆஸ்திரேலியா நாட்டில் இருக்கிற மெல்போர்ன் உணவு உயிர் தொழில்நுட்ப வல்லுனர் ஆங்குர் தேசாய் மற்றும் லா ட்ரோப் பல்கலைக்கழக ஆராய்ச்சி மாணவர்கள் சேர்ந்து ஒரு ஆய்வு செய்துள்ளனர்.

அதற்கமைய குண்டான உடலை இளைக்கச் செய்வதில் கரும்பு முக்கிய பங்கு வகிக்கிறது. கரும்புச் சாற்றில் உள்ள இரசாயனங்கள் உடலில் சேர்ந்துள்ள தேவையற்ற கொழுப்பை கரையச் செய்கிறது.


அதன் மூலம் உடல் எடை குறைகிறது. எடை குறைவதால் ஏற்படும் உடல் சோர்வையும் கரும்புச் சாறு தடுக்கிறது. ரத்த அழுத்தத்தையும் இது கட்டுப்படுத்துகிறது. உடலில் சக்தியையும் அதிகரிக்கச் செய்கிறது. பயன்படுத்தத் தொடங்கிய 12 வாரங்களில் இதன் பலன் வெளிப்படையாகத் தெரிய வரும்.



# மேலாடையின்றி தேனீக்களுடன் நடனமாடும் பெண்

அமெரிக்காவைச் சேர்ந்த பெண்ணொருவர் மேலாடையின்றி 12 ஆயிரம் தேனீக்களுடன் கடந்த 10 வருடங்களாக தைரியமாக நடனமாடி வருகிறார். தன்னைத்தானே தேனி ராணி என்று அழைத்துக் கொள்ளும் சாரா என்னும் அமெரிக்க மங்கையே இவ்வாறு தேனீக்களுடன் தைரியமாக நடனமாடுகிறார்.

கடந்த 10 வருடங்களாக இதனை ஒரு தியானமாகச் செய்து வருகிறேன். உடலில் தேனீக்களைத் தவழவிடுவது அளவுக்கதிகமான வலியை ஏற்படுத்தும். ஆனால் என்னைச் சுற்றி தேன்கூடுகள் இருப்பது போல் உணருகிறேன் என்று சாரா தெரிவித்தார்.




# அறிமுகமாகிறது அதிநவீன மினி கமெரா




நிழற்படக் கமெராக்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்களுள் ஒன்றான Minox ஆனது Minox DCC எனும் அதிநவீன மினி கமெரா ஒன்றினை அறிமுகம் செய்துள்ளது.

டிஜிட்டல் தொழில்நுட்பத்தைக் கொண்ட இந்தக் கமெரா 14 மெகாபிக்சல் திறன் வாய்ந்ததாகக் காணப்படுகிறது.

இதன் மூலம் AVI வீடியோ கோப்பு வகையையும், JPEG நிழற்படக் கோப்பு வகையையும் பதிவு செய்ய முடியும்.

113.5 கிராம் எடையுள்ள இந்தக் கமெராவின் விலை 240 அமெரிக்க டொலர்களாகும்.

# நோயின் பாதிப்பைக் குறைக்க சருமத்தைக் கவனியுங்கள்





நோயின் பாதிப்பைக் குறைக்க சருமத்தைக் கவனிக்க வேண்டும். சருமம் வெளிப்படுத்தும் சில அறிகுறிகளை வைத்து உடலில் என்ன பாதிப்பு ஏற்படக்கூடும் என்பதையும் தெரிந்து கொள்ளலாம்.

**தோலில் தடிப்புகள் ஏற்படுதல்...**

இதய நோயாக இருக்கலாம். குறிப்பாக, காதுகளுக்குப் பக்கத்தில் உள்ள தோலில் தடிப்பு ஏற்பட்டால் நீங்கள் உடனே ஓர் இதய மருத்துவ நிபுணரை நாடிப் பரிசோதித்துக் கொள்வது நல்லது.

ஆனால் காதருகே ஏன் தடிப்பு ஏற்படுகிறது என்று மருத்துவத்துறையினருக்கே சரியாகப் புரியவில்லை என்று கூறப்படுகிறது.

**முகம் வீக்கமாக இருப்பது...**

உடலில் தண்ணீர் இழப்பு அதிகமாக இருப்பது. இப்படி ஏற்படும் போது உடலுக்குத் தண்ணீர் அதிகம் தேவைப்படுகிறது. உடலுக்குப் போதுமான தண்ணீர் கிடைக்காமல் போனால், இரத்த செல்கள் விரிவடைந்து முகம் வீக்கமாகத் தெரியும்.

அதனைத் தவிர்க்க ஒரு நாளைக்கு எட்டுக்குவளை குடிதண்ணீராவது அருந்துவது அவசியம். எப்போதும் குடிதண்ணீர்ப் போத்தலை உடன் வைத்துக்கொண்டால் தண்ணீர் அருந்த வேண்டும் என்ற உணர்வு ஏற்பட்டு அதிக குடிதண்ணீரை அருந்துவீர்கள்.

**தோல் இளமஞ்சளாக மாறுவது...**

கல்லீரல் பாதிப்படையும்போது உடலில் இருக்கும் பித்தநீர் போன்ற மஞ்சள் நிறத் திரவங்களை வெளியேற்ற முடிவதில்லை. இதனால் தோல் மஞ்சள் நிறத்துக்கு மாறுகிறது. இதனை ஓரளவுக்குக் குறைக்க மதுப்பழக்கம் இருப்பவர்கள் உடனடியாக நிறுத்திவிடுவது நல்லது.

**சிவந்த உள்ளங்கை...**

இதுவும் கல்லீரல் பிரச்சினையின் அறிகுறியாக இருக்கலாம். நோய்வாய்ப்பட்ட கல்லீரலால் நம் இரத்தத்தில் உள்ள ஹார்மோன்களைக் கட்டுப்படுத்த முடியாமல் போகும்.

அந்தநிலையில் இரத்தத்தின் நிறம் அதிக சிவப்பாகிவிடும். கல்லீரல் சரியாக வேலை செய்யவில்லை என்பதை அதிக சிவப்பான உள்ளங்கை சட்டென காட்டிக் கொடுக்கும். காரணம் உடலின் மற்றபாகங்களை விட உள்ளங்கை தோல் மிகவும் மிருதுவாக இருப்பதுதான். இதனைத் தவிர்க்க கீழாநெல்லியை வாரத்தில் ஒருமுறை சாப்பிடுவது கல்லீரலைச் சரிப்படுத்தும். உடம்பின் விஷத் தன்மையைப் போக்க, மாதம் ஒருமுறையாவது பழங்களையே உணவாக உட்கொள்ளுங்கள். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்கள் வெளிப்பட்டும் திரைமறைவில் பிரச்சினை

கொளுத்தும் வெயிலால் தலை வெடிக்கும் போல் இருக்கிறது. வீட்டுக்குள் இருந்தாலும்வெக்கையில்அவிந்து, வெளிவரும் வேர்வை உடலை குளிப்பாட்டிக் கொண்டிருக்கிறது. இந்த வெயிலுக்காலை மோட்டார் சைக்கிளில் யாழ். நகருக்கு எப்படிப் போவேன். கொழும்பில் இருந்து வரும் எனது நண்பனை எப்படி ஏற்றிவரப் போகிறேன் என்று எனக்குள்ளே நினைத்துக் கொண்டு கடந்த 3 ஆம் திகதி நண்பனை ஏற்றி வர யாழ். பஸ் தரிப்பிடத்துக்குச் செல்கிறேன்.

அவனை ஏற்றிக் கொண்டு திரும்பும் போது வாசகங்கள் அடங்கிய பதாகைகளை தாங்கியபடி பெண்களின் ஊர்வலம் ஒன்று யாழ். பஸ் தரிப்பிடத்தில் இருந்து நகரத் தொடங்கியது. ஊர்வலத்தை பார்ப்பதற்காக ஒரு கடையின் அருகில் மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டு நானும் அவனும் இறங்கி நிற்கிறோம். "பெண்களின் உரிமைகளை மதிப்போம்" என்று எழுதிய தொப்பிகளை ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்கள் தலையில் போட்டிருந்தனர்.

பதாகைகளில் என்ன வாசகம் எழுதியிருக்கிறது என்று பார்த்தேன் "இம்சைகள் அற்ற சுதந்திரமான போக்குவரத்தை பெண்களுக்கு ஏற்படுத்துவோம்", "சீதனம் என்னும் கொள்ளியை வைத்து எரிக்காதே", "பால் நிலைப்படுத்தப்பட்ட பெண் அடக்குமுறையை அடக்கு", "கல்வியைச் சுமக்க வேண்டிய சிறுமியரை ஏன் கரு சுமக்க வைக்கிறீர்கள்" என்று பதாகைகளில் எழுதப்பட்டிருந்தன.

போர் முடிவடைந்து மூன்றாண்டுகள் கடந்த நிலையில், யாழ்ப்பாணத்தில் பெண்களுக்கு பிரச்சினைகள் அதிகரித்துக் காணப்படுகின்றன. பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கும் பெண்களுக்கு முழுமையான பாதுகாப்பை வழங்கவும், மீண்டும் அத்தகைய பிரச்சினைகள் இடம்பெறாமல் தடுக்கவும் ஒருவரும் இல்லாத காரணத்தால் பெண்களது பிரச்சினைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. எனவே இன்றைய காலகட்டத்தில் இத்தகைய போராட்டங்கள் அவசியமானவை. இப்படிப்பட்ட போராட்டங்களை தொடர்ந்து நடத்த வேண்டும். இந்தப் போராட்டங்களில் பெண்கள் முழுமையாகப் பங்குபற்ற வேண்டும். இதன் மூலம் பெண்கள் தமது பாதுகாப்பைப் பலப்படுத்திக் கொள்ள முடியும்.

ஊர்வலத்தைப் பார்த்துக் கொண்டிருந்த பெண்களிடம் எனது நண்பன் சொன்னான் "நீங்களும் இந்த ஊர்வலத்தில் கலந்துகொள்ள வேண்டியது தானே" என்று. அந்த இடத்தில் நின்ற ஒரு யுவதி "வேறு வேலை இல்லையா" என்று சொன்னாள். காதைப்பொத்தி அடித்தது போல் இருந்தது அவளது பேச்சு, அந்தக் கூட்டத்தில் நின்ற எல்லோரும் ஒரு கணம் அந்த யுவதியைப் பார்த்தார்கள். சனம் தன்னைப் பார்க்குதே என்ற கூச்சசுபாவம் இல்லாமல் நின்றாள்.

உடனே எனது நண்பன் அந்த யுவதியிடம் "ஏன் பிள்ளை இப்படிச் சொல்கிறாய்" என்று கேட்க, அந்த யுவதியோ பெண்கள் வெளி உலகத்துக்கு வந்துவிட்டார்கள். வட மாகாணத்தில் பல பதவிகளில் ஆண்களை விட பெண்கள் தான் கூடுதலாக இருக்கிறார்கள். இலங்கையில் எப்பாகத்துக்கும் பெண்கள் தனியாகச் சென்று வருகிறார்கள். தமது வாழ்வைத் தாமே தீர்மானிக்கின்ற சக்தி உடையவர்களாக இருக்கின்றார்கள். இப்படி இருக்கும் போது பெண்களுக்குப் பல பிரச்சினைகள் என்று ஊர்வலம் நடத்துகிறார்களே?" என்றாள். அவனோ "பதவிகளில் பெண்கள் இருந்தால் பெண்களுக்கு பிரச்சினைகள் வராதா?" என்று கேட்டான்.

அவளோ "வட மாகாணத்தில் எல்லாத் துறைகளிலும் பொறுப்பாக பெண்கள் இருக்கும் போது அவர்களுக்கு ஒரு சக்தி இருக்கிறது. பெண்களின் பிரச்சினைகளை இலகுவில் தீர்த்துக்கொள்ள முடியும். சகல மேல்மட்ட தொடர்புகளும் பெண்களிடம் இருக்கும் போது எப்படி இன்றைய காலத்தில் பெண்கள் பிரச்சினைக்கு முகம் கொடுக்க முடியும்? தலைமைப் பொறுப்பை பெண்கள் வகிக்காத முன்னைய காலங்களில் பெண்களுக்கு கூடுதலான பாதுகாப்பு இருந்தது.

பெண்களின் வீரத்தைப்பற்றி தமிழ்நாட்டு கவிஞர் அறிவுமதி இப்படி சொல்லி பெண்களை பெருமைப்படுத்தி இருக்கிறார். அதாவது 'பெண்கள் அன்று புலியை சுளகால் அடித்து விரட்டினார்கள். இன்று புலியாக வெடித்து வீரத்தை வெளிப்படுத்தினார்கள். இனிவரும் காலம் பெண்கள் புதுமை படைப்பார்கள் என்ற நம்பிக்கை உண்டு' என்பது அவரது கருத்து.

இப்பொழுது விபச்சார விடுதிகள் யாழ்ப்பாணத்தில் முளைத்துள்ளன. காணாமல் போய்விட்டதாகச் சொல்லப்படும் யுவதி ஒரு பெடியனுடன் ஓடிவிட்டாள் என்று சொல்லப்படுகிறது. படிக்கிற வயதில் கருக்கலைப்பு நடக்கிறது. இருபாலாரும் குற்றவாளியாக நிற்கிறார்கள். பெண்களுக்கு வீட்டில் கட்டுப்பாடு இருந்த காலப் பகுதியில் அவர்களுக்குப் பாதுகாப்பு இருந்தது. இன்று பெண்களைக் கட்டுப்படுத்தினால் பெண் அடக்குமுறை என்று சொல்லுகிறார்கள். அதனால் பெண்களுக்கு ஆண்களைப் போல சுதந்திரத்தை வழங்கினார்கள். இதனால் இன்று பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கிறார்கள்.

அந்த யுவதியும் எனது நண்பனும் ஆளாளுக்கு ஏட்டிக்கு போட்டியாகக் கதைத்துக் கொண்டிருந்ததைப் பார்த்தால் வாய்ச்சண்டை கைச் சண்டையாகவும் மாறி விடும் என்று நினைத்து மோட்டார் சைக்கிளை அந்த இடத்தில் இருந்து எடுத்து அவர்களின் உரையாடலைத் துண்டித்தேன். அவனோ " என்னடா நல்லாய்ப் போய்க் கொண்டிருந்த உரையாடலை குழப்பி விட்டாயே" என்றான். நானோ "உனக்கு கதைக்க ஆள் இல்லை என்று ஜீன்சும், ரீ சேர்ட்டும் அணிந்திருந்த அந்த யுவதியிடம் கதையை

## கோப்பாய் சண்முகம்

### கதையோடு செய்தி

கொடுத்திருக்கிறாய்" என்றேன். அவனோ "பெண்களின் பிரச்சினைகள் சம்பந்தமாக பெண்களிடம் இருந்து தானே கருத்தைப் பெற முடியும்" என்றான். நானோ "அதுக்கு அநாகரிக உடையுடன் நிற்கும் இந்த யுவதியுடனா கதைக்கிறது" என்றேன். அவனோ "அவள் அநாகரிக உடையுடன் நின்றாலும் சிந்திக்க கூடியதாக சில கருத்துக்களை சொன்னாள் பார்த்தியோ" என்றான். "அப்படி என்னத்தை சொல்லிப் போட்டாள்" என்றேன். அவனோ "பெண்கள் எல்லாத்திலையும் முன்னுக்கு நிற்கிறார்கள் என்று சொன்னாளே, பிறகு எப்படி பெண்களுக்கு சமூகத்தில் பிரச்சினை வருகுது என்று பார்க்க வேண்டும்" என்றான். நானோ "அது சரி தான்" என்று சொல்ல அவனது வீடும் வந்தது.

அவனை இறக்கி விட்டு மோட்டார் சைக்கிளை திருப்பினேன். வீட்டுக்குள் போனவன் திரும்பி ஓடி வந்து எனது மோட்டார் சைக்கிள் கான்டிலைப் பிடித்து நிற்பாட்டினான். "என்னடா" என்று அவனை கேட்டேன். அவனோ "அதோ பார் தெரியுது வீடு, சோடிச்சிருக்குது. அந்த வீட்டில் தான் அண்மையில் பூப்பு நீராட்டு விழா ஒன்று நடைபெற்றது" என்றவன் அந்த வீட்டைப் பார்த்தபடியே நின்றான். "அதுக்கு என்ன" என்று அவனை கேட்டேன். அவனோ "அந்த விழாவைப் பெரிதாக நடத்துவதற்கு அந்தப் பிள்ளையின் காதலனும் வந்திருந்தானாம்" என்றான்.

நானோ "என்னடா இது, எப்ப காதலிச்சவை" என்று கேட்டேன். அவனோ "யாருக்கு தெரியும் பால் குடி வயதிலதான் " என்று சொன்னவன் " இப்பத்தான் யாழ். நகரில் ஓர் ஊர்வலத்தை பார்த்துவிட்டு வந்தோம். எமது வீட்டுக்கு பக்கத்திலேயே பிரச்சினை இப்படி இருக்கிறது. இதற்கு யார் பொறுப்பு? இந்தப் பிள்ளையின் பெற்றோர்கள் பிள்ளை வயசுக்கு வந்த நிகழ்வினை நடத்த காதலனை விட்டிருக்கினம் என்றால் பாரேன்?" என்றான்.

நாடு போற போக்கைப் பார்த்தால் எமது சமூகம் கலாசாரத்தில் பின் தங்கிய நிலைக்குச் செல்வதைக் கண்முன் பார்க்கிறோம். பொறுப்பு வாய்ந்த பதவிகளில் இருக்கும் பெண்கள் தமது வேலை உண்டு, தாம் உண்டு என்று இராமல் தமது சமூகத்தையும் பார்க்க வேண்டும். பதவிகளில் இருக்கும்போது இலகுவாக எதனையும் தட்டிக்கேட்க முடியும். இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தாது நழுவ விடப்படும் போது பெண்கள் தலைமைப் பொறுப்புகளில் இருந்தும் சமூகத்தில் பின் தங்கிய நிலைக்கே செல்லக் கூடிய அபாயகரமான நிலை எற்படும்.

வசதி வாய்ப்புகளுக்காக எமது தமிழ்க் கலாசார பண்பாட்டை மறக்கக் கூடாது. பெரியவர்களைப் பார்த்துத்தான் சிறியவர்கள் வளருவார்கள். அந்த விதத்தில் பெரியவர்கள் பொறுப்பு வாய்ந்தவர்களாக இருந்து எமது சமூகத்தில் கலாசார பண்பாட்டுடன் கூடிய பெண்கள் வாழ்வை கட்டியெழுப்ப வேண்டும். இல்லாதுபோயின் விடிவு வேண்டி ஊர்வலத்தை பெண்களில் ஒரு சாரார் நடத்துவர். அந்த ஊர்வலத்தை கிண்டல் செய்வார்கள் பெண்களில் ஒரு சாரார். இந்த நிலைமையே தொடரும். ★

# தியேட்டர் காரரும் புத்திஜீவிகளும்

எங்கையும் நல்லது செய்வதற்கு இந்தக் கலியுகத்தில் காலமில்லை. காட்டிக் கொடுப்புக்களும், நரிப் புத்திகளும் கொண்டவர்களாலேயே இன்று எல்லா இடங்களிலும் செழிப்பாக வாழ முடிகிறது. இதனால்தான் யாழ்ப்பாணத்தின் முன்னேற்றம் தள்ளிப் போகின்றது.

இன்றைய சூழலில் யாழ்ப்பாணத்தில் நாலுபேர் ஒன்றாகச் சேர்வது என்றாலே பலரது கண்களுக்குள் குத்தும். அந்தப் பிரச்சினைகளை தாண்டி நாலு பேர் ஒன்று சேர்ந்து தமிழ் மக்களுக்கான, எதிர்காலத்துக்கான சிறப்பான அடித்தளம் அமைக்கின்ற வேலை என்று எதையும் செய்வது கடினமானதே.

அண்மையில் யாழ்ப்பாணத்தின் உயர்ந்த கல்விக் கூடத்தில் ஒரு ஆரம்ப வைபவம். புவியோடு சம்பந்தப்பட்ட பட்டதாரிகளின் ஒன்று கூடல். அவர்கள் தூர இலக்குடன் சில முன்மொழிவுகளை வைத்து ஆரம்பித்திருந்தனர்.

இதனை தனி மனித முயற்சியிலிருந்து ஆரம்பித்திருந்தாலும், இதனால் கிடைக்கும் பயன் ஒட்டு மொத்த சமூகத்துக்கும் உரியது.




எந்தவொரு ஆரம்ப நிகழ்விலும் உரையாற்றுபவர்கள், அந்த அமையம் எதிர்காலத்தில் சிறப்பாக எப்படி இயங்க வேண்டும் என்பதற்கு வழிதான் சொல்லுவார்கள். ஆனால் இந்த நிகழ்வில் பங்குபற்றிய - தியேட்டர்காரருடன் அரசியல் நடத்தும் - வாழ்நாள் பெரிய ஆசிரியர், அந்த அமைப்பு உருவாக்கப்படக் கூடாது என்பதிலேயே குறியாக இருந்தாராம்.

சமூகத்துக்கு முன்னோடியாக இருக்க வேண்டிய இத்தகையோர் தரம் தாழ்ந்து கதைப்பது அழகல்ல என்று நிகழ்வு ஏற்பாட்டாளர்கள் நொந்து நூலாகி பின் நூடில்ஸாகிப் போனார்கள். என்ன செய்வது? பன்றியோடு சேர்ந்த பசுவும் ஏதோ தின்னும் என்பது போல், சேர்க்கை சரியில்லாத புத்திஜீவிகளும் அப்படியே ஆகின்றனர்.

- நக்கல் நரசிம்மன் -

# பெயரை இழந்தேன்

நான் வேலை செய்கின்ற அலுவலகத்தில் இருந்து ஒவ்வொரு நாளும் வேலை முடிந்து மாலை 5 மணிக்கு சைக்கிளில் வீட்டுக்குச் செல்வேன். வேலை முடிந்து நான் வீட்டுக்குப் போகும்போது, ஒவ்வொரு நாளும் எனக்கு முன்னே ஒருத்தி சைக்கிளில் சென்று கொண்டிருப்பாள். அவள் எங்கிருந்து வருகிறாள் எங்கே போகிறாள் என்று எனக்குத் தெரியாது. ஆனால் எனக்கு முன்னே சென்று கொண்டிருப்பாள்.

ஒரு நாள் வேலை முடிந்து போகும்போது என்னைப் பார்த்ததும் அவள் " நீ ஏன்? எனக்குப் பின்னால் ஒவ்வொரு நாளும் வருகிறாய்" என்று கேட்டாள். நான் உடனே " நீ ஏன் எனக்கு முன்னே போகின்றாய்?" என்றதும் எந்த விதமான பதிலும் சொல்லாமல் என்னை ஒரு பார்வை பார்த்து விட்டு சைக்கிளை வேகமாக செலுத்திச் சென்றாள்.

அடுத்த நாள் வேலை முடிந்து போகும் போது எனக்குப் பின்னே வந்து கொண்டிருந்தாள். இந்தச் சந்தர்ப்பத்தில் தான் உண்மையை உணர்ந்திருப்பாள் போலும். அதற்கு அடுத்த நாள் என்னோடு தானே வந்து கதைத்தாள் "எங்கே இருக்கிறியள் உங்களின் பெயர் என்ன? என்று கேட்க நான் ஒன்றும் விடாமல் சொல்லி விட்டேன். அதிலிருந்து என்னோடு நட்பாகினாள். ஒவ்வொரு நாளும் வீதியில் சந்திக்கும் போது கதைத்துக் கொண்டு போவோம்.

அவளுக்குத் தெரிந்தவர்கள் யாரும் வந்தால் கதைக்காமல் மௌனமாகப் போவாள். இப்படியாக பல நாள்கள் வீதி நட்பு தொடர்ந்தது. ஒரு நாள் அவளிடம் " உங்களின் பெயர் என்ன? எங்கே இருக்கிறியள்" என்று கேட்டேன். அதற்கு அவளோ ஒன்றுமே சொல்லாமல் மௌனமாகச் சென்று கொண்டிருந்தாள். " பெயரைச் சொன்னால் குறைஞ்சா போயிடுவியள் " என்று நான் அவளிடம் கேட்க, அவளோ " நீ ஆண் நான் பெண் " எப்படிச் சொல்ல,என்று கவிதையைப் போல பதில் சொன்னாள்.

"நட்புக்கெல்லாம் முகவரி எதற்கு" என்று அவளிடம் சொல்லி விட்டு வீட்டுக்குச் சென்றேன்.

ஒரு நாள் பக்கத்து ஊரில் ஒருவரைச் சந்திப்பதற்காகச் சென்று கொண்டிருந்தேன். அந்த ஊரில் உள்ள ஒரு மதகில் இருந்து கதைத்துக் கொண்டிருந்த பெடியளில் ஒருவன் என்னைக் காட்டி மற்றவர்களுக்குச் சொன்னான். " டேய் இவன் தாண்டா சாலினியின் காதலன்" அவன் அப்படிச் சொன்னதும் எல்லோரும் என்னைப் பார்த்தார்கள். தலையைக் குனிந்து அந்தப் பெடியளைக் கடந்து செல்கிறேன். அவளின் பெயரை அறியக் கூடியதாகவும் இருந்தது. அத்தோடு எனது பெயரை இழக்கவேண்டியும் நேர்ந்தது.

பிறைவாணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# குழந்தைகளை பாதுகாப்போம்

(கடந்தவாரத் தொடர்ச்சி)

தீ தொடர்பான ஆபத்துகள் குழந்தைகளுக்கு ஏற்படுவதைப் பத்திரிகைகள் அவ்வப்போது துயரத்துடன் பதிவு செய்கின்றன. குழந்தைகளுக்கு நெருப்பு குறித்த ஆபத்துகளும், எச்சரிக்கை உணர்வுகளும் தெரிந்திருக்க வேண்டியது முக்கியமானது.

தீப்பெட்டி, லைட்டர் போன்ற பொருள்களை குழந்தைகளுக்கு எட்டாத உயரத்தில் வைத்திருக்க வேண்டியது அவசியம். ஒரு வேளை வீட்டில் தீப்பிடித்தால் வீட்டை விட்டு வெளியே வரவேண்டும் எனச் சொல்லிக் கொடுங்கள். குழந்தைகள் பெரும்பாலும் வீட்டினுள் ஒளிந்து கொள்ளவே முயல்வர் என்பது உளவியல் பாடம்.

உடையில் தீப்பிடித்தால் ஓடக்கூடாது. தண்ணீர் ஊற்றவேண்டும், இல்லையேல் தரையில் புரளவேண்டும். எரிந்து கொண்டிருக்கும் வீட்டுக்குள் எக்காரணம் கொண்டும் நுழையக் கூடாது, அப்போது மின் உபகரணங்கள் எதையும் தொடக்கூடாது. இப்படிப்பட்ட அடிப்படை விஷயங்களைக் குழந்தைகளுக்குக் கற்றுக் கொடுங்கள்.

சிரமம் பார்க்காமல் வேலைகளை நீங்களே செய்யுங்கள். சமையலறைப் பக்கத்தில் குழந்தைகளை அனுமதிக்காமல் இருப்பது சாலச் சிறந்தது!

**பூச்சி மருந்துகள்**

வீட்டில் பூச்சி, கரப்பான் போன்றவையெல்லாம் வராமல் இருப்பதற்காக நீங்கள் பயன்படுத்தும் பொருள்கள் குழந்தைகளுக்குப் பாதிப்பை ஏற்படுத்தக் கூடியவை என்பது உங்களுக்குத் தெரியுமா ? பலருக்கும் தெரியாத விஷயங்களில் இதுவும் ஒன்று.

இத்தகைய 'ஸ்ப்ரே'யை குழந்தைகள் தெரியாமல் முகத்தில் அடித்து உள்ளிழுத்தால் அவர்களுடைய மூளை நேரடியாகவே பாதிக்கப்படும். சுய நினைவு இல்லாமல் விழுந்து விடுவார்கள். எவ்வளவு சுவாசிக்கிறார்கள் என்பதற்கு ஏற்ப இந்தப் பாதிப்பு அதிகமாகும்.

எனவே பாதிப்பை ஏற்படுத்தும் பொருள்களை குழந்தைகளின் கண்களுக்கு எட்டாத இடத்தில் வைத்து விடுங்கள். அதேபோல மலசலகூடத்தைக் கழுவும் பொருள்கள், பாத்திரம் கழுவும் பொருள்கள் போன்றவற்றையும் தூரமாகவே வையுங்கள்.

கொதிக்கல் பொருள்கள், நச்சுப் பொருள்களை குழந்தைகளால் எடுக்க முடியாத இடத்தில் வைக்கவும்.

**விளையாட்டுப் பொருள்களில் கவனம்**

குழந்தைகளுக்கு வாங்கிக் கொடுக்கும் விளையாட்டுப் பொருள்களிலும் கவனம் தேவை. குழந்தைகளுக்கு சின்னச் சின்ன பாகங்கள் உடைய விளையாட்டுப் பொருட்கள் வாங்கிக் கொடுக்கக் கூடாது. குழந்தைகள் அவற்றை வாயில் போட்டு ஆபத்தை விலைக்கு வாங்கி விடலாம். அந்தந்த வயதினருக்கு ஏற்ற விளையாட்டுப் பொருள்களையே வாங்குங்கள்.

அதே போல தரம் குறைந்த விஷத் தன்மையுடைய பெயிண்டிங், மாலை போன்றவற்றை குழந்தைகளுக்கு வாங்கிக் கொடுக்காதீர்கள். அது அவர்களுக்கு ஒவ்வாமை போன்ற நோய்களைத் தந்து விடும்.

விளையாட்டுப் பொருள்கள் உடைந்து சுக்கு நூறான பின்னும் அவற்றை வீட்டிலேயே வைத்திருக்கும் தவறைச் செய்யாதீர்கள். உடைந்த பொம்மைகளையும், விளையாட்டுப் பொருள்களையும் தூர வீசிவிடுங்கள்.

குழந்தைகள் விளையாடும் இடத்தில்கூட அவர்களுக்குக் காயம் தரக்கூடிய கூர்மையான பொருள்கள் இருந்தால் அவற்றை அகற்றிவிடுங்கள். குழந்தைகளுக்கு, அருகில் இருக்கும் பொருள்கள் மீதான கவனத்தை விட, விளையாட்டே பிரதானமாய்த் தெரியும். எனவே அவை ஆபத்தை விளைவிக்கும்.

**மின் உபகரணங்களில் கவனம்**

குழந்தைகள் மின் உபகரணங்களைப் பயன்படுத்தும் போது அதிக கவனம் தேவை. என்னென்ன செய்யலாம்? என்னென்ன செய்யக் கூடாது ? என்பதைத் தெளிவாகச் சொல்லிக்கொடுங்கள்.

அடிக்கடி அவற்றைக் குழந்தைகளுக்கு நினைவூட்டிக் கொண்டே இருங்கள். குறிப்பாக 'பிளக் பொயின்ட்' போன்றவற்றுக்கு ஒரு 'கவர்' வாங்கிப் பூட்டுங்கள். வோஷிங் மெஷின், மைக்ரோவேவ் அவன், பிரிட்ஜ் போன்றவற்றையெல்லாம் குழந்தைகள் கையாள விடாதீர்கள். மின் பொருள்களில் எப்போதுமே ஆபத்து ஒளிந்திருக்கும். எனவே ஆபத்தற்ற மின் உபகரணங்களைத் தவிர வேறு எதையும் குழந்தைகள் தொட அனுமதிக்காதீர்கள்.

மின்சாரத்தில் இருக்கின்ற ஆபத்துகளைக் குழந்தைகளுக்கு சின்ன வயதிலேயே சொல்லி விளங்க வைக்கலாம். 'லைட்'டும், 'சுவிட்'சும் விளையாட்டுப் பொருள்களல்ல என்பது அவர்களுக்கு மழலை வயதிலேயே தெரிய வேண்டியது அவசியம்.

**வீட்டுப் பொருள்களில் கவனம்**


எமது வீடு குழந்தைக்குப் பாதுகாப்பாய் இருக்கிறதா என்பதைப் கவனிக்க வேண்டியது எமது கடமை. குறிப்பாக மாடிப்படிகள், மொட்டை மாடி போன்ற இடங்கள் குழந்தைகளுக்குப் பாதுகாப்பாய் இருக்கிறதா என்பதைக் கவனிக்க வேண்டும்.

பாதுகாப்பு இல்லை எனத் தோன்றினால் கிரில், கதவு, வலை என தேவையானவற்றைப் பயன்படுத்திப் பாதுகாப்பைப் பலப்படுத்திக் கொள்ள வேண்டும்.

'ஷேவிங் செட்' போன்றவற்றை பத்திரமாய் வைத்திருப்பது, 'அயர்ன் பொக்ஸ்' போன்றவற்றை பாதுகாப்பாய் வைப்பது, குப்பைகளை உடனுக்குடன் கூட்டிச் சுத்தம் செய்வது என வீட்டுப் பொருள்களில் கவனம் செலுத்த வேண்டும்.

கத்தி, பிளேடு, அரிவாள் போன்றவற்றைக் கண்ணுக்கெட்டாத தூரத்தில் பாதுகாப்பான இடத்தில் வையுங்கள். தவறி விழாத இடத்தில், குழந்தையால் எடுக்க முடியாத இடத்தில் அவற்றை வையுங்கள். மருந்துப் பொருள்கள் அலுமாரியில் பூட்டப்பட்டே இருக்கட்டும்.





> தீப்பெட்டி, லைட்டர் போன்ற பொருள்களை குழந்தைகளுக்கு எட்டாத உயரத்தில் வைத்திருக்க வேண்டியது அவசியம். ஒரு வேளை வீட்டில் தீ பிடித்தால் வீட்டை விட்டு வெளியே வரவேண்டும் என சொல்லிக் கொடுங்கள். குழந்தைகள்பெரும் பாலும் வீட்டில் எங்கேயாவது ஒளிந்து கொள்ளவே முயல்வர் என்பது உளவியல் பாடம் !

சின்னச்சின்ன இத்தகைய விஷயங்களில் பெரிய பெரிய ஆபத்துகள் ஒளிந்திருக்கின்றன.

**மருந்துகளில் கவனம்**

குழந்தைகளுக்கு மருந்து கொடுக்கும் விஷயத்தில் பலரும் டாக்டர்களாகி விடுவார்கள். அப்படி ஆகாமல் இருப்பது குழந்தைக்கும், எமக்கும் நல்லது. சரியான நேரத்தில் டாக்டரிடம் போக வேண்டியதும், அவருடைய அறிவுரைப்படி நடக்க வேண்டியதும் அவசியம்.

(வளரும்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



# கலைகள்

வியப்பூட்டும், மகிழ்வூட்டும் ஆச்சரியப்பட வைக்கும், சிந்திக்க வைக்கும் மதிநுட்ப ஆற்றல்கள் கலைகள் எனப்படும். மேலும் கலைகளில் முக்கியமானது படைப்புக் கலையாகும். தவிர கலைகளை ஐந்து வகைகளாகப் பிரிக்கலாம்.

1. இலங்கையின் (இறைவன்) படைப்பு ஆற்றல்
2. அஃறிணை உயிரினங்களின் படைப்பு ஆற்றல்கள்
3. பாரம்பரியக் கலைகள் (அறுபத்துநான்கு)
4. நவீன கலைகள் (விஞ்ஞான தொழில்நுட்பம்)
5. ஏனையவை

கலைகள் என்பது ஆழ்மனப் பதிவின் இயல்பூக்கம் பெரும்பாலும் கலைகள் பயிற்சிகளாலேயே கைவரப் பெறுகிறது. இயற்கையாகவும் வருகிறது. உதாரணமாக ஒருவர் தனது தேவைகளுக்கு வலது கரத்தையே முக்கியமாகப் பயன்படுத்துகிறார். ஆனால் பரதநாட்டியம் ஆடும்போது இரண்டு கைகளையும் இரண்டு கால்களையும் சமகாலத்தில் பயன்படுத்த வேண்டும். தவிர முகபாவங்களில் அசைவுகளைச் செய்ய வேண்டும். இசைகளைச் சரியாக இனங்கண்டு செயற்பட வேண்டும். குருவின் வழிகாட்டல்களுக்குச் செவி சாய்க்க வேண்டும். சபையோர் குறிப்பறிய வேண்டும்.

இது ஆரம்பத்தில் கஷ்டமாக இருக்கும். வலது காலை எடுக்கும்போது இடதுகால் செயற்படக் கஷ்டப்படும். மேலும் கால்களில் அசைவுகளைச் செய்யும்போது கைகள் செயற்படக் கஷ்டமாக இருக்கும். ஆனால் பயிற்சிகளின் பின் மூளை இயல்பூக்கமடைந்து அறிவின் கட்டளைகளுக்குக் காத்திராது செயற்படத் தொடங்கும். இவ்வாறு ஒவ்வொரு கட்டமாக முன்னேறி நாட்டியக் கலை கைவரப் பெறும். தவிர மனதில் சங்கடங்கள், கஷ்டங்கள், யோசனைகள் இருக்கின்ற காலத்தில் கூட குழம்பாது மூளை இவைகளை தனது இயல்பான இயக்கமாக்கிச் செயற்படும். இவ்வாறே நீச்சல் கலை, வாகனமோட்டும் கலை என்பனவும் அடங்கும்.

- இராம ஜெயபாலன்

எனவே கல்வியென்பது வேறு; கலைகள் என்பது வேறு. உதாரணமாக எவ்வாறு நீச்சல் அடிப்பது என்ற புத்தகத்தை வாங்கிப் படித்து விட்டு நடுக்கடலில் இறங்க முடியாது.

எவ்வாறாயினும் கல்வியின் தோற்றம் கலைகளை ஆவனப்படுத்தும் நோக்கங்களுக்காகவே உருவானது. எனவே கலை சம்பந்தமானவை கலைக்கல்வி எனவும் அழைக்கப்படுகிறது. தவிர கல்வி கூட கற்றல் மற்றும் கற்பித்தலில் திறனாற்றல்களைச் செய்தால் அதாவது தண்ணிபட்ட பாடாக இருந்தால் கலையொன்றும் அழைக்கலாம்.

**இயற்கையின் (இறைவன்) படைப்புக்கலை**

வானில்தெரியும்முகில்கூட்டம்நகரும்போது பல்வேறு விதம் விதமான உருவங்கள் தோன்றி மறைகின்றது. இவைகள் எதிர்பாராத செயல். இதற்கு பின்புலம் இல்லை. தவிர ஒரே தன்மையுடைய பொருள் மூலத் தன்மையில் மாற்றடையாது வடிவத்தில் மட்டும் மாறுதல்களை அடைகிறது. இதனால் மீளுருவாக்கம் சாத்தியமாகிறது. ஆனால் இயற்கை படைப்புக்கள் அனைத்தையுமே பரிணாமத்தினூடாகவே செய்திருக்கிறது. மேலும் ஒரு பொருள் இன்னொன்றாகி பின் அதிலிருந்து வெவ்வேறு தன்மையுடைய மூலப் பொருள்களாக மாறி புதுப்புது பொருள்களையும் வடிவங்களையும் கொண்ட இயற்கையும் உயிரினங்களும் உருவாகியிருக்கின்றன. அதாவது அணுவிலிருந்து அனைத்துச் சடப்பொருள்களும் கலத்திலிருந்து அனைத்து உயிரினமும் தோன்றிப் பரிணாமமடைந்திருக்கின்றன. மேலும் இவற்றின் உருவங்களிலும் வடிவங்களிலும் மட்டுமே மாற்றங்கள் ஏற்படாது.

(வளரும்)





> கலைகள் என்பது ஆழ்மனப் பதிவின் இயல்பூக்கம், பெரும்பாலும் கலைகள் பயிற்சிகளாலேயே கைவரப் பெறுகின்றன. இயற்கையாகவும் வருகிறது. உதாரணமாக ஒருவர் தனது தேவைகளுக்கு வலது கரத்தையே முக்கியமாகப் பயன்படுத்துகிறார். ஆனால் பரதநாட்டியம் ஆடும்போது இரண்டு கைகளையும் இரண்டு கால்களையும் சமகாலத்தில் பயன்படுத்த வேண்டும். தவிர முகபாவங்களில் அசைவுகளைச் செய்ய வேண்டும்.

# 1400 வருட அதிசயமாகத் திகழும் சூரிய ஒளிக் கடிகாரம்

காலம் எதற்காகவும், யாருக்காகவும் நிற்பதில்லை. ஆனால், காலத்தால் அழியாத படைப்புகள்... பன்னெடுங்காலத்திற்கும் பெருமையை பறைசாற்றி வருகின்றன. அந்த வகையில் கும்பகோணம் அருகே உள்ள கோயில் ஒன்றில், சூரிய ஒளியால் இயங்கும் கடிகாரம் இன்றளவும் பார்ப்பவர்களுக்கு ஆச்சரியமான விடயமாக இருந்து வருகிறது. கும்பகோணம் அருகே உள்ள திருவிசநல்லூரில் சோழர் காலத்தில் கட்டப்பட்ட சிவயோகிநாதர் சிவன்கோவிலின் சுற்றுச்சுவரில் இந்த சூரிய ஒளி கடிகாரம் அமைக்கப்பட்டிருக்கிறது. 1400 ஆண்டுகால பழமையான கோயிலில் உள்ள இந்தக் கடிகாரத்தின் மையப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ள ஆணி, சூரிய ஒளியில் பட்டு நிழலாக விழுகிறது.

இந்த நிழல் விழும் பகுதிகள் காலை சூரியன் உதிக்கும் 6 மணி தொடக்கம் மாலை சூரியன் மறையும் 6 மணி வரை ஒவ்வொரு மணிநேரத்தையும் துல்லியமாகக் காட்டுகிறது. ஆகம விதிப்படி ஒவ்வொரு கோயிலிலும் 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை திருப்பணிகள் நடைபெற்று குடமுழுக்கும் நடைபெற வேண்டும். ஆனால் 62 ஆண்டுகளாக இந்த கோயிலில் திருப்பணிகளும் நடக்காமல், குடமுழுக்கும் நடைபெறாமல் இருக்கிறது. இதனால் பாழடைந்த நிலையில் உள்ள கோயிலைப் பாதுகாக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கிறார்கள் இந்தப் பகுதி மக்கள்.





(கடந்தவாரத் தொடர்ச்சி...)

# நம்பரை அடிச்சா உடன் வந்திடும்...

தொல்புரம் சி. கதிர்காமநாதன்

" அப்பா மாமா தனிய இருக்கிறியள். பிள்ளையளும் பக்கத்தில இல்லை (எந்தப் பிள்ளையள் தான் இப்ப பெற்றோருக்கு பக்கத்தில உள்ளனர், காவலுக்கு இருப்பது தானே. மாமிக்கு உதவி, ஒத்தாசை சமையலெண்டு.... பிரச்சனைதானே.. "பிள்ளையள் கேள்விப்பட்ட உடனே வர வெளிக்கிட்டவை நாங்கள் தான் மறிச்சுப் போட்டம்" அதில் எவ்வளவு பெருமிதம், மகிழ்ச்சி அடங்கியிருந்தது.

'எங்களுக்குப் பிரச்சனையில்லை... உங்க .. பாரும் பெரீய்ய ரீவி வாங்கி போட்டு இருக்கிறம்.. பொழுது போயிடும். எங்கட கையில ஆட்டோக்காரரின்ரை போன் நம்பர் இருக்கு. நம்பரை "அடிச்சுவிட்டால்" ஆட்டோ வாசலுக்கு வந்திடும். உங்க ஆஸ்பத்திரிக்குப் போறது, கிளினிக் போய்வாறது, மருந்தெடுக்க பாமசிக்கு போறது பாங்குக்கு போறது கடையில சாப்பாட்டு எடுக்கிறது, ரண்டுபேரும் அலையத் தேவையில்லை. ஆட்டோக்காரரே என்னைக் கூட்டிக் கொண்டு போய் எல்லா வேலையையும் முடிச்சுக் கொண்டு வந்திடுவர். அன்டைக்கி இரவிட்ட ஒன்டுவிட்ட மச்சாள் " போறினால வந்தவ". ஆட்டோ கூப்பிட்டு விட்டம்... பிரச்சனை முடிஞ்சுது.

இப்போதுதான் எனக்கு ஒரு விசயம் தெளிவாகத் தெரிந்தது. இப்போது தமிழ் மக்களின் வாழ்க்கையில் ஆட்டோ என்பது பின்னிப் பிணைந்த ஒன்றாக ஆகிவிட்டது. நாய், ஆடு, கோழி வீட்டில் வைத்திருக்காவிட்டாலும் ஆட்டோ வைத்திருப்பது முக்கியமானதாக இருக்கின்றது. வீட்டில் உள்ளவருக்கு குடும்ப மருத்துவர் இருப்பதுபோல், ஒவ்வொரு வீட்டுக்கும் ஆட்டோ என்பது நிரந்தரமான ஒன்றாகி விட்டது. வீட்டில் உள்ளவர்களை இயலாத நேரங்களில் கூட்டிச் சென்று வெளியில் காரியம் பார்ப்பதற்கு ஆட்டோவும் அதனை செலுத்தும் சாரதியும் வேண்டப்பட்டு விட்டார்கள். இவர்கள் இப்போது கடவுளுக்கு சமமாக மதிக்கப்படுகின்றார்கள்.

வைத்திய சாலையில் நோயாளரைக் கொண்டு வந்து பதிவேட்டில் நீங்கள் இவருக்கு என்ன உறவு முறை என்று கேட்டால்.... நான் ஆட்டோ வைத்திருக்கிறன், சொந்தமில்லை, உதவி செய்யிறனான். உறவு என்பது வெறுமனே தொப்புள் கொடி உறவுடன் மாத்திரம் தங்கிவிடுவதில்லை... தொப்புள்கொடி உறவுகள் விமானம் ஏறி ஊர்வருவதற்குள் நோயாளி தாக்குப் பிடிப்பாரா? உதவி செய்பவர்கள் ஆட்டோ ஓட்டுனர் ஒரு புறம் இருக்க, ஆரம்பத்தில் திருமணம் முடிந்து தம்பதிகளாக பேருந்தில் பயணம் செய்தவர்கள் பின் பிள்ளைகள் பிறந்து மோட்டர் சைக்கிளில் நெருக்கியடித்த படி விழுந்தடித்து ஓடியவர்கள் இப்போது என் கண்களுக்கு முன்னால் ஆட்டோவில் பயணம் செய்கின்றார்கள்.

" நாங்கள் நிரந்தரமாய் ஆட்டோக்காரரை வைச்சிருக்கிறம். அவர் சில வேளை "சாவரிக்கு" போனாலும் வேற ஆட்டோவை பிடிச்சு அனுப்பிவிடுவர். காசுப் பிரச்சினையில்லை. எங்கட நாட்டில் ஒரு வேலையும் உடன் செய்யேலாது ஆட்டோவில் போனா பல வேலையையும் பார்த்துக் கொண்டு வந்திடலாம்.

தமிழ் மக்கள் இப்போது ஒரு பழக்கத்தை வடிவமைத்து விட்டார்கள். நன்றாக உற்றுப் பார்த்தால் ஒரு விசயம் தெரிகின்றது. கடைசியாக வாழும் காலத்தில் எமக்கு ஏற்படும் நோயைத் தீர்க்க பிரபல்யமான, நிரந்தரமான ஒரு டாக்டர், பொருளாதார ரீதியான தேவைகளை போக்க வங்கியில் ஒரு தொகை பணம், நோய் வரும்போது அலைந்து திரியாமல் மருந்து எடுக்க " ஒரு நிரந்தரமான பார்மசி இவை யெல்லாவற்றையும் தடையில்லாமல், சுணங்காமல், அலையாமல் செய்ய நிரந்தரமான ஆட்டோ, வேறு என்ன? எங்களுடைய பிரச்சனைகள் தான் " நிரந்தரமான தீர்வு கிட்டாமல் சென்று கொண்டு இருக்கிறது? இதற்கு " சரியான ஓட்டுனர் எமக்குக் கிடைப்பாரா?

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விரலிசைக்கு வரமளித்த மிருதங்க அரங்கேற்றம்

■ கே.எஸ்.சிவஞானராஜா
கொக்குவில்.

கிராமங்களிலும் அரங்கேற்றம் வெற்றிபெறும் என்பதனை நிரூபித்தவர். தி.அரன்றாஜ். மருத நிலம் சூழ்ந்த இப்பதியில் மனோரம்மியமான கலைகள் தானாய் விளைகின்றதென்பதை அனுபவ ரீதியாகக் காணலாம். இந்தப் பின்னணியில் கலாவித்தகர் சிங்கராஜா செந்தூரனின் மாணவனாகிய அரன்ராஜின் மிருதங்க அரங்கேற்றம், அண்மையில் அளவெட்டி அழகொல்லை விநாயகர் ஆலய அரங்கில் கன கச்சிதமாக அரங்கேறியது.

நீண்ட கால இடைவெளிக்குப் பின்னர் ரசிகர்கள் நிறைந்த இந்த அரங்கேற்றம் அளவையம்பதியில் நடைபெற்றிருப்பது அளவெட்டிக்கு மகிமை சேர்த்ததெனலாம்.

கணீரென ஒலித்த தம்புராவின் சுருதி சங்கமிக்க, இசைமாமணி தவநாதன் றொபேட்டின் நேர்த்தியான குரலில் மோகன ராக வர்ணம், திரிகாலம், லயப் பிரவாகமாகத் தவழ்ந்தபோது, சபையினது கர கோஷம் அரங்கினை மனோலயம் ஆக்கிற்றெனலாம்.

மனோதர்மக் கலைஞன் வயாவிளான் தவமைந்தன் றொபேட் அரங்கேற்றக் கலைஞர்களுக்கு ஒரு வாலாயமான வரப்பிரசாதமான கலைஞன் என்பதை அரன்றாஜின் மிருதங்க அரங்கேற்றம் ஒவ்வொரு உருப்படிகளிலும் உறுதிசெய்து பாடியமையை அளவெட்டி அங்கீகரித்ததெனலாம்.

நன்கு ஒத்திகை பார்க்கப்பட்ட அரன்றாஜின் விரல்கள், உருப்படிகளுக்கேற்ப நன்கு அனுசரித்து, ஒதுக்க சதுக்கமாக, லாவண்யமாக, வல்லின, மெல்லினமாக, தகுந்த தீர்மானங்களுடன் காலப்பிரமாணம், கணக்கு வழக்குத் தவறாமல் மிருதங்கத்தை வாசித்துப் பேசவைத்தமை, மாதா, பிதா, குருவுக்கு வாய்த்த பெரும் பேறாகும்.

ஹம்நாத உருப்படி, எம்.எம். தண்டபாணி தேசிகரை ஒரு கணம் வணங்கச் செய்து, பார்வதி நாயகனை, சண்முகப்பிரியா உருப்படியால் அபிஷேகம் செய்தாற்போல், லய வாத்தியங்கள் யாவும் ஒன்று சேர்ந்து, அலங்கரித்ததெனலாம்.சபாஷ் என்று சொல்ல வைத்த உருட்டல், புரட்டல், குறைப்பு, மோறா அபாரம். அற்புதம். கடம், கஞ்சிரா முகர்சிங் கலைஞர்கள் மிகவும் அநாயாசமாக அரங்கு சோடை போகாத வண்ணம் கச்சிதமாக அனுசரித்து வாசித்தார்கள். சபையை இடையிடை ஊக்குவித்த திறமையை கடவிற்பன்னர் நா.மாதவன் தனதாக்கிக் கொண்டார். கடத்துக்கு வைக்கப்பட்ட ஒலிவாங்கியை விட கஞ்சிராவுக்கு அமைக்கப்பட்ட ஒலிவாங்கிக்கு ஒரு 'பலே' போடலாம்.

ஒரு காலத்தில் இசையுலகை வழிநடத்தி, வழி காட்டிய மிருதங்க வித்துவான் அம்பலவாணாரின் மகனே வயலின் வித்துவான் ஜெயராமன் என்றால் தந்தையாரது பக்குவம், ஞானம் என்பன தொலைந்து விடவில்லை என்பதுவே அரன்ராஜிக்கு வரப்பிரசாதமாக அமைந்ததெனலாம். அட்டகாசமில்லாத, அமைதியான, ஆரோக்கியமான வாசிப்பு. ஆம், அரங்குக்குரிய தர்மம் அணிசெய் கலைஞர்களால் போற்றப்பட்டதெனலாம்.

முக்கியமானதொரு கட்டத்தை இராகம், தாளம், பல்லவி தனதாக்கியது. ஆபேரி இராகம் சபையின் தாகத்தைத் தணித்ததெனலாம். கண்ட திருபுடை தாளம், சொல்லவா வேண்டும். குருவுக்கு குருவாயமைந்த கலாபூஷணம் க.ப.சின்னராசாவின் சாஹித்தியம்: பூர்வாங்கம், உத்தராங்கம், அறுதி, சொற்கட்டு, மிருதங்க வார்ப்பில் பாடகருக்கும், சபைக்கும் சங்கீத சுகானுபவத்தைக் கொடுத்ததெனலாம்.

யாவரும் பேரானந்தத்தை அனுபவித்த திருப்தியோடு மாதா, பிதா குருவை வாழ்த்தி தமது நேரத்தைச் சமாதானம் செய்து, அளவையம்பதிக்கு வரமாகிப் பெருமைகொண்டனர்.

ஒலியமைப்பும், ஒளிப்பதிவும், சபையினரின் கவனிப்பும் எந்தவொரு கட்டத்திலும் தோற்றுப்போகவில்லை- அற்புதமான அரங்கேற்றம் என்று மதிப்பீட்டுரையில் சங்கீத உதவிக் கல்விப் பணிப்பாளர் சிவசிவா குறிப்பிட்டார். அடுத்த அரங்கேற்றம் அளவெட்டியில் எப்போது? என்ற வினாவைத் [illegible]தோடு அரங்[illegible] டது. ★

# தமிழ்ப் பணி தொடரட்டும்

நயினையம்பதி பரமலிங்கம் - சுந்தசாமி கனகசபாபதி, ''வித்து வாட்டி'' கவிஞர் நயினை ஸ்ரீமதி சுந்தரம்பிள்ளை கோகிலாம்பாள் தம்பதியரின் மூத்த புதல்வனாக வாகீச கலாநிதி முனைவர் கனகசபாபதி நாகேஸ்வரன், 1952 ஆம் ஆண்டில் நயினாதீவில் பிறந்தார்.

தனது ஆரம்பக் கல்வியை நயினாதீவு மகா வித்தியாலயத்தில் மேற்கொண்ட இவர், அங்கு கல்வி கற்ற காலங்களில் தமிழ், சைவம் இரண்டிலும் அதிக பற்றுள்ளவராகவும், பேச்சு வன்மை கொண்டவராகவும் விளங்கினார். பின்னர் நாவலப்பிட்டி கதிரேசன் கல்லூரியில் இணுவிலைச் சேர்ந்தவரும், சைவ சமய சீலருமான அதிபர் சபா ஆனந்தர் அவர்களிடம் கல்வி கற்றார். தொடர்ந்து யாழ்ப்பாணம் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் 1964 ஆம் ஆண்டு மாணவராகச் சேர்ந்து கல்வியைத் தொடர்ந்தார். அங்கு தொடர்ந்து கல்வி கற்று 1974 ஆம் ஆண்டு க.பொ.த (உயர்தரம்) பரீட்சையில் சித்தியடைந்தார். சிறப்பாகச் சித்திபெய்திய காரணத்தால் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பைப் பெறும் வாய்ப்பையும் பெற்றார்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறைத் தலைவராக இருந்த பேராசிரியர் கலாநிதி கைலாசபதியின் வழி நடத்துதலிலும், மேற்பார்வையிலும் தமிழ் இலக்கியத் துறையில் கலைமாணி ( B.A.) சிறப்புப் பட்டத்தையும், பேராசிரியர் கலாநிதி ஆ.வேலுப்பிள்ளையின் மேற்பார்வையின் கீழ் முதுகலைமாணிப் பட்டத்தையும் 1979, 1988 ஆம் ஆண்டுகளில் முறையே பெற்றுக் கொண்டார்.

இவர் யாழ். பல்கலையில் மாணவராக, விரிவுரையாளராக கடமையாற்றிய காலங்களில் இவரை இந்தியா, மலேசியா ஆகிய நாடுகளில் உள்ள சைவ நிறுவனங்கள் நடத்திய மாநாடுகளில் கலந்து கொள்ளுமாறு அழைத்து உரையாற்றும் வாய்ப்பையும் வழங்கியிருந்தனர். தற்போது இவர் சப்ரகமுவ பல்கலைக்கழக மொழித் துறையின் முதுநிலை விரிவுரையாளராகப் பணியாற்றி வருகின்றார்.

தமிழ்மொழி இலக்கியம் இலக்கணம், வரலாறு, பண்பாடு, கலைகள், சமயம் போன்ற துறைகளிலும் பத்திரிகைகள், வானொலி, தொலைக்காட்சி போன்ற ஊடகத்துறைகளிலும் பல்வேறுபட்ட ஆய்வுக் கட்டுரைகளையும் எழுதியுள்ளார்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச்சேவையில் பகுதி நேர அறிவிப்பாளராகவும், நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளராகவும், நேர்முக வர்ணனையாளராகவும் பணியாற்றியுள்ளார். பணியாற்றியும் வருகின்றார்.

கடந்த 6 ஆம் திகதி சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் வாகீச கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரனுக்கு மணிவிழா சிறப்பாக நடைபெற்றது. அவர் தொடர்ந்தும் சிறப்புற கல்விப் பணியாற்ற வேண்டுமெனவும் சைவ சமய உயர்ச்சிக்குத் தொண்டாற்ற வேண்டுமெனவும், நயினை நாகபூஷணி அம்பாளைப் பிரார்த்தித்து நல்லாசிகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நயினை நா.க. குமாரசூரியர்.

# பத்திரிகைத்துறையில் தடம்பதித்தவர் சபாரத்தினம்

சசிபாரதி சபாரத்தினம் காலமானார் என்ற செய்தி 50 களில் இருந்து முப்பது வருடகாலத்துக்குட்பட்ட அல்லது இன்னும் சிறிது காலத்துக்கு மேற்பட்ட காலப் பகுதியில் தமிழ் ஊடகத்துறையில் தொடர்பு கொண்டிருந்தவர்களுக்கு நிச்சயமாகக் கவலை தந்திருக்கும்.

தீவுப்பகுதியைப் பிறப்பிடமாகக் கொண்ட சபாரத்தினம் தனது தமையனாரின் ஆலோசனைக்கு அமைவாக கல்வியைத் தொடராமல் பத்திரிகைத் துறையில் ஈடுபட்டவர். இளம் வயதிலேயே திருமணம் முடித்துக்கொண்டு வாழ்க்கையை ஆரம்பித்தவர். நான் வீரகேசரி பத்திரிகையில் சேர்ந்த காலத்தில் அவர் ஏற்கனவே அங்கு ஒப்புநோக்காளராகப் பணிபுரிந்து கொண்டிருந்தார்.

எழுத்தாளர் அமரர் தாழையடி சபாரத்தினத்தின் நெருங்கிய நண்பர். அவர் குடும்பத்துடன் கொழும்புக்கு வந்தபோது ஆரம்பத்தில் தாம் இருந்த குடியிருப்பின் ஒரு பகுதியையே அவருக்குக் கொடுத்து உதவியிருந்தார்.

1958 இனக்கலவரத்தின்போது பெரிதும் பாதிக்கப்பட்ட பத்திரிகையாளர்களில்

## நீத்தார் நயப்புரை

அவரும் ஒருவர். முகத்துவாரப் பகுதியில் என்று நினைக்கிறேன், வேலை முடிந்து செல்கையில் கடுமையாகக் காடையர்களால் தாக்கப்பட்டு உடல்ரீதியில் பெரிதும் பாதிக்கப்பட்டு யாழ்ப்பாணம் திரும்பி நன்றாக குணம் அடைந்த பின்னரே வேலைக்குத் திரும்பியிருந்தார்.

ஒப்பு நோக்குவதிலும், சரி ஆக்கங்களைத் திருத்துவதிலும் சரி மிகச் சிறப்பாகச் செயற்படுவார். எவர் எழுதியதாய் இருந்தாலும் திருத்தவேண்டும் என்று கண்டால் கைவைக்காமல் விடமாட்டார். 1960 களில் யாழ்ப்பாணத்தில் ஈழநாடு பத்திரிகை தினசரியாக மாற்றம் செய்யப்பட்ட போது, கே.பி. ஹரன் அவர்கள் நிர்வாக ஆசிரியராக நியமிக்கப்பட்டு முன்னெடுக்கப்பட்ட போது, வீரகேசரியிலிருந்து வந்து இணைந்து கொண்டவர்களில் அவரும் ஒருவர். எஸ்.எம்.கோபாலரத்தினம், டி.எம்.முருகையாவுடன் நானும் வந்து சேர்ந்தேன்.



ஈழநாட்டில் ஒப்புநோக்கும் பகுதியைப் பொறுப்புடன் கவனித்துக்கொண்ட சபாரத்தினம், பின்னர் ஈழநாடு வாரமலரின் ஆசிரியராக நியமனம் பெற்றார். அந்தக் காலத்தில் ஈழத்து எழுத்தாளர்கள் பலரோடும் நெருங்கிய ஈடுபாடு கொண்டிருந்தது மட்டுமல்லாமல், இளம் எழுத்தாளர்கள் பலரை ஊக்குவிக்கவும் செய்தார். யாழ்.இலக்கியவட்டத்தில் நெருங்கிய தொடர்புகொண்டிருந்தவரான சபாரத்தினம் பலபுதிய எழுத்தாளர்களுக்கும், களம் அமைத்துக்கொடுத்தார். யாழ். இலக்கிய வட்ட எழுத்தாளர்களான இரசிகமணி கனசெந்திநாதன், செங்கை ஆழியான், செம்பியன் செல்வன், இ.நாகராஜன் மற்றும் சண்முகநாதன் முதலியவர்களுடன் நெருக்கமான தொடர்பு கொண்டு அவர்களின் ஆக்கங்கள் ஈழநாடு வாரமலரில் இடம் பெறவும் உதவினார். இலக்கிய வட்டத்தில் என்னைப்போன்ற இலக்கிய ஆர்வலர்களான பத்திரிகையாளர்களும் உறுப்பினர்களாக இணைவதற்கு உதவி புரிந்தார். பிற்காலத்தில் அவர் எழுதிய குட்டிக் கதைகள் பலவற்றையும் இணைத்து ஒரு தொகுதியாக வெளியிட்டார். எஸ்.திருச்செல்வம் ஆசிரியராக இருந்த முரசொலி பத்திரிகையிலும் சிறிது காலம் பணிபுரிந்த சபாரத்தினம் நாட்டில் தோன்றியிருந்த பிரச்சினைகளின் காரணமாக இந்தியா சென்று குடும்பத்துடன் தமிழ்நாட்டில் வாழ்ந்து வந்தார்.

எஸ்.பெருமாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்யகசிபுவின் தெய்வ நிந்தனை

இரண்யகசிபு என்ற பெயர் கொண்ட ஒருவன் அசுரர் குலத்தில் தோன்றினான். அவன் தனது குலகுருவான சுக்கிராச்சாரியாரை அணுகி, "ஆசிரியரே...! யாரை வணங்கித் தவம் செய்தால் யாரும் அடைய முடியாத மிகச் சிறந்த வரத்தைப் பெற முடியும்" என்று கேட்டான்.

அதற்கு சுக்கிராச்சாரியார், "இரண்யகசிபுவே....! சிவபெருமானைத் தவிர வேறு எவராலும் அத்தகைய வரத்தை அளிக்க முடியாது" என்றார்.

இதைக் கேட்ட இரண்யகசிபு சிவபெருமானை நோக்கி நெடுங்காலம் தவமிருந்தான். அவன் தவத்துக்கு மகிழ்ந்து காட்சி கொடுத்த சிவபெருமான், "உனக்கு என்ன வரம் வேண்டும்?" என்று கேட்டார்.

இரண்யகசிபு, "அண்ணலே...! பிருதுவி முதலிய ஐம்பூதங்கள், ஆயுதக் கருவிகள், வானவர், மனிதர்கள், பறவை, விலங்கு முதலிய பிராணிகள் இவை ஒன்றாலும் எனக்கு மரணம் ஏற்படக் கூடாது" என்று கேட்டான்.

"அவ்வாறே ஆகட்டும்" என்று அருளிச் சிவபெருமான் மறைந்தார்.

இந்த வரம் காரணமாக ஆணவம் கொண்ட இரண்யகசிபு மூவுலகையும் வென்று தன் ஆட்சிக்கு உட்படுத்தினான். தேவ பரம்பரையினர், சித்தமாதர், இயக்கப் பெண்கள் முதலானோரைத் தனக்கு விசிறி வீசும் பணிக்கு அமர்த்தினான். இந்திரன் முதலான தேவர்களைத் தினமும் தன்னை வணங்கித் தன் கட்டளைகளை நிறைவேற்றும்படி கூறினான்.

பிரம்மன் தன்னைக் கண்டாலே நடுங்கும்படி செய்தான். கருடர், காந்தருவர், சித்தர், வித்தியாதரர் முதலியோர் கலக்கம் கொள்ளும்படி கொடுமைகள் புரிந்தான். தவத்தின் காரணமாகப் பெற்ற வரத்தை இப்படியெல்லாம் அந்த அசுரன் பயன்படுத்தினான். இந்தக் காரியங்கள் அவ்வளவாக அவனுக்கு ஆபத்துக்களை ஏற்படுத்தவில்லை. இவையெல்லாவற்றையும் மீறிய ஒரு துர்க்குணம் அவனிடம் குடிகொண்டது.

தெய்வத்தின் பெயரை எவரும் உச்சரிக்கக் கூடாது. தன் பெயரான 'இரண்யாய நமவையே' உச்சரிக்க வேண்டும் என்று கட்டளையிட்டான். அவனுடைய கொடுமைக்குப் பயந்து எல்லோரும் 'இரண்யாய நம...' என்றே சொல்லி வந்தார்கள். இந்தத் தெய்வ நிந்தனைதான் அவனது விதியை எழுதத் தொடங்கியது.

இரண்யகசிபுவின் மனைவி கர்ப்பமுற்றாள். அந்தச் சமயம் நாரத மகரிஷி அரண்மனைக்கு வந்தார். ஸ்ரீநாராயணனின் மகிமைகளை அவர் அப்போது இரண்கசிபுவுக்குக் கூறினார். கர்ப்பத்திலிருந்த குழந்தை, நாரதர் கூறிய நாராயணன் கதைகளைக் கிரகித்துக் கொண்டது. இந்த விஷயமெல்லாம் இரண்யகசிபுவுக்குத் தெரியாது.

அனைவரையும் 'இரண்யாய நம....' என்று சொல்ல வைத்தவன் வீட்டுக்குள்ளேயே நாராயண பக்தன் உருவானான். ஒரு நல்ல நாளில் இரண்யகசிபுவின் மனைவி ஒரு ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தாள். பிரகலாதன் என்ற பெயரை அந்தப் பிள்ளைக்குச் சூட்டினார்கள். படிக்கும் பருவம் வந்ததும் ஆசிரியரிடம் அனுப்பி வைத்தார்கள். அந்த ஆசிரியர் முதல் பாடமாக 'இரண்யாய நம...' என்று சொல்லும்படி சொன்னார்.

ஆனால், பிரகலாதன் அதைச் சொல்ல மறுத்து, "ஓம் நாமோ நாராயணாய நமஹ" என்று சொன்னான். ஆசிரியர் திடுக்கிட்டு மீண்டும் 'இரண்யாய நம...' என்று சொல்லும்படி சொன்னார். ஆனால் பிரகலாதன் அவ்வாறு சொல்லாமல் நாராயணன் நாமத்தையே திரும்பத் திரும்பச் சொன்னான்.

இந்த விஷயத்தை ஆசிரியர் இரண்யகசிபுவிடம் தெரிவித்தார். கோபம் கொண்ட இரண்யகசிபு தன் பெயரைச் சொல்லும்படி மகனிடம் சொல்லிப் பார்த்தான். ஆனால் பிரகலாதன் நாராயணன் நாமத்தைத் தவிர வேறு பெயரை உச்சரிக்க மறுத்தான். கோபம் அதிகம் கொண்ட இரண்ய கசிபு மகன் என்றும் பாராமல் அவனைக் கொல்ல உத்தரவு பிறப்பித்தான். ஆனால் நாராயணனின் திருவருளால் அவன் உயிருக்கு ஆபத்து எதுவும் ஏற்படவில்லை.

கடைசியாக தன் மனைவியிடம் சென்ற இரண்யகசிபு, "பகைவனுடைய பெயரை உச்சரிக்கும் பிள்ளை எமக்குத் தேவையில்லை. உணவில் விஷம் கலந்து அவனைக் கொன்று விடு" என்று கூறினான்.

அதைக்கேட்டு அவள் திகைத்தாள். 'பிள்ளையைக் காப்பாற்றுவதா...? கணவன் கட்டளையை நிறைவேற்றுவதா?' என்று அவள் கலங்கினாள். அவள் பிரகலாதனைப் பார்த்து, "மகனே...! தந்தை சொல்வது போல் நீ கேள்" என்றாள்.

"அம்மா..! தந்தை நல்ல கருத்துக்களைக் கூறினால் நான் நிச்சயமாகக் கேட்டிருப்பேன். ஆண்டவனின் நாமத்தைக் கூறக்கூடாது என்று சொல்வது தெய்வ நிந்தனை அல்லவா...? அதை எப்படி நான் செய்ய முடியும்...? நீ வருந்த வேண்டாம். என்னைக் கொல்வதற்கு தந்தை செய்த எல்லா முயற்சிகளும் நாராயணனின் அருளால் தோல்வி அடைந்தன. இப்போதும் தோல்வியடையத்தான் போகின்றன. தந்தை கூறியபடி நஞ்சினை எனக்குக் கொடு.... நாராயணன் என்னைக் காப்பாற்றுவார்" என்றான்.

வேறு வழியின்றி கண்களில் கண்ணீர் மல்க அவள் தன் மகனுக்கு நஞ்சைப் புகட்டினாள். ஆனால் நஞ்சினால் அவனை ஒன்றும் செய்ய முடியவில்லை. இதனை அறிந்த இரண்யகசிபு மேலும் கோபம் கொண்டான். "நாராயணன்... நாராயணன் என்று சொல்கிறாயே... உன் நாராயணன் எங்கே இருக்கிறான்....? என்று கேட்டான்.

அதற்குப் பிரகலாதன், "தந்தையே! என் நாராயணன் தூணிலும் இருப்பார். சிறு துரும்பிலும் இருப்பார். எங்கும் நிறைந்திருப்பார்" என்றான்.

"அப்படியென்றால் இந்தத் தூணில் உன் நாராயணனைக் காட்டு பார்க்கலாம்" என்று சொல்லி அருகிலிருந்த தூணைத் தன் காலால் எட்டி உதைத்தான் இரண்யகசிபு. அத்தூணில் இருந்து தோன்றிய நரசிங்க அவதாரம் இரண்ய கசிபுவைக் கொன்று முடித்தது.

மூன்று உலகங்களையும் தவ மகிமையால் வென்ற இரண்யகசிபு, தேவர்களை வேலைக்காரர்களைப் போல் நடத்தினான். ஆனால் இவையெல்லாம் அவனுக்கு ஆபத்தைக் கொண்டு வரவில்லை. தெய்வத்தின் பெயரை உச்சரிக்கக் கூடாது என்று கூறிய துர்க்குணம் காரணமாகவே அவன் அழிய நேரிட்டது. தெய்வத்தால் எல்லாச் சிறப்புகளையும் பெற்றுக் கொண்டு தெய்வத்தையே நிந்தனை செய்தால் அதற்குப் பிராயச்சித்தம் உண்டா...? என்பதைச் சிந்தித்துப் பாருங்கள். ஆகவே தெய்வ நிந்தனை என்னும் துர்க்குணத்தை அறவே நீக்க வேண்டும்.



**பரமஹம்ஸ ஸ்ரீமத் பரத்வாஜ் ஸ்வாமிகள்**

# வாசகர் திருமுகம்

## வங்கியின் செயற்பாட்டை இலகுபடுத்துவார்களா?

ஒருவர் வங்கியில் பணத்தை வைப்பில் இடுவதற்கோ அல்லது பெற்றுக்கொள்வதற்கோ செல்லும் போது ஆள் அடையாள அட்டை, வங்கிக்கணக்குப் புத்தகம் என்பவற்றைக் கொண்டு செல்ல வேண்டியது அவசியமாகும். ஒருவர் வங்கியில் கடன் பெற முயற்சிக்கும் போதும் அதற்குரிய ஆவணங்களுடன் நம்பகமான இரண்டு சாட்சிகளுடனும் போவது வங்கியின் விதிமுறையாகும். கடன் பெற்றவர் கடனை முழுமையாகவும் முறையாகவும் செலுத்தத் தவறும் பட்சத்தில் அதற்குப் பொறுப்புக் கூற வேண்டியது அந்த இருவர் மட்டுமே.

இந்த விடயத்தில் உற்றார், உறவினர்கள், சகோதரர்கள் யாருக்கும் தார்மீகப் பொறுப்பு ஏதும் இல்லை. மனிதாபிமான அடிப்படையில் இச் செயல்களில் இருந்து விடுவிப்பது சம்பந்தப்பட்டவரின் உறவினர்களின் மனநிலையைப் பொறுத்த ஒன்று, யாரையும் கட்டாயப்படுத்த முடியாது.

நான் எனது பெயரில் நெல் சந்தைப்படுத்தும் சபைக்கு கொடுத்த நெல்லிற்கான பணத்தைப் பெற்றுக் கொள்வதற்கு கடந்த 23.03.2013 அன்று கிளிநொச்சியில் இயங்கிவரும் அரச முதன்மை வங்கிகளில் ஒன்றின் கிளைக்குச் சென்றேன். அன்று பணம் தர முடியாது என்றும் 25.03.2013 அன்று வந்து பணத்தை பெற்று கொள்ளுமாறும் கூறினார்கள். திங்களன்று பல மைல்கள் தூரம் துவிச்சக்கரவண்டியில் சென்று உரிய வங்கி ஊழியரை அணுகிய போது நீங்கள் இப்பணத்தை எடுப்பதற்கு உங்கள் மகள் அல்லது மருமகனின் அடையாள அட்டை இலக்கத்தைக் கொண்டு வரவேண்டுமெனக் கூறினார்கள்.

எனது பெயரில் உள்ள பணத்தை எடுப்பதற்கு மகன் அல்லது மருமகளின் அடையாள அட்டை ஏன்? வங்கிகள் வாடிக்கையாளரை இவ்வாறு அலைக் கழிக்கலாமா?

**ப.யேசுபாதம்,** வட்டக்கச்சி.

## சங்கம வீதியை புனரமைக்க பிரதேச சபை நடவடிக்கை எடுக்குமா?

கோப்பாய் மாதா கோயில் சங்கம வீதி சிறிது தூரம் புனரமைக்கப்பட்டு கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகிறது. இந்த வீதி, கோப்பாய் வலி. கிழக்கு பிரதேச சபைக்குரிய வீதியாகும். இவ் வீதி பருத்தித்துறை வீதி, இராஜவீதியை இணைக்கும் பிரதான வீதியாகும். இந்த வீதி பல ஆண்டு காலம் புனரமைக்கப்படாமையினால் குன்றும் குழியுமாக உள்ளது. மழைகாலங்களில் வெள்ளம் நிரம்பி வழிகின்றது.

குறிப்பாக 2012 ஆம் ஆண்டு சங்கம வீதியின் சிறிய பகுதி புனரமைக்கப்பட்டது. புனரமைக்கப்பட்ட பகுதிக்கு சிறிது தூரம் அப்பால் வெள்ளம் பரந்து காணப்படுகின்றது.

இவ் வீதியை முழுமையாகப் புனரமைக்க பல தடவைகள் கோரியும் பிரதேச சபை கண்டும் காணாமல் இருக்கிறது. இவ் வீதியில் கழிவுப் பொருள்கள், குப்பைகள் இருந்தாலும் இப்பிரதேச சபை நடவடிக்கை எடுப்பதாக இல்லை. வீதி விளக்கு கள் கூட பொருத்தப்படவில்லை. வலி. கிழக்குப் பிரதேச சபை விரைவாக இவ்வீதியை புனரமைக்க நடவடிக்கை எடுப்பார்களா?

**முகுந்தன், கோப்பாய்**

## பிறப்பு என்பது ஆரம்பமல்ல! இறப்பு என்பது முடிவும் அல்ல!

இலங்கையில் தமிழர்களின் வாழ்வே கேள்விக்குறியாக உள்ளபோது, அவர்களது கண்ணீரைத் துடைக்கும் உதயன் ஊடாக எனது துயர்துடைப்புப் பணியைத் தொடர விரும்புகின்றேன். ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வருவரோ மாநிலத்தீர் என்று ஔவை சொல்லியிருக்கிறார்.

தெய்வ சங்கற்பமாக நாம் தொடர்ந்தும் துன்பங்களை அனுபவித்து வருகிறோம். எமது தாய்ப்பாசம், தந்தைப்பாசம், சகோதர பாசம், நண்பர்கள் நேசம் என்பவற்றால் எமது கண்ணீர் இன்னும் குறையவில்லை. ஆனால் அது குறைய வேண்டும்.

பிறப்பு என்பது ஆரம்பமல்ல, ஒருவருடைய சாதகத்தைப் பார்த்து அவருக்கு எப்பேர்ப்பட்ட குழந்தைகள் என்ன காலத்தில் பிறந்து என்ன காலத்தில் இறக்கும் என்று கூறிவிடலாம். எனவே "பிறப்பு" என்பது ஆரம்பம் அல்ல என்று விளங்குகிறது. அது போல் இறப்பு என்பது முடிவும் அல்ல. இந்தப் பிறவியல் செய்த புண்ணிய பாவங்களுக்கு எற்ப அடுத்த பிறவி கிடைக்கிறது. அப்போது முன்னைய உடலில் செய்த பாவ புண்ணியங்கள் ஞாபகத்துக்கு வருவதில்லை. ஆயிரத்தில், இலட்சத்தில் ஒருவர் இறப்பு அடையாமல் இறைவனிடம் சேருகின்றார்கள். அவ்வாறான ஒரு நிலையை அடைவதே மானிடப் பிறவியின் நோக்கமாகும்.

எனவே இறந்தவர்களின் துன்பங்களை எண்ணி எண்ணி அழுவதை விட்டு விட்டு உலகில் எமக்கென உள்ள கடமைகளை இனிது ஆற்றி வருவோமாக. அதுவே இறந்து போனவர்களுக்கு நாம் செய்யும் உதவியாகும். அவர்களின் கனவும் ஒரு நாள் நனவாகும். அதுவரை பொறுத்திருப்போம்.

**சி.ஜெயகணேசன்,** சாவகச்சேரி.

## இறை வழிபாட்டின் மூலம் உள நலத்தைப் பேணலாம்

போரின் பாதிப்புக்களிலிருந்து விடுபடுவதற்கு மேற்கொள்ள வேண்டியதென்ன? ஒரு புறம்உளநலச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற போதிலும் அநேக மக்களுக்கு அத்தகைய வாய்ப்புகள் கிடைப்பதில்லை. முக்கியமாக போர் காரணமாக தமது உறவுகளையும், உடைமைகளையும் இழந்தவர்கள் அதன் காரணமான பாதிப்பினை இலகுவில் மறக்க மாட்டார். அவற்றை மறப்பதற்கான ஒரே வழி இறை வழிபாடு ஆகும்.

இறை வழிபாட்டுக்குப் பிரதானம் திருமுறை ஓதுதல். திருமுறைப் பாடல்களை எல்லோரும் சேர்ந்து உரத்த குரலில் ஓதும்போது அல்லது செவிமடுக்கும்போது கடவுள் நம்பிக்கை உண்டாகும். அச்ச உணர்வு அகலும், இதய அழுத்தம் நீங்கும், இயல்பு நிலை உண்டாகும். இத்தகைய திருமுறை ஓதுதல் திருக் கோயில்களிலோ, அல்லது வசதியான ஒரு பொது இடத்திலோ மேற்கொள்ளப்படலாம்.

திருமுறை ஓதிய பின்னர், அங்குள்ளவர்கள் மாறி மாறி நற்சிந்தனை சொல்ல வேண்டும். அதன் பின்னர் எல்லோரும் அமைதியாக அமர்ந்து தியானம் செய்தல் வேண்டும்.


இந்த முறை தினம் ஒரு வேளை அல்லது வாரத்தில் ஒரு நாளாவது செய்து வந்தால் மக்களின் மனநோய் தானாகவே தணிவடையும்.

இதற்கெல்லாம் வைத்தியர்கள் உளவியலாளர்கள் அவசியமில்லை. வைத்திய நாதரான சிவனே உண்மையான வைத்தியர்.

**க.மகேசன்,** நல்லூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர்கள் மணம் பரப்புவது எப்படி?



எத்தனையோ செடிகளைப் பார்க்கிறோம். எத்தனையோ மலர்கள். ஒவ்வொன்றும் ஒரு விதம். அந்த மலர்களின் அமைப்பு, மென்மை, அழகு ஆகியவை நம்மை வியக்க வைக்கின்றன. சில செடிகளின் மலர்கள் என்று நினைப்பது உண்மையில் மலர்களாக இருக்காது. சில செடிகளில் வெண்ணிற உறைகளில் இருந்து எட்டிப் பார்ப்பவை மலர்களே அல்ல. மலர் போலத் தோற்றமளிக்கும் போலிகள்! சில செடிகளின் வண்ண இலைகளே மலர்கள் போல் காட்சியளிக்கும்.

மலர்கள் இல்லாதவற்றை மலர்கள் என்று எண்ணுகிறோம். சில செடிகளில் மலர்களை நம்மால் அடையாளம் தெரிந்துகொள்ள முடிவதில்லை. புற்களின் நுனியில் உள்ள சிறுதுணுக்குகள் புற்களின் மலர்கள்தான்! சில தானியங்களின் இளங்கதிர்களே அவற்றின் மலர்கள்.

பூந்தாதையோ, விதைகளையோ அல்லது இரண்டையுமே உருவாக்கும் தொகுதியே மலர்களாகும். விதைகளை உடைய தாவரத்திலேயே மலர்கள் உள்ளன. விதைகள் உருவாகுவதற்குக் காரணமாக உள்ள தாவரத்தின் பாகங்களே மலர்கள் என்று சொல்லலாம்.

மகரந்தச் சேர்க்கை புரிய உதவும் பூச்சியினங்களைக் கவர்ந்திழுக்க, பூக்கள் நறுமண வலையை வீசுகின்றன. பூவிதழ்களிலேயே வாசனை தரும் மிகச் சிறிய துகள்கள் உள்ளன. அவையே நறுமணத்தை ஏற்படுத்துகின்றன. பூச்சிகளை மகரந்தம் இருக்கும் இடத்துக்கு அழைத்துச் செல்லும் வழிகாட்டியே நறுமணம் என்கிறார்கள் தாவரவியல் நிபுணர்கள்.

சில மலர்களின் இதழ்களில் உள்ள ஒருவித எண்ணெய், நறுமணத்தை உண்டு பண்ணுகிறது. அந்த எண்ணெயை தாவரங்கள் தங்கள் வளர்ச்சியின்போது உற்பத்தி செய்திருக்க வேண்டும். மிகச் சிக்கலான அப்பொருள், நடைமுறையில் உருக்குலைந்தோ, சிதைந்தோ எண்ணெயாக மாறி காற்றிலோ, வெயிலிலோ ஆவியாகி நறுமணத்தை வெளியிடுகிறது.

எல்லா மலர்களின் நறுமணமும் ஒரேவிதமாக இருப்பதில்லை. சிலவற்றை நாம் விரும்புவோம். சில நமக்குப் பிடிக்காது. ஆனால் பூச்சியினங்களுக்கு ஒவ்வொரு நறுமணமும் நன்றாக நினைவில் இருக்கும். தங்களுக்கு விருப்பமான நறுமணத்தை அவை அறிந்திருக்கும்.

# அன்பை பகிர்வோம்



வாழ்க்கைக் கடலில் மிதந்திடும் வாழ்வில்
உறவுகளில் பிணைத்திருப்பது அன்பு மட்டுமே
அன்பு அது ஆழமானது, ஆத்மார்த்தமானது
கொடுப்பதும் பெறுவதும் ஒரு சுகம்

உறவுகள் மாறிடினும் கவலைகள் மீறிடினும்
கண்ணீரில் களிப்பூட்டுவது அன்பு மட்டுமே
மாற்றமும் மாறிடினும் மானிடமும் மாண்டிடினும்
உயிர்ப்பூட்டுவது என்றும் அன்பு மட்டுமே

தருமமும் தவறிடினும் சத்தியமும் சாய்ந்திடினும்
காதல் கசந்திடினும் கானல் தணிந்திடினும்
கார்மேகம் கலைந்திடினும் காரிருள் சூழ்ந்திடினும்
மாறாததும் நிலைத்திருப்பதும் அன்பு மட்டுமே

பாதாளம் வரை பாயும் பணத்திலும்
பரலோகம் வரை சேர்க்கும் அன்பே
பாரினில் அவசியமானது பகிரப்பட வேண்டியது
பரம தேவனை பாலக யேசுவாய்

நாம் போற்றும் இப் பாரதனில்
பணிந்து போற்றும் பாலகர் நாமும்
பகிர்ந்திடுவோம் அன்புதனை
சுவைத்திடுவோம் அன்புதனை
மாற்றிடுவோம் உலகினையே
மாற்றிடுவோம் வாழ்வினையே

பீ.மதுசனா, தரம் 8,
யா/இளவாலை கன்னியர் மடம்
மகாவித்தியாலயம்.

# உண்மையான குற்றவாளி



ருத்ரபுரியின் மன்னன் ஜெயபாலன் ரூபமதி என்ற இளவரசியை மணம் புரிந்திருந்தான். ரூபமதி மிக அழகானவள். அவர்களுக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது. அதற்கு சக்திபாலன் என்று பெயரிட்டு சீராட்டி வளர்த்தனர்.

சக்திபாலனுக்கு பத்து வயது நிரம்பியபோது, ஒருநாள் மன்னன் ஜெயபாலன் தன் வீரர்களுடன் வேட்டைக்குச் சென்றான். அப்போது, திடீரென புயல் வீச ஆரம்பித்தது. அதைக் கண்டு கலவரம் அடைந்த குதிரைகள் தாங்கள் சுமந்து வந்த வீரர்களுடன் தறிகெட்டு மிரண்டு ஓடின. அவ்வாறு ஓடியதில், மன்னன் மற்றவர்களிடம் இருந்து பிரிந்து போனான். அவனுடைய குதிரை தாறுமாறாக ஓடி ஒரு காட்டாற்றை நெருங்கியபோது, மன்னன் நிலைதவறி குதிரையிலிருந்து கீழே விழுந்து காயமுற்றான். மன்னனுக்கு உதவி செய்ய அருகில் யாருமே இல்லை. அப்போது, காட்டாற்றின் அக்கரையில் சில குடிசைகள் தென்பட்டதைப் பார்த்து, மன்னன் அக்கரையை அடைய விரும்பி ஆற்றில் இறங்கினான். ஆனால் பாதி ஆற்றைக் கடக்கும் போது, மன்னனுக்கு நினைவு தவறியது.

மறுபடியும் கண் விழித்துப் பார்த்த போது, ஒரு வீட்டில் தான் இருப்பதைக் கண்டான். அவன் அருகில் மிக அழகான ஒரு பெண் அமர்ந்திருந்தாள். அவளைப் பார்த்ததுமே அவள் பழங்குடி இனத்தைச் சேர்ந்தவள் என்று ஜெயபாலனுக்குத் தெரிந்தது. அவன் கண் விழித்ததைக் கண்ட அவள் உற்சாகத்துடன், ''நல்ல வேளை! நீங்கள் பிழைத்துக் கொண்டீர்கள். நான்கு நாள்களாக நான் இரவு பகலாக உங்களுக்குச் சிகிச்சை அளித்து வருகிறேன்.

ஆற்று நீரில் சுய நினைவின்றி அடித்துச் செல்லப்பட்ட உங்களை, நான் காப்பாற்றி என் வீட்டிற்கு கொண்டு வந்தேன். நான் 'பக்கீரா' இனத்து மக்களின் ராஜ வைத்தியரின் பெண். என் பெயர் மஞ்சரி! நீங்கள் அபாயத்திலிருந்து தப்பி விட்டீர்கள். ஆனால், நீங்கள் பூரண குணமடைய இன்னும் ஒருமாதம் ஆகும்!. ''நீங்கள் யாரென்று தெரியாததால், உங்கள் உறவினர்களுக்கு எங்களால் தகவல் அனுப்ப முடியவில்லை!'' என்றாள்.

அப்போது, அங்கு வந்த மஞ்சரியின் தந்தை "ஐயா! நீங்கள் யாரென்று தெரியவில்லை. ஆனால், உயிருக்கு வந்த ஆபத்திலிருந்து தப்பி விட்டீர்கள்!" என்றார். ''உங்களுக்கு மிகவும் நன்றி, வைத்தியரே!'' என்றான் ஜெயபாலன்.




தான் மன்னன் என்ற உண்மையைக் கூறாமல், தான் ஒரு வியாபாரியின் மகன் என்று ஜெயபாலன் தெரிவித்துக் கொண்டான். அவன் காயம் முற்றிலும் குணமாகும் வரை குடிசையிலேயே ஒரு மாதம் தங்க நேரிட்டது. அந்தக் காலத்தில், மஞ்சரி தனக்குச் செய்த பணிவிடையைக் கண்டு ஜெயபாலன் நெகிழ்ந்து போனான். நாளாக, நாளாக மஞ்சரி தன் மீது கொண்டுள்ள பரிவு காதலாக மாறியதைக் கண்டான்.

ஜெயபாலன் பூரண குணமடைந்த பிறகு அவர்களிடம் விடைபெற்றுக் கொள்ள எண்ணினான். மஞ்சரியின் அருகிலேயே எக்காலமும் இருக்க விரும்பினாலும், தனக்கு நாட்டை ஆளும் பொறுப்பு இருப்பதால் அவ்வாறு செய்ய முடியவில்லை. கடைசியில் துணிச்சலை வரவழைத்துக் கொண்டு, ''மஞ்சரி, நான் இதுநாள் வரை ஓர் உண்மையை மறைத்து விட்டேன். எனக்குத் திருமணமாகி ஒரு பிள்ளையும் இருக்கிறது. நான் அவர்களிடம் மீண்டும் செல்ல வேண்டும்!'' என்றான்.

(தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Lukshmee Transport



* 9 தொன் சுமை ஏற்றக் கூடிய TATA லொறி வாடகைக்கு விடப்படும்.
* 38 ஆசனங்கள் உடைய அரைச்சொகுசு TATA BUS வாடகைக்கு விடப்படும்.



பாடசாலைகள், கல்விநிறுவனங்கள், தொண்டுநிறுவனங்களுக்கு விசேட விலை கழிவு வழங்கப்படும்.

T.P :- 021 567 0256

105, இராஜ வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

(C/8292)

# Taste of Jaffna Restaurant

101, Main Street, Jaffna.

Tast of Jaffna Restaurant இன் மூன்றாவது ஆண்டு நிறைவையொட்டி அனைத்து உணவு வகைகளையும் மிகக் குறைந்த விலையில் வழங்குகின்றோம்

| | | |
|---|---|---|
| கோழி சாப்பாடு பார்சல் | 170.00 | (சாதாரணம்) |
| | 220.00 | (விசேடம்) |
| மரக்கறி சாப்பாடு பார்சல் | 110.00 | (சாதாரணம்) |
| | 150.00 | (விசேடம்) |
| மீன் சாப்பாடு பார்சல் | 150.00 | (சாதாரணம்) |
| | 220.00 | (விசேடம்) |
| கோழி பிரியாணி பார்சல் | 240.00 | (சாதாரணம்) |
| | 350.00 | (விசேடம்) |
| மரக்கறி பிரியாணி பார்சல் | 170.00 | (சாதாரணம்) |
| | 220.00 | (விசேடம்) |
| சிக்கன் பிறைட் றைஸ் பார்சல் | 200.00 | (சாதாரணம்) |
| | 240.00 | (விசேடம்) |
| மரக்கறி பிறைட் றைஸ் பார்சல் | 140.00 | (சாதாரணம்) |
| | 170.00 | (விசேடம்) |



உங்கள் இல்லங்களில் நடைபெறும் அனைத்து வகையான நிகழ்வுகளுக்கும் Buffet முறையில் குறைந்த விலையுடன் உணவு கொண்டு வந்து பரிமாறப்படும்



**Buffet Menu 01**
Steamed Rice
Chicken Curry
Brinjal Churtney
Dhal Curry
Tomato Onion Salad
Boiled Egg
Dessert : Ice Cream
Price 290+10% Service Charge

**Buffet Menu 02**
Special Biriyani Rice
Chicken Curry
Brinjal Churtney
Potato Tempered
Tomato Onion Salad
Boiled Egg
Dessert: Ice Cream
Price 340+10% Service Charge

Hot line: 021 222 1322

(C/8283)(10,6,7)

www.clc.lk



# இம்முறை
## இப் புது வருடத்திலும் எம்முடன் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளும் உங்களுக்கு
# அதிக வட்டியுடன்
# மனம் கவரும் பரிசுகள்

இத் தமிழ் சிங்களப் புதுவருட சுபவேளையில் கொமர்ஷல் லீசிங் & பினான்ஸ் உடன் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொண்டு உங்களது வைப்பிற்கு அதிகூடிய வட்டியுடன் பெறுமதிமிக்க புதுவருட பரிசுகளைப் பெற்று மகிழுங்கள்.



| தவணைக்காலம் | மாதாந்தம் | | வருடாந்தம் | | முதிர்வுகாலத்தில் | |
|---|---|---|---|---|---|---|
| மாதம் | உரிய வட்டி | வ.வ.வி | உரிய வட்டி | வ.வ.வி. | உரிய வட்டி | வ.வ.வி. |
| 12 | - | - | - | - | 14.00% | 14.00% |
| 24 | 14.50% | 15.50% | 14.75% | 14.75% | 14.75% | 13.80% |
| 36 | 14.50% | 15.50% | 14.75% | 14.75% | 14.75% | 12.99% |
| 48 | 15.00% | 16.08% | 15.25% | 15.25% | 15.25% | 12.64% |
| 60 | 15.00% | 16.08% | 15.25% | 15.25% | 15.25% | 12.00% |

சிரேஷ்ட பிரஜைகளுக்காக (55 வயதுக்கு மேற்பட்ட) 1% மேலதிக வட்டி

CLC
கொமர்ஷல்
லீசிங் & பினான்ஸ்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

After O/L
edexcel | UNIVERSITY OF WOLVERHAMPTON

யாழ் நகரில் சவால்களை வெல்லும்
சர்வதேச கல்வித் தகைமைகள்



பட்டப்படிப்புக்கான
ஓர் அடிப்படை பாடநெறி

4 Certificates
with Communication Skills

Duration
3 Months, Full time

English + IT
Over 300 hrs Practical Training

IBP
Intensive Bridging Programe

www.bcas.lk

ISO 9001:2008 CERTIFIED | 14 Years of Trust & Excellence in Higher Education

16, Point Pedro Road, Jaffna.
021 221 9910 / 077 710 2131

(C/8291)
BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES
Building Careers - Transforming Lives
Maxo Ads

Colombo | Kandy | Batticaloa | Kurunegala | Jaffna | Qatar



யாழ்.நகர மத்தியில்
"உதயன் விருந்தினர் விடுதி"




- குடும்ப அறை வசதி உண்டு.
- குளிரூட்டப்பட்ட அறைகள் மற்றும் குளிரூட்டப்படாத அறைகள்.
- யாழ்ப்பாண உணவு வகைகள் தயாரித்து தரப்படும்.
- பரந்த வாகன நிறுத்தூரிட வசதி.
- காலை உணவுடன் கூடிய அறை வசதி.

குழுமப் பதிவுகளுக்கு விசேட கழிவு உண்டு.

இன்றே ஒருமுறை வருகை தந்து பாருங்கள்

12, சிவகுருநாதர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
(2/8293)(8.94.76)
021 222 2330
021 567 7603


# மரண அறிவித்தல்

## தருமலிங்கம் கணேசலிங்கம் [குட்டி]



சுளானை, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தருமலிங்கம் கணேசலிங்கம் (குட்டி) 06.04.2013 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தருமலிங்கம்-சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நடேசு - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மருமகனும் மங்கையர்க்கரசியின் (மாலா-லண்டன்) அன்புக் கணவரும், சங்கர் (அசோக்-லண்டன்), மீரா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான தம்பிநாயகம், தங்கராசா, தணிகாசலம் மற்றும் தியாகராசா, சிவலிங்கம்(லண்டன்), பாலசுப்பிரமணியம்(ராசா), சிவமணி, நவமணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சதீஸ் (லண்டன்), வனிதா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், அஸ்வின் (லண்டன்), ரிஷி(லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சுளானையில் உள்ள அவரது இல்லத்தில் இன்று (10.04.2013) புதன்கிழமை மு.ப.11.00மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சுளானை,சுன்னாகம்.
077 359 2850/ 077 482 2747
(35850)(5.6.7)
குடும்பத்தினர்.

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 1949*10*22
உதிர்வு 2011*04*05

அமரர்
## இ.பி. ஜெயநாயகம்

திதி: துதியை (12.04.2013)

ஈராண்டுகள் கழிந்தாலும் உம்
இன்முகம் நினைவாக ஏங்கித்
தவிக்கின்றோம் வலக்கரம் இழந்து
நிலைதடுமாறி நிற்கும் நாம்
எப்போ காண்போம் இனி

கொழும்பு-06. குடும்பத்தினர்.
(35869)(10.6.7)

# மரண அறிவித்தல்

## முருகுப்பிள்ளை வேலாயுதம்பிள்ளை

(யாழ். பல்கலைக்கழக ஆய்வுகூட ஊழியர்)



அராலி வடக்கு, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், அராலி வடக்கு, குலனையூரை வசிப்பிடமாகவும் கொண்ட முருகுப்பிள்ளை வேலாயுதம்பிள்ளை நேற்று (09.04.2013) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகுப்பிள்ளை-இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், சதாசிவம்-ஞானம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், கோகிலராணி (ஆசிரியர்-யா/அராலி இந்துக் கல்லூரி) அன்புக்கணவரும், வாகீசன் (பல்கலைக்கழக ஊழியர்), ஹம்சானந்தி, வேணுசன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், கோபாலகிருஷ்ணன் (முன்னாள் பல்கலைக்கழக நூலக உதவியாளர்), சற்குணதேவி, சறோஜினிதேவி, தனபாலசிங்கம் (சங்கானை, வைத்தியசாலை), உதயகுமார் (பிரான்ஸ்), விஜயகுமார் (லண்டன்), செல்வராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், பத்மநாதன், காலஞ்சென்ற கோபாலநாதன் மற்றும் பேரின்பநாதன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.04.2013) புதன்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அராலி வடக்கு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குலனையூர், அராலி வடக்கு.
0214916691.
(35854)(10.6.7)
தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Cargills food city
புது வருட குறைந்த விலை
சவால்
எந்தவொரு சுப்பர் மார்க்கெட்டும் எமது விலைகளைச் சமப்படுத்த முடியாது. எம்மை விடக் குறைவாக இருப்பின், நாமும் தருவோம் அதே விலைக்கே!
10% தள்ளுபடி
Sampath Cards
வெள்ளைச் சீனி
இப்போது 1Kg ரூ. 97/-
சிவப்பு பருப்பு
இப்போது 1Kg ரூ. 144/-
சம்பா அரிசி
இப்போது 1Kg ரூ. 65/-
வெள்ளை பச்சை அரிசி
இப்போது 1Kg ரூ. 50/-
சிவப்பு பச்சை அரிசி
இப்போது 1Kg ரூ. 50/-
இச்சலுகை ஏப்ரல் 5 முதல் 12 வரை மட்டுமே.
அங்கர் பால்மா
சேமிப்பு ரூ. 15/-
இப்போது ரூ. 310/- 400g
அங்கர் பால்மா
சேமிப்பு ரூ. 40/-
இப்போது ரூ. 770/- 1Kg
நெஸ்டொமோல்ட்
சேமிப்பு ரூ. 10/-
இப்போது ரூ. 245/- 400g
அஸ்ட்ரா பற் ஸ்பிரெட்
சேமிப்பு ரூ. 15/-
இப்போது ரூ. 150/- 250g
செவன்ஸ்டார் கோதுமை மா
சேமிப்பு ரூ. 12/-
இப்போது ரூ. 95/- 1Kg
காகில்ஸ் மெகரல்
சேமிப்பு ரூ. 17/-
இப்போது ரூ. 168/- 400g
இச்சலுகை ஏப்ரல் 5 முதல் 30 வரை மட்டுமே.
பெரிய வெங்காயம்
கரட்
தக்காளி
கோவா
25% தள்ளுபடி
இச்சலுகை ஏப்ரல் 5 முதல் 12 வரை மட்டுமே.
Cargills food city
வீடு செல்லும் போது


பஜாஜ்
Discover 125 ST
விலை ரூபா 210,375/-
தனியாகத் தெரிந்திடும் தோற்றம். தனித்துவமிக்க செயற்பாடு.
டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்
மின்னஞ்சல்: info@dpmco.com இணையதளம்: www.dpmco.com
தொலைபேசி: 011-4700600 தொலைநகல்: 011-4700677
விஷேட கொடுப்பனவு!
இலவசம்!
2013 ஏப்ரல் 1 முதல் 30 வரை வழங்கப்படும்
AMERICAN EXPRESS
COMMERCIAL BANK
இலகு கட்டண முறை